www.tamilarangam.net

# சமர்

# samar















www.tamilarangam.net

இனவெறி பாசிச சிங்கள இராணுவத்தின்
யாழ் பாதை திறப்பு நடவடிக்கை
புலிகளுக்கு வைக்கப்பட்ட ஆப்பு!

*பக்கம் 08*

சந்தர்ப்பவாத முதலாளித்துவ வாதிகளின்
வரலாற்றுத் திரிபு!

*பக்கம் 14*

மக்களுக்கு எதிரான
*பழைய அரசியல் பாதையில்..*
"தமிழீழ மக்கள் கட்சி"

*பக்கம் 26*

ஆயிரம் கல்வெட்டு வெளியிட்டாலும்
ஒடுக்கப்பட்ட மக்களின்
வர்க்கப்போரை யாராலும்
சேறடிக்க முடியாது!

*பக்கம் 32*

பால் மணம் மறவாத சிறுமி மீதான
பாலியல் வன்முறைக் கொலையின்
பின்னணிக் குற்றவாளிகள் யார்?

*பக்கம் 45*

வெள்ளைத் திமிர்
என்ற பெயரில் கற்பிக்கும்
கருப்புத் திமிர்!

*பக்கம் 56*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்களின் விடுதலைக்கான பாதையில்..

தனிமனித தேவைகளில் இருந்து புலம் பெயர், மற்றும் நாட்டில் சிறுசஞ்சைகள், பத்திரிகைகள் உருவான போது

(இதற்க்குள் சில விதிவிலக்குகள் இருந்த போதும் பெரும்பாலானவைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதியாக வரவில்லை) சமர் மக்களின் பிரச்சனை, அதற்க்கான தீர்வு, அதற்கான கோட்பாடுகளை விஞ்ஞான பூர்வமாக நிறுவுவது, போராடுவது என 25 இதழ்களை வெளியிட்டுள்ளோம்.

ஆம், மக்களின் அவலங்கள் எல்லையில்லாதவை. இயற்க்கையை அழிப்பவன் தன்னைச் சுற்றி பூங்கா அமைத்தபடி மக்கள் இயற்க்கையுடன் ஒன்றிணைந்த வாழ்க்கையை சிதைத்து மக்களை இயற்க்கையின் சிதைவால் கொல்கின்றான். நீரை நஞ்சாக்கியவன் தனக்கு சுத்தமான நீரை உற்பத்தி செய்து குடித்தபடி மக்களை விடாயிலும் நஞ்சிலும் கொல்கின்றான்.



பசியிருக்கே பசி அது எல்லோருக்கும் பொதுவானதுதான். ஆனால் பசி தெரியாது கூத்தும் கும்மளமாகவும் வாழும் ஒரு பகுதியும், பசியே வாழ்க்கையாக அதுவே எல்லாமாக வாழும் சமூகத்தின் ஒரு பெரும்பகுதியின் ஒரே குரலாக நாம் போராடவேண்டியுள்ளது. பசியால் பீடித்துப் போய் அதுவே தொற்று நோய்யாக்கப்பட்டு அடிமையாக சேவகம் செய்யவும், பார்த்தே வீணி வடிய சிறுமைப்படுத்திய வாழ்க்கையை பண்பாக சனநாயமாக விளக்கும் நடைமுறையாக மாற்றியுள்ளது.

உழையாது வசதியாக வாழ அவனால் உழைப்பவன் மீது திணிக்கப்பட்ட சாதிய ஒழுங்கும், அதை கடக்கும் போராட்டம் மீது கட்டியமைக்கப்பட்ட பண்பாடுகள், கலாசாராங்கள் ஒடுக்குமுறைகள் உழைக்கும் மக்களின் உழைப்பை சுரண்டி திமிர் எடுத்தவன் தன்னை நக்கி வாழ இந்துமதத்தை உருவாக்கினான் உயர் சாதியின் முன் கூணிக்குறுகி உணவுக்காக கையேந்தியும், குடிக்க நீர் கேட்டு கருணைக்காக ஏங்க வைத்தும், குற்றம் இன்றி வாழ சேவகம் செய்தும் ஒரு நாயாக வாழக் கோரும் பண்பாடுகள் கலாசாரங்கள், ஒடுக்கு முறைகளை மார்க்சியம் மட்டும்தான் புதிய பண்பாட்டால், பொருளாதார அமைப்பால் மாற்றீடு செய்து ஒழிக்கப் போராடுகின்றது. இது நிலவும் பார்ப்பாணிய நிலப்பிரப்புத்துவ, பூர்சுவா ஏகாதிபத்திய பண்பாட்டின் மீது உயரிய பாட்டாளி வர்க்க பண்பாட்டால் கவிழ்ப்பதன் மூலம் சாதிகடந்த ஒன்று இணைவை சாதி கடந்து ஒருங்கிணைத்து போராடுகின்றது. இதற்க்கு வெளியில் எந்தத் தத்துவமும் சாதிகடந்த புதிய பண்பாட்டை உழைப்போரின் ஆட்சியை, தீண்டத் தகாதோர் பொருளாதார பலத்தை கோரிப் போராடவில்லை புலம் பெயர் சமுகத்தில் இருக்கு எம்மவர்களின் சாதியங்கள் இப் பிரிவுகளுக்கு பொருளாதார மேம்பாட்டால் இனம் காணமுடியாத வகையில் மாற்றியுள்ளது. இது எமது அடுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமுறையில் அறவே அற்று விடும் நிலையை, அப் பிள்ளைகள் இதை மனித உரிமை மீறலாக காண்பது சாதித்தடிப்புள்ள குடும்பங்களில் உள் போராட்டமாக நிம்மதியற்ற சாதிப் புலம்பலாக மாறியுள்ளது. இது அக் குழந்தைகளின் முன் எப்படி ஏற்பட்டது எனின் உயரிய புதிய பண்பாட்டால், புதிய பொருளாதாரத்தால் என எல்லாவற்றாலும் எல்லாத் துறையிலும் நிகழ்ந்துள்ளது. இதுதான் எம் நாட்டில் சாதி ஒழிப்புக்கான நிபந்தனையாக உள்ளது. ஆனால் இங்கு மேவிய பொளாதார சமூக அமைப்பு எம் நாடுகளில் சாதியமற்ற புதிய உலக ஒழுங்கு இப் பணியை தணித்து பாட்டாளி வர்க்கத்திடம் மட்டும் கழுத்தைப் பிடித்து தள்ளியுள்ளது. ஆம் எல்லாக் கோட்பாடுகளும் சாதி ஒழிப்பை வைக்கவில்லை மாறாக சலுகை கோருகின்றன. பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் சாதிஒழிப்பை முரண்பாடின்றி முன்வைனப்பதால் நாம் பாட்டாளி வர்க்கப் போராட்டப் பாதையை முன்னெடுப்பதில் எமது கரங்களை உறுதியுடன் உயர்த்தி முன்னெடுக்கின்றோம்.

பெண் ஆணின் அடிமை என மதங்கள் முதல் ஏகாதிபத்திய பொருளாதார அமைப்பு வரை மீள மீள நிறுவி கோட்பாட்டு உருவக்கத்தை முன்வைக்க, பெண் விடுதலையின் பெயரில் பெண்ணை நிர்வணமாக்கிய வக்கிர உச்சத்தை பெண்ணின் தனிப்பட்ட சனநயாக உரிமையாக்கியது இந்த ஜனநாயக சமூகம். பெண்ணின் உழைப்பைச் சுரண்ட, சுரண்டியதை தனது குழந்தைக்கு வாரிசாக்க, ஆணின் போகத்துக்கும் சுகிப்புக்கும் பெண் மறுப்பின்றி வாழ அவளின் சொத்துரிமையைப் பறித்து அவளை உழைக்கும் வர்க்கமாக மாற்றிய கோட்பாடுகள், நடைமுறைகள், பண்பாடுகள் இச் சமூக சனநயகத்தின் பாதுகப்பில் வாழ்கின்றது. பெண்ணின் விடுதலை என்பது பெண் தனது சுயநிர்ணயத்தை எல்லா வற்றிலும் கையாளும் உரிமையில் தொடங்கி ஒன்று கலத்தல்தான். இது பொருளாதராத்தில் ஆணைச் சாராத மொத்த சமுக வெற்றியில் மட்டும் தான் பெண் தனது விடுதலையை அடைவாள். ஏனெனின் பெண் அடிமைப்படுத்தப்பட்டது என்பது அவளை சுரண்டிவாழவும் அதன் ஊடாக அவளை போகித்து சுகிக்கவும்தான். மார்க்சியம் மட்டும்தான் மொத்த சமூகத்தில் அதில் பெண்ணின் விடுதலைக்கான பொருளாதார விடுதலைக்கு அதை மொத்த சமூகத்தின் விடுதலை ஊடாக சாதிக்க கோருகின்றது. மற்ற எந்தத் தத்துவமும் பெண் சுரண்டப்படுவதை எதிர்க்காத நிலையில் ஆணாதிக்கம் அதன் அச்சாணியில் இருக்க சலுகை கோருவதுதான் நிகழ்கின்றது.

இது போல் சமுகத்தின் அவலங்கள் மீது மார்க்சியம் மட்டும்தான் ஒட்டு மொத்த விடுதலையை, மாற்றை, கட்டுடைப்பை வைப்பதால் மார்க்சியம் மட்டுமே உலக தத்துவத்தில் அதிக எதிர்ப்பை எதிர் கொள்கின்றது. அதே நேரம் இத்தத்துவம்தான் வரலாற்றில் எல்லாவற்றையும் மீறி போராடும் தத்துவமாக மீள மீள உள்ளது. இந்த நிலையில் இவைக்கு எதிரான இந்த சனநாயக உலகத்தின் சனநாயகத்துக்கும் அதன் பிரதிநிதிகளும், எமது கண் சிவக்கும் எதிரியாக கண்கின்றோம். போராடுகின்றோம். வன்முறையைக் கையாள்கின்றோம். ஆம் எம் மரணம்வரை இப்பிரகடனம், போராட்டமும் ஒய்ந்து விடப் போவதில்லை. அடுத்த தலைமுறைக்கு போராடக் கற்றுக்கொடுப்பதும் ஒடுக்கப்பட்டவன் ஆட்சியை நிறுவுவதும், முடியாதவரை எங்கள் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டவனின் போராட்டத்தின் ஒரே ஆயுதமான மார்க்சியம் எந்த அவதூறுகளையும் கடந்து ஆயுதபாணியாகும். அது அம் மக்களை விடுவிக்கும். அதன் பாதையில் சமர் விட்டுக் கொடுக்காத போராட்டத்தை அதன் வர்க்க எதிரிக்கு எதிராக கடந்த காலத்தை விட மேலும் சிறப்பாக போராட உங்கள் ஆதரவுக் கரங்களை, நேரடியான பங்களிப்பை, சேர்ந்து வர்க்க எதிரியை நொருக்க ஒரே குரலாக மாறுவது போராடுவது அவசியமாக உள்ளது.

கடந்த எமது போராட்டப் பாதையில் எம்முடன் இருந்த சிலர் தனிப்பட்ட இந்த வர்க்க சமுதாயத்தில் எதிர்த்து நிற்க முடியாது தமாகவே ஒதுங்கிக் கொண்டனர். ஒருவரை நாம் வெளியேற்ற கருஅழிப்பு விடயம் இருந்தது. ஒரு பாட்டாளி வர்க்கத்தின் பத்திரிகையில் பூர்சுவா வர்க்கத்தின் அர்ப்பத்தனத்தை நியாப்படுத்த முடியாது என்ற நிலையில் வெளியேற்றிய போதும், பின்னால் நாம் இதன் மீதான பூர்சுவா சனநாயகக் கோரிக்கையை இனங் கண்டு வர்க்கப் போராட்டத்தில் இதை உள்ளடக்கப்பட வேண்டும் என்ற நிலையில் நாம் சுயவிமர்சனம் செய்தோம். இருந்த போதும் முன்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியேற்றப்பட்ட நபரை உள்வாங்க முடியாத வகையில் மிக மோசமான பூர்சுவாத்தனத்துக்குள் சென்று ஒரு தரகராக பல மோசடிகளில் ஈடுபட்டு பாரிஸ் தமிழ் சமுகத்தில் எவை எல்லாம் சமூகக் கேவலமானதோ அதுவே அவரின் பிழைப்பாக மாறி இன்று அதற்க்குள்ளும் தலை மறைவாக பலர்தேட ஒளித்து திரிகின்றார். பணம் அதன் குணம் அதற்க்கு எதிரான போராட்டம் இல்லையெனின் எல்லா மனிதப் பண்பாடுகளையும் அழித்துவிடும். இது வரலாற்றில் பலருக்கு நிகழ்துள்ளது.

கடந்த எமது போராட்டத்தில் நாம் சில தவறுகளை இழைத்த போதும் அவைகளை நாம் மக்களின் போராட்ட மார்க்கத்தில் உண்றி நின்றதால் இனம் கண்டு அவைகளைத் திருத்தினோம் திருத்துகின்றோம் திருத்துவோம். இதற்க்கு உங்கள் ஆக்கமான ஒத்துழைப்பு, கருத்துப் பரிமாற்றம், மக்களின் மீதான நேர்மையான போராட்ட குணம்சம் என்பன மேலும் உதவும்.

நாம் எம்மை இன்று நாட்டில் போராட்ட நடைமுறை செயல்தள மாற்றுத் தலைமையாக பிரகடனம் செய்யவில்லை. அதுபோல் மாற்று வேலைத்திட்டம் ஒன்றை அதற்க்காக முன்வைக்க முனைய வில்லை. மாறக வாழும் சமுகத்தில் போராட சில முன்முயற்ச்சிகளை எடுத்தோம். இவை தனிநபர் பூர்சுவா அர்ப்பத்தனங்களால், போராட்டம் மீதான நம்பிக்கையீனங்களால் சிதைந்து போனது. நாம் எழுதுவது போராடுவது அனைத்தும் நாம் ஒரு மாற்றுத் தலைமையாக நடைமுறையில் மண்ணில் போராடத நிலையிலும், அதற்க்காக மட்டுமே நாம் போராடுகின்றோம். மக்களின் நலன், அவர்களின் விடுதலை, மக்களின் துன்பம் என்பதன் மீதான எமது போர்குணாம்சம் அவர்களின் நடை முறைப் போராட்டத்தைக் கட்டியமைக்கப்பட வேண்டிய பணிகளில் சமரின் நோக்கம் என்றும் தீர்க்கமானதும் இறுதியனதுமாகும். இதற்க்காக மட்டுமே எமது எழுத்துக்கள் அனைத்தும் என்பது கேள்விக்கு இடமற்றது.

நாம் படிப்படியாக இந்த இதழில் இருந்து ஒரு முக்கிய மாற்றம் ஒன்றை கையாள்கின்றோம். நாம் எமது பெரும்பாலன கட்டுரைகளில் குறிப்பானவைகளில் இருந்து பொதுவான கோட்பாட்டு உருவாக்கத்தை கட்டியமைத்தோம். இது முழுமையான பலனை கொடுக்கத் தவறியது என்பதை இனம் கண்பதால் கோட்பாட்டு விவதங்களில் பொதுவான தத்துவார்த்த கட்டுரைகளில் குறிப்பானதை விவாதிப்பது என இச் சமர் இதழில் மாற்றத் தொடங்கியுள்ளோம். நடைமுறைச் சம்பவங்கள், அதை ஒட்டிய கோட்பாடுகள் மீது மட்டும் குறிப்பானதில் இருந்து பொதுவானதை வந்தடையும் கட்டுரைகளை சமர் இவ்இதழில் இருந்து மாற்றத் தொடங்கியுள்ளது. இதற்க்கு உங்கள் ஆக்கமான போராட்ட ஒன்றிணைவை அனைத்து தளத்திலும் கோரி சமர் தொடரும் பாதையில் உங்கள் கரங்களை இறுகப்பற்ற எங்கள் கடமையை எம்முடன் பகிர்ந்து கொள்ளும் மக்கள் போராட்டத்தில் நாம் ஒன்று இணைவோம் என பிரகடணம் செய்ய அழைக்கின்றோம்.

✪ ✪ ✪

புலம்பெயர் சமூக இலக்கிய, அரசியலில் சமூக அக்கறை காட்டுவோர் மேலும் மேலும் மாக்சியத்தில் இருந்து அன்னியப்படுவது மட்டுமின்றி, மாக்சியம் மீதும் அதையொட்டிய வர்க்கப் போராட்டம் மீதும் இருட்டடிப்பை மட்டும் நடத்துவதுதன் மூலம் மட்டுமே அரசியலில் உயிர் வாழ முடியும் என்றளவுக்கு மேலும் தம்மை ஜனநயாக விரோதிகளாக அடையாளம் காட்டுகின்றனர். இலக்கியச் சந்திப்புகளில் நடக்கும் விவாதங்கள் மீது மார்க்சிய விவாத்தை தொடங்கினால் அதற்க்கு பல்வேறு காரணம் கூறி தடுத்த போக்கு, இன்று அதற்க்கு வெளியில் மார்க்சிய கருத்துக்கு கருத்துச் சுதந்திரம் எனக் கூறும் சஞ்சிகைகளும் அதன் பாதையில் கால் எடுத்து வைக்க பிரயத்தனம் செய்கின்றன. உயிரோடு வாழ்ந்து கொண்டும், எலும்பும் தசையுமாக வாழ்க்கைப் போராட்டத்தில் மக்கள் நடைமுறையில் தீர்வுகளையும், போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்க, ஜடமாகிப் போன இலக்கிய அரசியல்வாதிகள் எதிர் திசையில் பயணிக்கின்றனர். இது மட்டும் தான் பிரச்சனையற்ற இலக்கியம் செய்யவும், புகழ்தேடவும், முதுகு சொறியவும் முடியும் என்பதை புரிந்து களத்தில் பாய்விரித்துள்ளனர்.

சமுதாயத்தில் ஒரு பிரச்சனை மீதான கட்டுரை, இலக்கியம் யதார்த்ததில் மக்களால் தீர்வுக்குள்ளாகிறது. இதை முடிமறைத்தபடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படைப்பாளியும் கூட தீர்வை இந்த வர்க்க சமுதயத்தில் வைத்தபடி, பிரச்சரத்தையும் செய்தபடி உள்ளதை வர்க்க கண்ணோட்டத்தில் விமர்சிக்கும் போது ஐயகோ! என ஒப்பாரிவைத்து விமர்சிக்கும் சுதந்திரத்தை மாறுக்கின்றனர். இலக்கியம் விமர்சிக்க முடியாத புனிதமான தாகவும், விமர்சிக்க உரிமை உண்டு என்றபடி, அதை விமர்சிக்கும் போது எதிர்த்த படி இலக்கியத்தை கருத்துமுதல்வாதமாக்கின்றனர். இது இன்றைய பொது இலக்கிய கோட்பாட்டு, நடைமுறை வாதமாகி சீரழிகின்றது.

✪ ✪ ✪

அடுத்து மாாக்சியம் மீது கேள்விகள் என பலவிதமான போக்குகள் இன்று மாக்சியத்துக்கு எதிராக கிளம்பியுள்ளன. இதில் ரொக்சியவாதிகள் முதல் பின்நவீனத்துவாதிகள் ஈறாக பண்பியல் வேறுபாட்டுடன் ஓரே மாதிரியான தாக்குதலை நடாத்துகின்றனர். மார்க்சியம் தோல்வியடைந்து விட்டது எனவே அனைத்துக்கும் கருத்து சுதந்திரம் ஊடாக நாம் ஆராய்வு செய்கின்றோம் என தமது வர்க்க நிலையை தக்கவைக்க விளக்கம் கொடுக்கின்றனர்.

பாட்டாளி வர்க்கம் தனது ஆட்சியை முதலாளிகளிடம் இழந்தது என்பது ஒரு வர்க்கப்போராட்ட நிகழ்வு என்பதை மறுத்தபடி, பாட்டாளி வர்க்க ஆட்சிக்குள்ளும், முன்னைய பிந்திய முதலாளித்துவ கூறுகள் தமது ஆட்சிக்கு போராடும் என்ற இயங்கியலை மறுத்தபடி, எல்லாம் ஆட்சியை பிடித்த உடனேயே எல்லாம் மாறிவிடும், மாறிவிட்டது என்ற இயங்கியல் மறுப்பு வர்க்கபோராட்ட மறுப்புடன், கட்சியில் முரண்பட்ட கருத்துகள் இயங்கியல் வளர்ச்சியில் பாட்டாளி வர்க்க சரியானதுக்கு எதிரானதுக்குமாக வளர்ச்சிபெறும் என்ற இயங்கியலை மறுத்தபடி தாக்குதல், ஆய்வு, சுதந்திரவிவாதம் என்று மாாக்சியத்துக்கு எதிராக வேகநடை போடுகின்றனர். மார்க்சியமல்லாத மற்றைய வர்க்க சமூக முன்னணி பிரிவினரை புரட்சியின் தலைவராக காட்டுவது கூட இதற்க்கு கூடாக மார்க்சியத்தின் பெயரில் கடைவிரிக்கின்றனர். இது இன்று ஈழப் போராட்டம் சீராழிந்த போது தேங்கிப் போன சாக்கடையாகும்.

✪ ✪ ✪

அரசியலில் பிழைத்துக் கொள்ள சிலர் காய்கள் நகர்த்துக்கின்றனர். என் மீதான கல்வெட்டில் என்னை மிரட்டியும், நேரடி மரணதண்டனைக்குப் பதில் எழுத்தில் கொன்றதைத் தொடர்ந்து பதிலளித்தேன். இதில் அரசியல் பற்றிய எந்த பிரஞ்சைபூர்வமான அபிப்பிரயமும் இன்றி, இரண்டடையும் ஒன்றாக இட்டுக் காட்டுவதன் ஊடாக தமது அரசியலை பின்பக்கத்தால் புகுத்துகின்றனர். ஏதோ எனக்கும் ஷோபாசக்திக்கும் தனிப்பட்ட பிரச்சனையாக காட்டி, எதிர்த்துப் போராடும் பண்புபற்றி பேசி, வர்க்க அரசியலை குழிதோண்டி புதைக்க கிடங்கு வெட்ட சிலர் அதே பாதையில் களத்தில் பிரச்சரத்தை நகர்த்தி பிழைக்க அரும்பாடுபடுகின்றனர்.

இது போன்ற மற்றுமோர் அரசியல் போக்கு முகம் பார்த்து வர்க்க அரசியல் பேசுகின்றனர். உதராணமாக இ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபாவின் தனிப்பட்ட மனிதப் பண்பை வைத்தக் கொண்டு துரோக அரசியலுக்கு நியாயம் கற்பிப்பது போன்ற போக்குகள். ரொக்சியத்தை எற்றுக் கொண்டால் அவர்களின் மீது எந்த விமர்சனத்தையும் வைக்க மறுத்த மற்றைய ரொக்சிகள், படு பிற்போக்கு அரசியல் வழிகளைக் கூட மறைமுகமாக நியாப்படுத்துவதும் அல்லாது அரசியலற்ற அணுகு முறையை கையாள்வது என முகம் பார்த்து அரசியலில் ஈடுபடுவது. இது போல் குடிகாரனாக மாறிவிட்டான் எனக் கூறி அனுதாபம் பேசி அரசியலைப் பாதுகாப்பது. இப்படி பல அரசியல் போக்குகள் அம்பலப்படுத்தப் படவேண்டிய புதிய அரசியல் விபச்சாரங்கள் முளைத்து எழுகின்றது.

✪ ✪ ✪

செம்மணி மயானத்தில் புதை குழிகளில் இருந்து மீட்க்கப்பட்ட மனிதசடலங்கள் இனவெறி சிங்கள அரசின் பாசிசத்தின் மற்றுமொரு வடிவமாகும். காணமால் போனோர் எலும்புகளாக மீட்க்கப்படும் நிலையில் தமிழ் மக்களும், அவர்களின் குடும்பத்தினரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
இப்பிரச்சனை யாழ்பிரதேசம் என்பதால் பகிரங்கமாக சர்வதேசமளவில் பகிரங்கமாகி விசரானைகளை சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தீவிரமாக்கியுள்ளது. இந்த நிலையில்தான் சிங்கள பாசிச இனவெறி அரசு தன்னை ஜனநாயகவாதிகளாக காட்டிக்கொள்ள விசாரனையை சர்வதேச மட்டத்தக்கு எடுத்து சென்று நடாகமாடத் தொடங்கியுள்ளது. இதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலர் சரியாக புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். அரசு தான் ஜனநாயகத்தின் ஒரு சின்னம் எனக் காட்ட இதன்மீதான விசாரனை முடுக்கிவிடுவதன் மூலம் தனது சொந்த பாசிச இனவெறி மூகமுடியை மறைத்தபடி தமிழ் மக்களுக்கு எதிராக அரசியல் மூல உபாயத்தை கையாளத் தொடங்கியுள்ளார்.

இந்த மனித புதைகுழி மீட்பு என்பதை வடக்கு கிழக்கு தாண்டி சிங்கள பிரதேசம் அனைத்தும் தழுவிய வகையில் அனைத்து புதைகுழிகளையும் (தமிழ், சிங்கள, முஸ்லிம்), மனித படுகொலைகளையும் விசாரனைக்குள்ளாக்க கோருவதன் மூலம், அரசை அன்னியமாக்கி அம்பலப்படுதுவது அவசியம். இதன் மூலம் இராணுவம் என்பது அது எந்த வாக்கத்தின் கருவி என அனைத்தையும் அம்பலப்படுத்தமுடியும். இதே நேரம் இயக்கங்கள் செய்தவற்றை புதைகுழிகளில் இருந்து மீட்க்கவேண்டும். இதற்க்கான அரசியல் என்ன? அந்த இரணுவக் கண்ணோட்டம் என்ன என்பதை அம்பலப்படுத்தவதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உயர்ந்த நிலைக்கு நகர்த்தமுடியும்.

✪ ✪ ✪

துருக்கிய பாசிச இராணுவ அரசு சிறுபான்மை இனமான குருட்டீஸ்தான் மக்களை படுகொலை செய்தும், கற்பழித்தும், அகதியாக்கியும் நடத்தும் நரவேட்டை உச்சத்தில் அரங்கேறிய வண்ணம் உள்ளது. ஜனநாயக அமெரிக்கா, இஸ்ரேலின் நேரடி சதிகள், மிரட்டல் மூலமும், ஐரோப்பாவின்



அங்கீகாரத்துடனும் பி.க.க (P.K.K) தலைவர் ஒகலானால் கைது செய்து அவருக்கு ஏகாதிபத்திய ஆசியுடன் மரணதண்டனையை அறிவித்துள்ளனர் துருக்கிய பாசிட்டுகள். அந்த மக்களின் விடுதலை போராட்டத்தில் இது எப்படி நிகழ்ந்தது என்ற அரசியல் கராணத்தை சுய விமர்சனத்துக்குள்ளாக்கவும், அதேநேரம் சொந்த அரசியலின் வர்க்கப் போராட்ட தவறுகள் எப்படி இவைகளுக்கு வித்திட்டன என்பதை இன்று அந்த மக்கள் மீளப்பார்த்து, அரசியல் ரீதியில் சுயவிமர்சனம் செய்யவேண்டிய காலகட்டத்தில் இவ் மரன தண்டனை கோருகின்றது. மறுபுறம் இந்த தண்டனையை எதிர்த்து போராடும் மக்களுடன் எம்கைகளை இறுக பிடித்தபடி இந்த ஜனநாயகம் என்பது சுரண்டும் வர்க்கம் தீர்மானிப்பவைதான் என்பதை புரிந்து எதிர்த்து போராடுவோம். இதுமுடிவுமல்ல இறுதியுமல்ல என்பது நாம் தெரிந்து கொண்டு வர்க்கப் போராட்டம் உள்ளவரை இது தொடரும் என்பதை புரிந்து கொண்டு இதை வேர் அறுக்க வர்க்க மரணம் வரை மனிதகுலம் போராடும். அதில் நாம் இணைந்து கொள்வோம்! வருங்கள் அணிதிரள்வோம்!!














தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### இனவெறிப் பாசிச சிங்கள இராணுவத்தின்

# யாழ் பாதை திறப்பு நடவடிக்கை

# புலிகளுக்கு வைக்கப்பட்ட ஆப்பு!



தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை மறுத்து, சிங்கள இனவெறிப் பாசிஸ்ட்டுக்கள் நடத்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்களை எதிர்த்துப் போராட, போராட்டத்தை தமிழ் மக்களிடம் இருந்து பலாத்காரமாக ஜனநாய விரோதமாக பறித்துப் பெற்ற புலிகள் இராணுவ ரீதியில், அரசியல் ரீதியில் தொடர்ச்சியாக தவறு இழைக்கின்றனர். தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கை மீது தவறான இராணுவ அரசியல் மூல உபாயங்கள் தமிழ் மக்களின் இருப்பையே தகர்த்து விடும் அளவிற்கு நிலமை மாறிவிடுகிறது. புலிகளின் செய்தி அமைப்புகள், ஊடகங்கள் இராணுவ வெற்றிகளைப் பிரச்சாரம் செய்யும் அளவிற்கு அதன் அரசியல் மூல உபாயங்களை, தமிழ் மக்களின் இருப்பு மீதான அக்கறையை கவனத்தில் எடுப்பதை தவிர்க்கின்றன.

இன்று இலங்கையில் இராணுவ ஆய்வாளர்கள் என்று எழுதுவோரும், சம்பவங்களில் இழுபட்டுச் செல்வோரும் புலிகளின் இராணுவ மூலோபாயத்தின் பின் சரியான பாதை பின்பற்றப் படுகின்றதா? என்பதை ஆய்வு செய்ய முடிவதில்லை.

நாம் புலிகளிகன் யுத்தத கள நிலமைகளை ஆய்வு செய்கின்ற போது 'புவிகளின் யுத்தமும், அதன் போக்கும் சிங்கள இராணுவ நடவடிக்கைக்கு பின் இழுபட்டுச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இதுதான் சிங்கள இராணுவத்துக்கு தேவையானதும் அடிப்படையானதுமாகும். புலிகளின் திட்டமிட்ட தாக்குதலுக்கு வெளியில் பொதுவான புலிகளின் இராணுவ மூலோபாயமும், புலிகளின் பிரதான இராணுவ மையமும் இனவெறி சிங்கள இராணுவத்தின் யுத்த முனைகளுக்குள் நிறுத்தி வைத்திருப்பதில் இராணுவம் வெற்றி பெற்றுள்ளது. இதுதான் கடந்த புலிகளின் இரானுவ வரலாற்றில் புலிகளை முடக்கிய மிகப்பெரிய யுத்த நடவடிக்கையாகும்.

அந்தவகையில் யாழ்நோக்கிய "ஜெசிக்குரு" நடவடிக்கையை இராணுவம் தொடங்கிய போது, புலிகளின் சுயட்சையான நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவந்தது.

முல்லைத்தீவு இராணுவ முகாம் போன்றும், பரந்தன் மீதான புலித்தாக்குதல் போன்ற தாக்குதலை நடத்துவதைத் தடுக்க, புலிகளின் அணிகளை தமது பிரதான தனது யுத்தமுனை நெருக்கடிக்குள் நிறுத்துவது இராணுவத்துக்கு அவசியமாக இருந்தது.

யாழ்குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்த போது வெளியேறிய புலிகளின் மிகப்பெரிய இராணுவ அணிகளை யுத்த முனை இனி எங்கே என்பது கேள்வியாக இருந்தது. இது முல்லைத்தீவைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைப்பற்றிய போது அடுத்த யுத்த முனை எங்கே என்பது அரசுக்கு மிகப் பெரிய நெருக்கடியை கொண்டு வந்தது.

அது கிழக்கு மாகாணமாக இருக்கும் என்று (இதை நாம் முன்பு சமரில் குறிப்பிட்டிருந்தோம்) எதிர்பார்க்கப்பட்டது.

அதாவது புலிகளின் மிக முக்கியமாக மைய அணிகள் இயல்பில் கிழக்கு நோக்கி நகரும் பட்சத்தில் இலங்கை பெயரளவில் பெற்ற சுதந்திரத்திற்கு முன்பு இருந்து திட்டமிட்டு நடத்திய சிங்கள மயமாக்கும் குடியேற்றங்கள் எல்லாம் ஒரே நொடியில் தகரும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நகர்வு என்பது இராணுவத்துக்கு எதிரான, அதையொட்டிய இலக்குகள் மீது நடத்தப்படும் அதே நேரம், குடியேறிய மக்களை வென்று எடுத்தும் அல்லது நடுநிலைப்படுத்தியும் அவர்களை எதிரியாக காணாது யுத்தம் கிழக்கு நோக்கி நகர்ந்திருக்கவேண்டும். இதுதான் சரியான இராணுவ வியூகமாகவும், இனஅழிப்பின் திட்டமிட்ட பிரதேச அழிப்பை தடுக்கும் ஒரு யுத்த முனை நகரும் பட்சத்தில் யாழ் குடாநாட்டு கைப்பற்றியது என்பது அரசியல் ரீதியில், இராணுவ ரீதியில் அரசு தோல்வியாக இருந்து இருக்கும்.

இதை அரசு மிக நுட்பமாகப் புரிந்திருந்தது. யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தில் புலிகளின் இராணுவம் முற்றாக குவிந்து இருந்தது என்பதும், அது கிழக்கு நோக்கி நகரும் பட்சத்தில் இலங்கை தமிழ் விரோத சிங்கள இன ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மிக முக்கியமான திருப்பு முனையான ஒரு நிகழ்வாக இருந்திருக்கும்.

சிங்கள இனவெறி அரசு இதைத் தடுக்க ஒரு நீண்ட தொடர்ச்சியான தனது யுத்த முனையை, புலிகளின் பிரதான யுத்த முனையாக மாற்றுவது என்பது, இராணுவ அரசியல் இலங்கை அரசுக்கு சாதகமானது என்பதை உணர்ந்து. இதற்க்கு யுத்த வெற்றி காலகெடு எல்லாம் யுத்தத்தில் புலிகளை மிகவும் தீவிரமாக இறங்கவும், சிங்கள மக்களின் முன் அரசு சலுகை பெறவும் முன்வைத்தது தான். முன்பு புளட் போன்றவை தமிழ் ஈழத்துக்கு காலம் விதித்தது போல் இதுவும் ஒன்றாகும்.

வன்னி யுத்த முனையை தொடங்கிய உடன் புலிகள் யுத்தத்தை உத்தியோக பூர்வமாக நடத்துவதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்க முன்பே யுத்தம் தீர்மானகரமாகிவிட்டது. 24-5-1997 களத்தில் 135 இல் புலிகள் 13-5-1997 தொடங்கி ஆக்கிரமிப்பை எதிர்த்து பாரிய எதிர் தாக்குதலை புலிகள் தொடுக்கின்றனர் என பிரகடனம் செய்தனர். 13.5.97 முதல் 16.5.97 வரையிலான தாக்குதலில் 37 புலிகள் இறந்ததாக அறிவித்தனர். 18.5.97 ஒரு திடீர் தாக்குதல் நடத்தினர்.

யுத்தம் இவர்கள் முன் சிங்கள இனவெறி அரசு நகர்த்த அதன்பின் இழுபட்டு புலிகள் எதிர் தாக்குதலை தொடங்கினர் கடந்த 24 மாதமாக இது தான் பொதுவான நிலையாக உள்ளது. யுத்தத்தை புலிகள் திட்டு மிட்டு நடத்த முன் யுத்தம் இவர்களை நகர்த்துகின்றது. புலிகளின் கட்டுப்பாடு ஒழுங்கு என்பது தலைமையில் இருந்த இறுக்கமானது என்பதும், தலைமையை மீறி எந்த முடிவையையும் அணிகள் எடுக்க முடியாத வகையில் ஒழுங்கமைக்கப்பட்டவை தான்.

ஆனால் ஒரு விதிவிலக்கு எப்போது ஆதரவளர்களும், கீழ்மட்ட அணிகள் தலைமையை இராணுவத்தை நோக்கிய தாக்குதலில் தன்னெழுச்சியின் பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகின்றனர். அது இராணுவத்துக்கு எதிரான நீடித்த யுத்த முனை தாக்குதல்களை எங்கே எப்படி செய்வது என கீழ் அணிகள் தான் தலைமை வழிகாட்டுகின்றது. இது தன்னெழுச்சி வகைப்பட்டது.

அதாவது பிரதான யுத்த முனையை புலிகளின் இராணுவ வெளிவட்ட ஆதரவு பிரிவுதான் எப்போதும் தலைமையை வழிநடத்துகின்றன. புலியின் தலைமை எப்போதும் கொரிலா, அதிரடித் தாக்குதலை மட்டுமே இராணுவ மூல உபாயத்தில் தனது கைகளில் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. யாழ்குடா நோக்கிய பாதை ஆக்கிரமிப்பு யுத்தம் தொடங்கிய உடன் புலிகள் இராணுவ தற்காப்பில் மோதத் தொடங்கிய உடன் அதன் வெளிவட்டப் பிரிவுதான் உடனடியாக அதை ஆதரித்து பிரச்சாரம். கோட்பாடுகளை கட்டமைத்து வெளிப்படுத்த கின்றனர். இது தலைமை யுத்தத்தை தீர்மானிக்க முன்பே தலைமையின் கையை கட்டிப் போட்டு விடுகின்றது.

இதை மீறும் எந்தத் தலமையும் தலைமையை இழந்து விடுகின்றது. ஏன் எனின் புலிகளின் அரசியல், இராணுவ வகை சார்ந்த பிரச்சார வகையில் உள்ளதால், அதன் மீதான ஆதரவும். ஊக்கமும் தலைமை மீற முடியாத ஒரு பிசுபிசுத்துப் போன றப்பர்களாக இழுபடுவதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல்கின்றது.

புலிகள் இராணுவ ரீதியில் மரபு ரீதியாக மாறிவிட்டதாக, தொடர்ச்சியான யுத்த முனையில் எதிர் கொண்டு செல்ல முடியும் என்று வன்னிப் போர் பற்றிய புலிகளின் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் யுத்தத்தை ஆராயின் அது தவறான வீயூகம் மட்டுமின்றி, பிரதான



தற்காப்பு யுத்த முனை வெளியில், புலிகளின் பாரிய வெற்றியை, வன்னியில் கொரிலா யுத்த மூலம் சாதிக்க முடியும் என்பதை அவர்களின் இராணுவ நடவடிக்கை தெரிவிக்கின்றன.

இதை அவர்களின் இராணுவ நடவடிக்கையின் வெற்றி தோல்விகளில் இருந்து ஆராய்வோம். புலிகளின் உத்தியோக பூர்வமான களத்தில், எரிமலை இதழ்களில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்கள் பல ஒன்றுக்கு ஒன்று முரணாக இருந்த போதும், புலிகளின் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களில் இருந்து ஆராய்வோம்.

ஏரிமலை நவம்பர் - டிசம்பர் 1997 இதழ் "மாவீரர் பணிமனை" வெளியிட்ட புள்ளி விபரங்களைப் பார்ப்போம்.

27.11.1982 முதல் 31.12.1997 வரை புலிகளின் இழப்பைப் பார்ப்போம்

| ஆண்டு | போராட்டத்தில் இழந்தோர் |
|---|---|
| 1982 | 1 |
| 1983 | 5 |
| 1984 | 36 |
| 1985 | 123 |
| 1986 | 256 |
| 1987 | 451 |
| 1988 | 364 |
| 1989 | 372 |
| 1990 | 960 |
| 1991 | 1613 |
| 1992 | 788 |
| 1993 | 925 |
| 1994 | 374 |
| 1995 | 1502 |
| 1996 | 1366 |
| 1997 | 2097 |
| ஏனையோர் | 264 |
| தனிக்குழு | 10 |
| ஆண் | 9916 |
| பெண் | 1591 |
| மொத்தம் | 11510 |

| | |
|---|---|
| ஆகாயக் கடல் வழிச் சமர் | 602 |
| மணலாறு சமர் | 233 |
| ஒப்பிரேசன் தவளை | 469 |
| கொக்கு தொடுவாய் | 175 |
| இடிமுழக்கம் | 181 |
| சூரியக் கதிர் | 438 |
| ஓயாத அலைகள் | 315 |
| சுத்ஜெய 2 | 100 |
| சுத்ஜெய 3 | 133 |
| பரந்தன் ஆனையிறவு | 193 |
| ஜெயசிக்குறுவும் எதிர் தாக்குதலும் | 1178 |

தரைக் கரும் புலி ஆண் 38 - பெண் 1 — 39

கடற் கரும் புலி ஆண் 54 - பெண் 22 — 76

கரும்புலிகள் மொத்தம் ஆண் 92 - பெண் 23 — 115

இது புலிகள் 1997 வயையில் அவர்கள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட புள்ளி விபரங்கள். இதில் 1997-5-13 தொடங்கிய ஜெயக்குறுத் தாக்குதலில் 1178 பேர் இறந்துள்ளனர். 7மாதத்தில் மிகப் பெரிய இழப்பாக இருந்ததுடன், 1997 இன் மிக முக்கியமான யுத்த முனையாக இது இருந்துள்ளது. மிகுதிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர் முனைகளில் இறந்தோர் 919 பேர் மட்டுமேயாகும். இதில் 9-1-97 புலிகளின் பரந்தன்-ஆனையிறவு தாக்குதலில் 158 புலிகள் கொல்லப்பட்டனர். (களம் 26-2-1997 இலக்கம் 129) இது போல் திருகோணமலை சினக்குடாவிலும், மட்டக்களப்பு வவுணதீவிலும் 6-9-97 நடத்திய புலிகளின் தாக்குதலிலும் 84 புலிகள் (களம் 12-3-97 இலக்கம் 130) இறந்தனர்.

1997 ஆம் ஆண்டு இந்த இரு பிரதான கொரிலாத் தாக்குதல்களை எடுத்தால் (இங்கு ஜெயசிக்குறு உள்ளடக்கவில்லை) 242 பேர் இறந்தனர். ஆகவே இந்த 254 பேர் மற்றும் ஜெயசிக்குறு 1178 பேரையும் விடுத்தால் 677 பேர் மட்டுமே மற்றைய போர் முனைகளில் இறந்துள்ளனர். இது மொத்த இழப்பில் மூன்றில் ஒன்றாகும். அதாவது யுத்த முனையில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே மற்றைய யுத்த முனை இழப்புக்களாகும் இதன் இராணுவ இழப்புக்கள், கொரிலாத் தாக்குதல் போன்றவை மதிப்பிட முடியாத வகையில் செய்திகளை விரிவாக கொண்டிருக்கவில்லை.

1997 யுத்தம் ஜெயசிக்குறுவுக்குள் நகர முன் 1996 நிலமையை ஆராய்வோம். களத்தில் 1-1-97 இலக்கம் 125 இல் 1996 முக்கிய இராணுவ நிகழ்வுகள் பற்றிய குறிப்பில் 38 தாக்குதல்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வான், கடல், நிலம் என அனைத்தையும் உள்ளடக்கியது. இதில் 25 தாக்குதல் கிழக்கு மாகாணத்தில் நடந்துள்ளது. யாழ் குடாவில் 5 தாக்குதல்களும் கொழும்பில் ஒன்றும், முல்லைத்தீவு முகாம் அழிப்பும், மிகுதி வன்னியிலும் எல்லைப்புறங்களிலும் அமைந்திருந்தன.

எனவே 1996 ஆம் ஆண்டு நடத்திய முக்கிய புலிகளின் தாக்குதல்கள் கிழக்காக இருந்தது தெளிவாகின்றது. இது சிங்கள குடியேற்றங்களை தமிழ் தேசிய பிரதேச வரையறையை நோக்கிய நகர்வை புலிகளை மீறியும் இருந்தது. இதனால் இதைத் தடுக்க கிழக்கில் இருந்து புலிகளை நகர்த்த ஒரு யுத்த முனை அரசுக்கு அவசியமாக இருந்தது. அந்த யுத்த முனைதான் 24 மாதங்களுக்கு மேலாக தொடரும் ஜெயசிக்குரு இராணுவ வியூகமாகும்.

இந்த வன்னி யுத்தம் என்பது புலிகளின் ஆட்பலம், யுத்த மையம் என அனைத்தையும் இராணும் விரும்பிய ஒரு பிரதேசத்தில் நிறுத்தியதுடன், புலிகளை ஆட்பு வைத்து சிக்க வைத்துள்ளது. இதன் மூலம் புலிகளை யுத்தமுனையில் அழிக்கும் தந்திர உபாயமும் கையாளப்படுகின்றது. அதாவது ஆக்கிரமிப்புகளின் போது ஒரு நாட்டின் மீது படை நகரும் போது எதை எதிரி செய்வனோ அதே பாணியில் முன்னேகிற போது, எதிர்த்து போராடுபவர் எதைச் செய்யக் கூடாதோ அதையே புலிகள் செய்கின்றனர். தற்காப்பு என்பது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள்ளும், பிரதான யுத்தமுனை இதற்க்கு வெளியிலும் இருக்கவேண்டும். எதிரியை திசைதிருப்புகின்ற, அலைக்களிக்கின்ற, தொந்தரவு செய்கின்ற, புதிய இடங்களில் எதிரியை அழித்து ஒழிக்கின்ற வகையில் போராட்டத்தின் பிரதான யுத்தமுனை வெளியில் இருக்கவேண்டும்.

ஜெயசிக்குரு நடவடிக்கை தொடங்கிய பின் புலிகளின் யுத்த புள்ளி விபரங்கள் (பல முரண்பாடு அவர்களின் புள்ளி விபரத்தில் உள்ள போதும்) ஆராய்வோம்.

யுத்தம் தொடங்கி ஒரு மாதத்தின் பின் (10.6.97) ஒரு திடீர் தாக்குதலை புலிகள் தாண்டிக்குளத்தில் நடத்தினர். இதில் 325 இராணுவம் பலியாக 80 புலிகள் இறந்தனர். (களத்தில் 18-6-97 இலக்கம் 137)

24-6-97 பெரியமடு மீதான திடீர் தாக்குதலின் போது 230 இராணுவம் பலியானது 95 புலிகள் இறந்தனர். (களத்தில் 2-7-97 இலக்கம் 138, களத்தில் 20-5-98 இல் இலக்கம் 161)

1-8-97 ஓமந்தை - ரம்பைக் குளம் திடீர் தாக்குதலில் 135 இராணுவம் இறக்க 126 புலிகள் இறந்தனர். (களத்தில் 20-5-98 -161, களத்தில் 13-8-97 இல 141)

3 மாதச்சண்டையில் 1000 இராணுவ வீரர் இறந்தனர். (களத்தில் 13-8-97 இலக்கம் 141)

19-8-1997 பழைய வாடிப் பகுதியில் நடத்திய திடீர் தாக்குதலில் 50 இராணுவம் இறக்க புலிகள் 7 பேர் இறப்பு (களத்தில் 27-8-97 இலக் 142)

5-10-97 முதல் 10-10-97 வரை கட்டம் கட்டமான ஜெயசிக்குரு படை மீது நடத்திய திடீர் தாக்குதலில் 500 இராணுவம் இறக்க 154 புலிகள் இறந்தனர். (களத்தில்20-10-97 இலக் 146)

ஜெயசிக்குரு 145 நாட்களில் 1400 மேற்பட்ட இராணுவ இழப்பும் புலிகள் 662 மேற்பட்ட புலிகள் இறப்பு (களத்தில் 3-12-97 இலக் 149)

1-2-98 பரந்தன் கிளிநொச்சி மீதான திடீர் தாக்குதலில் 400 இராணுவம் இறப்பு 150 புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறப்பு (களத்தில் 7-6-98 இல 163)
1997 -5-13 முதல் 15-6-98 வரையிலான 400 நாள் யுத்தத்தில் 3500 மேற்பட்ட இராணுவம் இறக்க புலிகள் 1400 இழப்பு (களத்தில் 15-7-98 இல 165)
பிரபாகரன் 13-5-98 ஒரு வருட யுத்த நிறைவை ஒட்டி பேசிய பேச்சில் மூவாயிரம் இராணுவம் இறக்க 1300 புலிகள் இறந்தனர் (எரிமலை மே 1998)
26- 9-98 கிளிநேச்சி-பரந்தன் மீதான திடீர் தாக்குதலில் 1500 மேற்பட்ட இராணுவம் பலி புலிகள் 240 பேர் இறப்பு (களத்தில் 7-10-98 இல171)

இப் புள்ளி விபரங்களைக் கொண்டு ஆராயும் போது அண்ணளவாக 1750 புலிகள் இறக்க 5000 இராணுவம் இறந்துள்ளது. இப் புள்ளி விபரத்தில் பல முரண்பாடுகளை அவர்களின் கட்டுரைகள் உள்ளடக்கி உள்ளதால் புலிகளின் இழப்பு சற்று அதிகமாக (யுத்தத்தின் பின் காயமடைந்து பின் இறந்தோர், தவறியவர்கள் எனப்பார்க்கும் போது ) இருக்கும் என்பது தெளிவு. மறுபக்கம் இராணுவம் இறந்த எண்ணிக்கை சற்று குறைவாக இருக்கும் ஏன் எனின் இராணுவ இறப்பு ஒரு மதிப்பீடு மட்டுமே யாகும்.
1998இல் மாவீரர் பணிமனை விடுத்த அறிக்கையில் ஜெயசிக்குரு நடவடிக்கையில் இறந்தோர் முதல் ஆறு மாதத்தில் 1178 என்கின்ற போது பின்னர் நடந்த 9 மாதச் சண்டையில் 575 போ அளவில் மட்டுமே இழப்பு நிகழ்ந்துள்ளதென்பதாகிறது.
ஜெயசிக்குருவிற்குள் ஏழு முக்கிய தாக்குதல்கள் கெரிலாப்பணியில் (இத்தகவல் தொடுப்பதில் நிறையவே தகவல் பற்றாக் குறைகள் (முரண்பாடுகள் உள்ளது) நடத்தப்பட்டுள்ளது.
இந்த ஏழு முக்கிய தாக்குதலில் 852 புலிகள் இறக்க 3140 இராணுவம் இறந்துள்ளது. மிகுதி நேரடி மோதல்களில் அதாவது 898 புலிகள் இறக்க 1860 இராணுவம் இறந்துள்ளது.
புலிகளின் நடவடிக்கை என்பது கொரிலா நடவடிக்கை மட்டுமே வெற்றியான பாதையாக மீள மீள உள்ளது. மரபு ரீதியான தொடர்ச்சியான மோதல் என்பது இழப்பீடுகள் சமனாகவே சற்று குறைவாகவே மட்டும் உள்ளது.
புலிகளின் தரப்பு இழப்பைக் குறைக்கவும், அதிக இராணுவத்தை அழித்தெழிக்கவும் உள்ள ஒரே யுத்த முனை கொரிலாப் பாணித் தாக்குதல்களாகும். இதுவே புலிகளின் வரலாற்றில் இதுவரை பொதுவன நிலையாக உள்ளது.
இந்நிலையில் வன்னிச் சமரில் நேருக்கு நேர் நின்று மோதல் யுத்தம் புலிகளை பலத்த இழப்புக்குள் நகர்த்துவதுடன், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய கோரிக்கையை மறைமுகமாக அழித்தொழிக்க உதவியளிக் கின்றது. ஏன்எனின் தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கையை புலிகள் பலாக்காரமாக தமது ஆக்கியுள்ளதால், ஏற்படும் பின்னடைவுகள் அனைத்து தமிழ்மக்களின் மீதான சிங்கள ஆக்கிரமிப்பாக வெற்றிபெறும். வன்னியை நோக்கிய இராணுவ புலி எதிர்ப்பு இன்றி முன்னேறின் அது என்ன பொது விளைவுகளை ஏற்படுத்தும் என ஆராய்வோம்.

பாதை திறக்கப்படின் பொதுமக்களின் போக்குவரத்து சீராகும். மக்களின் உணவு நெருக்கடி நீங்கும். தமிழ் மக்களின் மீது உணவுத் தடை என்பது குறித்த பிரதேசத்தை நோக்கி கட்டுப்படுத்த முடியாது ஒரே சீராகும். புலிகள் சுதந்திரமாக உள் ஊடுருவவும், வேவு பார்க்கவும் வாய்பளிக்கும். புலிகள் நடத்திய முக்கிய 7 அதிரடி நடவடிக்கை போல் பல பத்துத் தாக்குதலை விரும்பிய இடத்தில் மிகப் பலமான ரீதியில் நடத்த முடியும். இராணுவ இழப்பு மிக அதிகமாகவும், புலியின் இழப்பு மிக குறைவாகவும் இருக்கும்.
மறு தரப்பில் பாதகமாக யாழ் குடாநாட்டுக்கு இராணுவ விநியோகத்தை இலகுவாக்கும். வன்னி நிலப் பரப்பை ஊடுறுத்த பாதை இரண்டாகும்.
யுத்தத்தின் போக்கில் பாதை மீதான யுத்தத்தை புலிகள் கைவிடுவதன் மூலம் கிழக்கில் மிக முக்கியமான யுத்த மையமாக மாற்றுவதன் அவசியம் இன்று அவசரமானது. தமிழ் மக்களின் சொந்த நிலம் மீதான குடியேற்றமும், ஆக்கிரமிப்பும் செய்யப்படும் நிலையில், அதைத் தடுக்க யுத்தம் கிழக்கை நோக்கி நகர வேண்டும். ஆனால் இது அப்பாவி சிங்கள மக்கள் மீது அல்ல குடியேற்ற நிறுவனங்கள் மீது, இராணுவத்தின் மீது அவசியமான தாக்குதலாக இருக்கும் பட்சத்தில் அரசும், இராணுவமும் இயல்பில் சிதறடிக்கப்படும். கிழக்கு மீதான தாக்குதல் அதிகரிக்க அதிகரிக்க வடக்கு இராணுவம் தவிர்க்க முடியாது கிழக்கு நகர்த வேண்டி ஏற்படும். இது இரு பிரதேசத்தையும் அரசு இழக்க பலவீனம் அடையச் செய்யும்.
இல்லாத பட்சத்தில் வன்னி யுத்தம் புலிகளின் தோல்விப் பாதைக்கு போடப்படும் கடிவாளமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்னிப் பாதையை இராணுவம் திறந்தாலும் அதன் மீதான தளர்தலை செய்ய முடியாது ஓர் இராணுவ சூனியப் பிரதேசத்தை எதிர்த்து புலிகள் நிறுத்த வேண்டிய நிலை பாதை நெடுக்க நீடிக்கும்.
இராணுவ சூனியப் பிரதேசத்தை எதிர்த்து புலிகள் நிறுத்த வேண்டிய நிலை பாதை நெடுக நீடிக்கும். இது இராணுவத்துக்கு வடக்கு கிழக்கில் தனது உறுதியான நிலையை பேண உதவும். வன்னிக் காடுகளை ஊடுருத்த, அதை அண்டிய பிரதேசம் யுத்த தந்திர ரீதியில், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயப் போராட வெற்றியில் தீர்க்கமானவையல்ல. மாறாக கிழக்கு மிகமுக்கியமான யுத்தத்தை தீர்மானிக்கும் மையமாக உள்ளது.

புலிகளின் யுத்தமும் அதன் போக்கு சுத்த இராணுவ வாத கண்ணோட்டத்தால், மக்களிடம் இருந்து அன்னியப்பட்ட நிலையில் யுத்தங்களில் பின் வாங்கியபடி இராணுவம் விரும்பும் யுத்தமுனையில் யுத்தம் செய்வதாக உள்ளது.
யுத்தம் மக்களுக்கானதாக, மக்களின் நலன் சார்ந்தாக, அவர்களின் விடுதலையை பெறுவதாக அமைய வேண்டுமாயின் யுத்ததை அரசியலால் ஆராய்ய வேண்டும். அரசியலை ஆணையில் வைக்க வேண்டும்.
மக்களின் விடுதலை என்பது அரசியலில் ஆகும் போது தான் யுத்தத்தை எப்படி, எங்கே எதற்காக என்று கேள்விகளின் மாபெரும் வெற்றிகளை சாதிக்க முடியும்.
ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை பற்றி அக்கறை இன்றி, இருக்கும் அமைப்பைச் சிதைவின்றி பேணுகின்ற அரசியல் நிலையில், குட்டி பூர்சுவா இயல்புடன் தப்பித்து ஓடுதலை தீவிரமாக நகர்த்தும். இதை மட்டுப்படுத்த அணிகளை இணைக்க யுத்த நெருக்கடி இடையில் இராணுவ சூனியப் பிரதேசம் போன்ற இராணுவவாத அரசியல் உண்மையில் போராட்டத்தை அழிக்கத்தான் உதவும். ஒருபுறம் நிரந்தர இரணுவமாக கருதிய போக்கில் நேருக்கு நேர் நடத்த யுத்தத்தில் இழப்புகள் அதிகரிக்கின்றன. இவ்யுத்தம் கருவிக்கானதாக, அனேகமாக சில ஆயுதங்களை குறிவைத்து நகர்த்துவதும், இதனால் அர்த்தமற்ற இழப்புகளும் அதிகரிக்கின்றன. ஆயுதங்களை தீர்க்கமானவை என்ற கண்ணோட்டமும், ஆயுதம் வைத்திருப்ப வனை எதிரியாக காண்பதும் புலிகளின் அரசியலாக உள்ளது. போராட்டத்தை எப்படி வெல்வது என்பதற்குப் பதில் ஆயுதத்தை எப்படி பெறுவது கைப்பற்றுவது அழிப்பது என திட்டமிடுதல் என்பது போராட்டத்தின் எதிர் நிலைக்கு நகர்த்துகின்றது.

இதனால் ஏற்படும் மனித இழப்புகள் ஒருபுறம், மறுபுறம் மக்களில் இருந்து அன்னியப்படுத்தப்பட்ட அரசியல் புலிகளுக்கு ஆள்பற்றாக் குறையை அண்மைக்காலத்தில் ஏற்படுத்தியுள்ளது. ஆயிரம் ஆயிரமாக போராட்டத்துக்கு அணிதிரள்வதாக புலிகளின் பிரச்சார அமைப்புகள் அடிக்கடி கூறிய போதும் அண்மையில் மறைமுகமான கட்டாய இராணுவ சேவையை அறிமுகம் செய்துள்ளனர். 35 வதுக்கு உட்பட்டோர் நட்டை விட்டு வெளியேறாமல் தடுதத்துடன் 55 வயதுக்கு உட்பட்ட அனைவரும் பயிற்சி எடுக்க வேண்டும் என்ற நடைமுறை அமுலுக்கு புலிக்கள் கொண்டு வந்துள்ளனர். இதை சாதிக்க அரசு கொடுக்கும் இலவச உணவை இது போன்றவைகளை பணயமாக வைத்துள்ளனர். 35 வதுக்கு உட்பட்டோர் நட்டை விட்டு வெளியேறமால் தடுத்துடன் 55 வயதுக்கு உட்பட்ட அனைவரும் பயிற்சி எடுக்க வேண்டும் என்ற நடைமுறை அமுலுக்கு புலிக்கள் கொண்டு வந்துள்ளனர். இதை சாதிக்க அரசு கொடுக்கும் இலவச உணவை இத போன்றவைகளை பணயமாக வைத்துள்ளனர்.
புலிகள் மிளவும் மாபெரும் அரசியல் தவறை இழைக்கின்றனர். நிர்பந்தங்கள் ஊடாக கட்டும் இராணுவங்கள், நெருக்கடியுடாக உருவாக்கும் நிர்பந்தங்களும் மக்களுக்கும் புலிக்கும் இடையில் பாரிய பிளவை மேலும் வளர்க்கின்றது. இது மக்களை போராட்டத்தில் இருந்து மேலும் அன்னியப்படுத்தும் அரசியலாகும்

அண்மையில் துரோகக் குழுக்களுக்கு மிரட்டல் ஊடாக விடப்பட்ட அழைப்பு கூட ஜனநாயக பூர்வமானவையல்ல. இதில் இருந்த புலிகள் தமது கடந்தகால, நிகழ்கால அரசியலை மீள்பரீசிலனைக்கு எடுத்துக் கொள் இம்மியும் தயாரற்ற நிலையில், புதிய தவறுகளை செய்யவும் அதை நியாப்படுத்தவும் கங்கனம் கட்டி செயல்படுவது என்பது போரராட்டத்தை மேலும் மேலும் சீராழிக்கவே துணைபோகின்றது.
போராட்டத்தை வளப்படுத்த குட்டிபூர்சுவ நலன்களை பாதுகாக்க, அந்த அணிகளை அணிதிரட்ட எடுக்கு வழிமுறை மேலும் போராட்டத்தை சிதைக்கும். குட்டி பூர்சுவா வர்க்கம் எப்போதும் ஊசலாட்டம் கொண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தப்பி ஓடும் பிரிவு. ஒடுக்கப்பட்ட மக்கள் எப்போதும் போர் குணம் உள்ளவர்கள். அவர்களின் நலன்களை விடுதலையை முன் வைக்கும் போராட்டம் யுத்த நெருக்கடியை அவசியமற்றதாக்கின்றது. மாறாக யுத்தம் அவர்களின் விடுதலைக்கானதாக மாறிவிடும் எனவே ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைச் சார்ந்திருக்க, அதற்காக போராடாத எந்தப் போராட்டமும், எந்த பெரிய இராணுவ வெற்றியையும் மீறி தோல்வி அடைவது தவிர்க்க முடியாது. அதுபோல் முன்னோக்கு அற்ற இராணுவ இழுபறிக்குள் சிக்கி, தமது சுய தாக்குதல் முனையை தீர்மானிக்க முடியாது போய், இராணுவம் விரும்பும் இடத்தில் நடத்தும் யுத்த முனையை பிரதான தாக்குதல் இடமாக மாறிவிடும். இது ஆப்பு இழுத்த குரங்காகி தற்கொலைக்கு இட்டுச் செல்லும். ஏனவே ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமையில், அதன் அரசியல் ஒளியில் யுத்தத்தை பார்க்க போராடவேண்டிய நிலையில் இன்று தமிழ் மக்கள் உள்ளனர். இதை நாம் வென்று எடுக்கும் போராட்ட நெருக்கடியில் வாழ்கின்றோம்.

12.3.1999

---

# சந்தர்ப்பவாத [illegible] வாதிகளின்

# வரலாற்றுத்

வரலாற்றுத்

# திரிபு

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை பற்றி, அவர்களின் போராட்டம் பற்றி சேறு வீசுவதில் இன்று பலர் பல தளத்தில் களம் கண்டுள்ளனர். இந்த வகையில் சரிநிகர் 150, 152 இல் மீளவும் சங்கமன் ஏகாதிபத்தியத்துக்காக விசுவாசமாக வரலாற்றைத் திரித்து தனது சந்தர்ப்பவாத வரலாற்றுப் பொய்களில் முகிழ்ந்து எழுந்துள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் மீதும், அவர்களின் தலைவர்கள் மீதும், அவர்களின் போராட்டத் தத்துவம் மீதும் தாக்குதல் நடத்துவதில் சங்கமனின் அளவு கடந்த விருப்பம் இந்த ஏகாதிபத்திய நுகத்தடியை பாதுகாக்கும் போராட்டத்தில் எழுவதே. இதை மறுக்கமுடியாத வகையில் அவர்களின் கோட்பாடுகள், அவதூறுகள் விம்மி வீங்கிப் போய்யுள்ளது.

அடுத்த நேர உணவுக்கு கையேந்தும் மனிதர்களின் உழைப்பை தமது ஆடம்பர வீம்புகளுக்காக சுரண்டி ஒடுக்கும் இந்த ஏகாதிபத்திய அமைப்பினை தகர்க்க சங்கமன் போன்றவர்கள் என்ன தீர்வை வைக்கின்றனர்? இதற்க்கு காரணம் என்ன?

தொட்டாலே தீட்டு எனக்கூறி சாதியால் ஒடுக்கி மனிதர்களை பிளந்து போட்ட உலகத்தில் இருந்து

www.tamilarangam.net

அந்த மக்கள் மனிதனாக வாழ என்ன தீர்வு உங்களிடம் உண்டு? இதற்க்கு கராணம் என்ன? பெண்களை சக மனிதராக ஏற்றுக் கொள்ள மறுத்து அடக்கி ஒடுக்கி இரண்டாம் தரப் பிரஜையாக எல்லாத்துறையிலும் வாழவிட்டுள்ள நாகரிக ஜனநாயக உலகில் இருந்து பெண்கள் மீள உங்களின் பாதைதான் என்ன? இதற்க்கு கராணம் என்ன?

ஆபிரிக்காவில் தடிகளாக மாறி பசித்த வயிற்றுடன் கூட்டம் கூட்டமாக மடிந்து போகும் மனிதர்களுக்கு என்ன தீர்வை முன்வைக்கின்றீர்கள்? இதற்க்கு கராணம் என்ன? பச்சிளம் பாலகர்கள் பசித்த வயிற்றுடன் நேரக் கணக்கின்றி உடல் உழைப்பில் உழல்கின்ற அந்த பரிதாபத்துக்குரிய ஜீவன்களின் ஏக்கப் பார்வைக்கு என்ன தீர்வை வைத்துள்ளீர்கள்? இதற்க்கு கராணம் என்ன?

ஆணாதிக்க வக்கிரத்துக்கும், வறுமையின் கோரத்திலும் தம்மை மீறி பாலியல் பண்டமாக மாற்றப்பட்ட கள்ளம்கபடம் அற்ற அந்த பிஞ்சு மனங்களுக்கு என்ன தீர்வை முன்வைக்கின்றீர்கள். இதற்க்கு கராணம் என்ன?

எங்கும் மனித அவலத்தின் காட்சி. சிலர் வாழும் உலகுக்காக உலகம் உருள்கின்றது. அதைப் பாதுகாக்க உருளும் எழுத்துலகம் மக்களை சேறடிக்கின்றது. சங்கமனும் அவர் போன்றவர்ளும் முதலில் மக்கள் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன என தெளிவாக்க வேண்டும். எப்படி அவர்களை விடுவிக்க முடியும் என அடித்துக் கூற வேண்டும். ஆனால் அதுபற்றி எதுவுமின்றி மார்க்சியம் மீதும், அதன் தலைவர்கள் மீதும், அப்போராட்டங்கள் மீதும் நடத்தும் சேறடிப்பு மக்கள் கருசனைக்கு வெளியில் ஏகாதிபத்திய விசுவாசத்தால் நாற்றம் கண்டுபோய்யுள்ளது.

மார்க்சியம் மட்டும்தான் சுரண்டலை ஒழிக்கக் கோருகின்றது. மார்க்சியம் மட்டும்தான் சாதியைக் கடந்த சமூகத்தை வந்தடைய கோருகின்றது. மார்க்சியம் மட்டும்தான் நிறம், மொழி,....... கடந்தும் மற்றும் பெண்களை விடுவிக்க கோருகின்றது.

மார்க்சியம் மட்டும்தான் மனித சமுதாயத்தின் அனைத்து சமூக முரண்பாட்டிலும் மனிதனை விடுவிக்க கோருவதுடன், நடைமுறையில் போராடுவதுடன் அதற்க்காக உண்மையாகவும் இயங்குகின்றது. இதற்க்கு வெளியில் மக்களை விடுவிக்க எந்தக் கோட்பாடும், நடைமுறையும் கிடையவே கிடையாது. அப்படி உண்டு என்பவர்கள் அதை முன்வைப்பதை விடுத்து சேறுவிசுவது என்பது இந்த ஏகாதிபத்திய உலகைப் பாதுகாக்கத்தான். அதனால்தான் இவைகளை ஏகாதிபத்திய எச்சிலுக்காக சந்தர்ப்பவாத வேடங்களை மக்களின் பெயரில் கோசம் போட்டபடி மக்களின் யதார்த்த நிலைமைகளுக்கு வெளியில், மக்களின் போராட்டகளுக்கு வெளியில் வம்புவாதம் நடாத்தித் திரிகின்றனர்.

புரட்சிநடந்த சோசலிச சமூகங்களில் மனிதப்படுகொலைகள் நடந்தன. அவை ஜனநாயகத்துக்கு விரோதமானவை. வன்முறையை ஒழிக்கப் புறப்பட்ட மார்க்சியம் வன்முறையில் இயங்கின்றது. எனப் பலவாக எடுத்துவைக்கும் கூற்றுக்கு மார்க்சியர்களாகிய நாம் எப்போதும் பதில் அளித்து வந்துள்ளோம்.

ஜனநாயகம் என்பது மனித ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் மட்டும் சுரண்டப்படுவனுக்கும் சுரண்டுபவனுக்கும் இடையில் மட்டும் உயிர்வாழ்பவைதான். ஆதிமனிதன் முன் ஜனநாயகம் இருக்கவில்லை. ஏன்எனின் ஒருவனை ஒருவன் சுரண்டி அடக்கி வாழவில்லை. அங்கு உணவுக்கான போராட்டம் கூட ஜனநாயக எல்லைக்கு வெளியில்தான் நடந்தது.

சனநாயகம் என்பது இன்று உள்ள ஏகாதிபத்திய அமைப்பில் சுரண்டிவாழும் பிரிவுக்கும் அதை அண்டிப் பிழைக்கும் பிரிவுக்குமானதே. சுரண்டப்படும் மக்களுக்கு எப்போதும் சனநாயகம் இருப்பதில்லை. மாறாக ஒருவாக்கு சுரண்டுவோருக்குப் போட மட்டும் சுரண்டப் படும் மக்களுக்கு சுரண்டும் வர்க்கம் வழங்கிய நஞ்சு தடவிய இனிப்பாகும். இது பண்பாடு கலாசாரம் ...... என அனைத்திலும் மூளைச் சலவையை செய்தபடி வழங்கிய சனநாயகம், எங்கேயவாது இதில் சனநாயாகம் பூர்வமான மாற்றம் ஏற்படின், சனநாயகத்தை வான் அளவு புகழ்ந்து வழங்கியவர்களே வன்முறை கொண்டு நசுக்கினர், நசுக்கிவிடுவர்.

இது பாசிசம், இராணுவச் சட்டங்கள், மதச் சட்டங்கள், பொருளாதார முற்றுகை, இராணுவ சதி, படையெடுப்புகள் என ஏதோ ஒன்றை பயன்படுத்தி சனநயாகத்தை சுரண்டும் வர்க்கம் சார்பானதாக மாற்றிவிடுவர். உதாரணமாக பனாமாவில் தேசிய முதலாளித்துவ பிரிவு பராளுமன்ற வழிகளில் ஆட்சியேறிய போது அதை ஒடுக்கியதை இந்த சனநாயக உலகம் பார்த்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டுதான் இருந்தது. சங்கமான் போன்றோர் கண்ணைமுடிக் கொண்டு இருந்தது மட்டுமின்றி கம்யூனிஸ்டுகளை தாக்குவதில் குறியாக இருந்தனர்.

அமெரிக்கவில் இருபதுகோடி செவ்விந்திய மக்களை கொன்றும், ஆபிரிக்காவில் சட்டவிரோதமாக புகுந்து மனிதர்களை வேட்டையாடி மிருகங்களாக அடிமைப்படுத்தி வேலைவாங்கி (பார்க்க ஏழுதலைமுறை என்ற நாவலை, எப்படி மக்கள் நாவல் எழுத வேண்டும் என்பதற்க்கு எடுத்து காட்டும் கூட) அதில் உருவான அமெரிக்க சனநாயக ஏகாதிபத்தியம் பற்றிய மௌனமும், கம்யூனிஸ்டுகள் மீதான சனநாயாகத் தாக்குதலும் ஏன் நடத்தப் படுகின்றன?

இந்தோசீனாவில் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட கம்யூனிஸ்டுகளை நரைவேட்டையாடியவர்கள் பற்றி ஏன் மௌனம்? இலங்கை அரசு 1971லும் 1979லும் வேட்டையாடியாது பற்றி ஏன் மௌனம்? தமிழ் மக்கள் ஐம்பதாயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்ட கொல்லாப்படுகின்ற நிலையில் ஏன் மௌனம். புலிகள் மாற்றுக் கருத்து கொண்ட ஐந்து ஆயிரம் பேரை கொன்றும், எல்லையோர அப்பாவி சிங்கள முஸ்லிம் மக்களை கொன்றும் துரத்தியது பற்றி ஏன் மௌனம். இப்படி உலகு எங்கும் பலப்பல ஆயிரமாக உள்ளதும், இதன் மீதான மூடிமறைப்பும் மௌனமும், இதை அம்பலப்படுத்தி போராடும் கம்யூனிஸ்டுகள் மீதான சேறுவீசல்கள் மட்டும்தான் இந்த ஏகாதிபத்திய உலகம் நீடிக்கவும் அதன் எல்லா மனித விரோதங்களும் தொடர அடிப்படையாக உள்ளது. இவை எல்லாம் சனநாயகத்தில் மட்டும் அதாவது சுரண்டும் உரிமையில் மட்டும் நீடிக்கின்றன. இதனால் பாட்டாளிவர்க்கம் கம்யூனிச சமூகத்தில் சனநாயகம் என்பதை ஒழித்துக்கட்டிவிடும். இதன் முதற்படியாக சுரண்டும் வர்க்க பிரிவுகளுக்கும் அதை நியாப்படுத்தும் அனைத்துக்கும் சனநாயகத்ததை வழங்கமறுத்து விடுகின்றது. இதையடைய அந்தப் பிரிவு போராடுமாயின் போராட்ட தன்மைக்கு ஏற்ப்ப வன்முறையைக் கையாளும். இதற்க்காக மட்டும்தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை சோசலிச சமூகம் பாதுகாத்து வைத்துக் கொள்ள பாட்டாளி வர்க்கம் வன்முறையூடாக போராடுகின்றது. இங்கு இருதரப்புக்கு சனநாயகம் இருக்காது ஒருதரப்புக்கு மட்டும் சனநாயகம் இருக்கும். இது சுரண்டலை எதிர்க்கின்ற பிரிவுக்கு மட்டுமானது.

இன்று சனநாயகம் இருப்பது போல் உள்ளவை இந்த சுரண்டல் சமுதாய எல்லைக்குள் மட்டுமானவை. இந்த சமுதாயத்தை கேள்விக்குள்ளாக்கி தகர்க்கும் எல்லா நிலையிலும் சனநாயகம் பாசிசமாக தன்னை வெளிக்காட்டும். இதை யாராலும் மறுக்க முடியாது.

சோசலிச சமூகத்தில் உழைக்கும் மக்களின் ஒருதரப்பு சனநாயகத்தைப் பாதுகாக்க சுரண்டப்படும் பிரிவுகளின் கோட்பாடுகள், செயல்தளங்கள், பண்பாட்டு கலாசார தளங்கள் என அனைத்துமீதும் நடத்தப்பட்ட வன்முறை சார்ந்த சாராத அனைத்துப் போராட்டத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையைப் பாதுகாக்கவும் முன்னெடுக்கவும், அதன் தொடர்ச்சியில் ஒட்டுமொத்தமாக கம்யூனிச சமூகத்தில் ஜனநாயகத்தை ஒழித்துக்கட்ட ஒருதரப்பு சனநாயகம் ஒழித்துக்கட்டப்படும். இந்தப் போராட்டத்தில் இதற்க்கு வெளியில் ஏற்பட்டு இருக்கக்கூடிய விலகல்கள், தவறுகளை எந்த முதலாளித்துவ வாதியின் விமர்சனத்தையும் விட மார்க்சிய வாதிகள்தான் சுயவிமர்சனம் கொண்டு பார்ப்பதுடன், அதை அனுபவமாக கொண்டு தொடர்ச்சியான போராட்டத்தில் அவைகளை தவிர்க்கின்றனர். இதை யராலும் மறுக்கமுடியாது. இந்த இடத்தில் சங்கமனின் தொடர்ச்சியான சேறுயடிப்புகளின் பின்னணியில் சரிநிகர் 153இல் ஆசிரியர் குறிப்புடன் சங்கமனை அம்பலப்படுத்தி ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

இந்தக் குறிப்பில் ஆசிரியர் குழுவும், கட்டுரையை எழுதியவரும் அவருக்கு எழுத சனநாயகம் வழங்குவது பற்றியும், இது போன்றவற்றை எதிர் கொண்டு பதிலளிக்க வேண்டும் என சனநாயகம் பற்றி விளக்கம் கொடுத்துள்ளனர்.

மார்க்சியவாதிகள் உலகளவில் சிறிய எண்ணிக்கையில் இருந்த போதும் அவர்கள்தான் ஏகாதிபத்தியத்துக்கும், அதன் எடுபிடிகள் மக்களின் பெயரில் முற்போக்கு காட்டிஎழுதும் எழுத்தாளருக்கு அச்சம் தரும் பூதமாக உள்ளனர்.

அதனால் தான் அவர்கள் எப்போதும் மார்க்சியத்தைத் தாக்கி வருகின்றனர். ஏகாதிபதியம் செய்யும் தொடர் அவதூறாக குவிந்து கிடக்கும் குப்பைப் பிரச்சாரத்தை, மக்களின் பின் ஒளித்துக் கொண்டு முற்போக்கின் பெயரில் இன்று எடுத்து வைக்கும் எழுத்தாளர்கள்தான் சமூகப் பாய்ச்சலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடுக்கும் நேரடி வன்முறை சாராத பிரிவாக உள்ளனர்.

கருத்துச் சுதந்திரம் என்பதும், முற்போக்கு என்பதும் குறைந்த பட்சம் பாட்டாளி வர்க்கத்தை எதிர்க்காத நிலை மட்டும்தான் என்பதை மறுக்கும் அனைத்து நியாயவாதங்களும் கம்யூனிச எதிர்ப்பின் பின் ஏகாதிபத்திய கோட்பாட்டை பாதுகாப்பதுதான். ஏகாதிபத்தியத்தை எதிர்க்காத அதை எதிர்த்துப் போராடாத பிரிவுகளுக்கு சரிநிகர் முதல் பலர் கருத்துச் சுதந்திரம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தலைமை தாங்கி போராட தயாரற்ற போக்கில் எழுபவைதான். இந்த மாதிரியான செய்தியூடகங்கள் ஏகாதிபத்திய பிரச்சாரத்துக்கான புதிய உத்தியை மறைமுகமாக முன் தள்ளுபவைதான்

இந்தமாதிரி வைக்கப்படும் எல்லாவண்ண அவதூறுகளையும் மார்க்சியவாதிகள் முகம் கொடுத்து அதை முறியடித்துப் பதில் அளித்துள்ளனர் பதில் அளிக்கின்றனர். இதற்க்கு எதிரான போராட்டம் வர்க்கப் போராட்டத்தில், அதன் கோட்பாட்டுப் போராட்டத்தில் நடத்திய வெற்றியில்தான் வர்க்கப் புரட்சி சாத்தியம் என்பதை தெளிவாக புரிந்து போராடி வருகின்றனர். இதைத்தான் மார்க்ஸ் முதல் மாவோவரை செய்தனர். இதைத்தான் இன்று மார்க்ஸ்சிய வாதிகள் செய்கின்றனர்.

அ.மார்க்ஸ் முதல் சங்கமன் வரை கம்யூனிச புரட்சிகளின் மீது தேடி எடுத்து வைக்கும் அவதூறுகளை சேறுபடிப்புகளுக்கு பின் உலகம் ஒளித்துக் கொண்டு நடத்தும் மறைமுக கொலைகளைப் பார்ப்போம்.

இந்த ஏகாதிபத்திய அமைப்பால் உலகில் மனிதனின் ஆயுள் எப்படி உள்ளது எனப் பார்போம். 1992 இல் யாப்பான் பெண்களின் சாராசரி ஆயுள் 81.2 ஆண்டுகளாக இருக்க ஆண்களின் ஆயுள் 75.5 ஆண்டுகளாக இருந்தது. இந்த ஏகாதிபத்தியத்தின் சூறையாடலைச் சந்திக்கும் ஆப்கானிஸ்தானில் பெண்ணின் ஆயுள் 42 ஆகவும் ஆணின் ஆயுள் 41 ஆகவும் உள்ளது. மூன்றாம் உலக நாட்டுக்கும் முதலாம் உலக நாட்டுக்கும் இது பொதுவான சாராசரியை கொண்டு உள்ளதைப் புள்ளிவிபரம் காட்டுகின்றது. ஏன் இன்று கம்யூனிசத்துக்கு எதிராக பாதுகாக்கும் முதலாளித்துவம் எப்படி சனநாயகமாக ஆயுளில் உள்ளது என்பதற்க்கு



அன்று மார்க்ஸ் எழுதிய மூலதனம் கூட ஆதாரத்தை தருகிறது. "தொழிலாளி பாதி வாழ்நாளைக் கடக்க முன்பே சக்தியெல்லாம் இழந்து ஓய்ந்து போகிறார். ... ஏணியின் மேல்படியிலிந்து கீழ்ப்படிக்கு சரிந்து விழுகின்றார். நவீனத் தொழில் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களிடையே வேறு எங்குமில்லாத அளவுக்கு ஆயுள் குறைவாய் இருக்கிறது. .. . மேல் நடுத்தர வர்க்கத்தின் சராசரிமரண வயது 38; ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் சராசரி மரண வயது 17"[14]

ஏகாதிபத்திய சூறையாடல் மூன்றாம் உலக மனிதனின் ஆயுளைக் கூட தனது சொந்த நாட்டை விட அரைவாசியாக்கி மனிதனை அரை ஆயுளில் கொன்று ஒழிக்கின்றான். இப்படி முன்றாம் உலக நாடுகள் எல்லாவற்றிலும் பட்டினியிலும் நோயிலும் கொன்று அதில் சுகம் காணும் உலக மயமாதலும் அதை முண்டு கொடுக்கும் சனநாயகமும் மக்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் கொன்று போடும் அமைதியில் தான் உயிர்வாழ்கின்றது. இந்த ஏகாதிபத்திய அமைப்பை பாதுகாக்கும் பேச மறுக்கும் பிரிவுகளுக்கு நாம் கருத்துச் சுதந்திரம் வழங்கத்தான் வேண்டுமோ?

ஆணாதிக்க வடிவத்திலும், வறுமையின் வடிவத்திலும், கல்வி இன்மையிலும் பெண்களை எப்படி சூறையாடி அடிமையாக ஏகாதிபத்தியம் வைத்துள்ளது எனப் பார்ப்போம்.

1992 இல் உகண்டா நாட்டில் ஒரு பெண்ணுக்கு 8.2 பிள்ளைகள் இருக்க இத்தாலியில் 1.3 டாக மட்டுமே உள்ளது. முன்றாம் உலக நாடுகளின் வறுமை, சிறுவர் இறப்பு போன்றன அதிக பிள்ளைகளைப் பெறவும் இந்த ஏகாதிபத்திய அமைப்புத்தான் காரணம். **ஏகாதிபத்திய நாடுகளில் பெண் பெற்ற சலுகைகளை** கூட முன்றாம் உலக நாடுகளின் பெண்கள் அடைய முடியாதவாறு ஏகாதிபத்தியம் தடுக்கின்றது. இந்த ஏகாதிபத்தியத்தை, அதை எதிர்த்து எழுதாத எழுத்துகளை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்.

பிறப்பு வீதத்தை எடுப்பின் (1992) ருவாண்டாவில் பிறப்பு வீதம் 52.2 டாகவும் இறப்ப வீதம் 15.6



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டாகவும் உள்ளது. இது ஸ்பானியோலில் இறப்பும் பிறப்பும் 8.2 டாக உள்ளது. மக்களின் படிப்பறிவின்மை, வறுமை, நோய் போன்ற இந்த ஏகாதிபத்திய நுகத்தடியில் பிறப்பு இறப்பைக் கூட ஏகாதிபத்தியம் சார்பாக உள்ளது.

உலகில் அதிகூடிய பிறப்பு வீதம் (1992) காட்டாரில் 5.44 இருக்க ஜெர்மனியில் -0.18 யாக குறைந்து சனத் தொகை குறையத் தொடங்கியுள்ளது. அதிகூடிய சனத் தொகையைக் கூட பெண்களை பிள்ளைகள் பெறும் இயந்திரமாக வைத்து இருக்கும் இந்த ஏகாதிபத்திய உலகம் தேவைதான்?[1]
இப்படியாக குழந்தை இறப்பு, குழந்தை பிறப்பின் போது பெண்ணின் மரணம், வருமானம், நுகர்வு என அனைத்தும் இந்த ஏகாதிபத்திய அமைப்பு தனக்கு சாதகமாக வைத்து உலகை சூறையாடியும் மக்களை சனநாயகத்தின் பின்னால் அடக்கி கொன்று போடுகின்றது. இதற்க்கு எதிராக போராடவே பாட்டாளிவர்க்கம் வர்க்கப் போரை கோரிப் போராடுகின்றது. கம்யூனிசம் மட்டும்தான் போராடும் மக்களுக்கு முன் உள்ள ஒரே போராட்டப் பாதையாக உள்ளது. இதை எதிர்த்துதான் எல்லா மார்க்ச்சிய விரோத புலம்பல்களும் காலத்துக்கு காலம் வெளிவந்து மார்க்சியத்தின் உண்மைகளின் பின்னால் நொருங்கி காணமால் போகின்றன.

இவராலும் பலராலும் எதிரியாக மக்கள் வ்ரோதியாக காட்டும் கார்ல் மார்க்ஸ் கூறுவதில் இருந்து சில பார்ப்போம். ''அதுவரை ஆப்பிரிக்காவுக்கும் ஆங்கிலேய மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையில் மட்டுமே நடந்து வந்த நீக்ரோ-வர்த்தகத்தை, ஆப்பிரிக்காவுக்கும் ஸ்பானிய அமெரிக்காவுக்குமிடையில் நடத்துவதற்கும் அனுமதிக்கப்படும் தனிச் சலுகையை அசியெந்தோ ஒப்பந்தத்தைச் கொண்டு இங்கிலாந்து ஸ்பானியரிடமிருந்து கறந்தது அல்லவா, இது ஆங்கிலேய ராய தந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி என்று இந்த வராலாற்றேடுகள் கொண்டாடுகின்றன. இவ்வழியில் இங்கிலாந்து ஸ்பானிய அமெரிக்காவுக்கு 1743 வரை ஆண்டுக்கு 4800 நீக்ரோக்களை வழங்கும் உரிமையைப் பெற்றது. இது பிரித்தானியக் கள்ள கடத்தலுக்கு அதிகாரப்பூரவப் போர்வை ஆயிற்று. அடிமை-வர்த்தகத்தைக் கொண்டு லிவர்பூல் உப்பிக் கொழுத்தது. இதுவே அதன் ஆதித் திரட்டலுக்கான வழியாய் இருந்தது..... 1790 இல் ஆங்கிலேய மேற்கிந்தியத் தீவுகளில் சுதந்திர மாந்தர் ஒருவருக்கு 10 அடிமைகள் வீதமும், பிராஞ்சு மேற்கிந்திய தீவுகளில் 14 அடிமைகள் வீதமும், டச்சு மேற்கிந்தியத் தீவுகளில் 23 அடிமைகளும் இருந்தனர்....முடியரசுக் கடற்படைக்கு ஆள் சேர்த்தது போலவே தொழிற்சாலைகளுக்குக்கும் வலுவந்தமாய் ஆள் சேர்த்தனர்....பர்மிங்காம் போன்ற இடங்களில் வெவ்வேறு வட்டார வேலையில்லங்களிலிருந்து பழகு தொழிலாளர்களைக் கொள்முதல் பழக்கம் உடனே பிறந்தது....அவர்களது குறியெல்லாம் குழந்தைகளை முடிந்தவரை அதிகமாய் வேலைவாங்குவதே... இவ்விதம் ஒப்படைக்கப்பட்ட ஒரு பாவமுமறியாத, கேட்பாரற்ற பிறவிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நெஞ்சு பொறுக்காது. அதீத உழைப்பால் இறப்பின் விளிம்புக்குச் செல்லும் வரை அவர்களைத் துன்புறுத்தினார்கள்....சவுக்கால் அடித்தார்கள்... சங்கிலியால் பிணைத்தார்கள் சித்திரவதை செய்தாகள்.. இப்படி யெல்லாம் நேர்த்தியான முறைகளில் கொடுமைப்படுத்தினார்கள் பட்டினியால் எலும்பும் தோலுமாகி விட்டவர்களையும் பல சந்தர்ப்பங்களில் சவுக்காலடித்து வேலை வாங்கினார்கள்... சில சந்தர்ப்பங்களில் கொடுமை தாளமால் சிலா் தற்கொலை செய்து கொள்ள நேர்ந்தது... ஆங்கிலேயரது தூண்டுதலின் பேரிலும், ஆங்கிலேயர் தந்த கையூட்டுக்காவும் செவ்விந்தியர்கள் தம் கோடரிகளுக்கு அவர்களை இரையாக்கினர்கள் வேட்டை நாய் கெண்டு தாக்குதலும் குடும்மித்தோல் உரித்தலும் 'கடவுளும் இயற்க்கையும் தனக்கு வகுத்தளித்த வழிகள்' என்று பிரித்தானியப் பாராளுமன்றம் பறை சாற்றியது... அதிகாரிகள் தாமே விலை நிர்ணயித்து பரிதாபத்துக்குரிய இந்தியர்களை இஷ்டம் போல் கொள்ளையிட்டார்கள்....1866இல் ஆண்டில் பட்டினியால் மாண்ட இந்துக்கள் தொகை ஒரிசா மாகாணத்தில் மட்டும் பத்து லட்சத்துக்கும் அதிகம். தொழிலாளர்கள் சங்கங்கள் யாவும் 'சுதந்திரத்துக்கும் மனித உரிமைகள் பிரகடனத்துக்கும் எதிரான முயற்ச்சி' என்று அறிவித்தனர்... பிச்சையெடுத்துக் கொண்டும் இருக்கிற.. சிறையில் கசையடி தரலாம்.... இடது தோழில் போக்கிரி... சூடு போட்டு கடின உழைப்புக்க அனுப்ப வேண்டும். அவர்கள் மீண்டும் பிச்சை எடுத்துப் பிடிபட்டால், கருணை காட்டாமல் மரண தண்டனை நிறைவேற்ற வேண்டும்.''[15] என மூலதனம் எங்கும் இந்த ஜனநாயக முதலாளித்துவத்தின் வெட்க்கம் கெட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூறையாடல்களை மாாக்ஸ் சமூகப் பொறுப்புடன் பதிவாக்கியுள்ளார். எந்த இலக்கியமும் முடியாதை தத்துவக் கட்டுரைக்கு அழகாக தந்தத மட்டுமின்றி அதற்க்கு எதிராக யாரைவிட உறுதியாக போராடியதால்தான் இந்த முதலாளித்துவ உலகம் அவரின் குழந்தைகளையும், அவரை பட்டியிலும், நொயிலும் சாகடித்தனர். மார்க்ஸ் படியாதது எது, சொல்லாது எது என்பதற்க்கு எல்லை வாகுக்க முடியாத வகையில் உயர்ந்து நிற்க்கின்றார்.

3.**அதிகாராத்துவம்** - அதிகாராத்தை எப்படி ஒழிக்கமுடியும்? அதன் வடிவம் என்ன? இருக்கும் அதிகாராம் எப்படி தகரும்? இதில் வர்க்கப் பாத்திரம் என்ன? பாட்டாளி அதிகாராத்தைக் கைப்பாற்றினால் முதலாளிக்கு எதிராக அதிகாரம் இருக்குமா, இருக்காதா? வன்முறை உடலால் மட்டுமா? அல்லது இலக்கியம் போன்றவற்றிலும் பொருந்துமா? விமர்சனம், மற்றும் இலக்கியத்தில் வன்முறை மொழியில் இருக்குமா? இருக்கிறது எனின் ரஜேஸ்வரி பாலசுப்பிமணியத்துக்கு ஷோபாசக்தி எழுதிய விமர்சனம் மொழியால் வன்முறை கொண்டது அல்லவா? (இவர் வாய் மூலம் எழுத்தில் அல்ல கடந்த கால தனது இலக்கியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்கிறார்.) அப்படியாயின் ஒடுக்கும் வர்க்க இலக்கியத்தை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் தடை செய்யப்படும் எனக் கூறிய விமர்சனம் மட்டும் எப்படி தவறாகும்? இதற்கு பதில் கல்வெட்டும் மரணதண்டனையும் தான் என்றால் அது ஒடுக்கும் வர்க்க குரல் இல்லையா?

4.**பெண்விடுதலை** - பெண்விடுதலை எப்படி அடையமுடியும்? அதற்கான பெண்கள் போராட்ட வடிவம் (எந்த வர்க்க பெண் போராட்டத்துக்கு தலைமை தாங்குவது, அதன் வேலைத் திட்டம்) என்ன? பெண் எப்படி அடிமையானாள்? அடிமையாக்கிய காராணம் தகர்க்காமல் பெண் விடுதலை அடைய முடியுமா? அப்படிமுடியும் எனின் எப்படி? உங்கள் பெண்ணியத்துக்கும் ஏகாதிபத்திய பெண்ணியத்துக்கும் (அணைத்திலும்) வேறுபாடு என்ன?

5.**ஓரினச்சேர்க்கை** - எப்படி உருவானது? அதற்க்கு காரணம் என்ன? இது இயக்கையாயின் எப்படி? அதன் ஆதாராம் என்ன? எப்படி இது பாட்டாளி வர்க்ககோசமாகும்?

இந்த இடத்தில் மாரக்சின் சில கருத்துகளை வைப்பது இதையும் சரி, சமூக இயக்கத்தையும் சரி புரிந்து கொள் சிந்திக்கின்ற, உண்மையில் சமூகத்தின் மீது அக்கறை கொள்வோருக்கு உதவும். "... .., டார்வின் நம்மை அக்கறை கொள்ளச் செய்கின்றார். பொருளுற்பத்திக்குப் பயன்படும் மனித உறுப்புகளின் வரலாறு - சமூகஒழுங்கமைப்பு அனைத்தின் பொருளாயத அடிப்படையாக விளங்கும் இந்த உறுப்புகளின் வரலாறு - அதே அளவு அக்கறைக்குரியதன்றோ? விக்கோ கேட்பது போல, இப்படியொரு வரலாற்றைத் தொகுப்பது எளிதன்றோ நாம் மனிதனின் வரலாற்றைப் படைத்திருக்கிறோம். இயற்கையின் வரலாற்றைப் படைக்கவில்லை என்பதுதானே இரண்டுக்குமுள்ள வேறுபாடு? மனிதன் இயற்க்கையைப் பயன்படுத்திக் கொள்கிற முறையை - அவன் வாழ்வதற்கு வகை செய்யும் பொருளுற்பத்தி நிகழ்முறையை - தொழில் நுட்பவியல் வெளிப்படுத்துகிறது; இதன் மூலம் அது அவனது சமூக உறவுகளும், அவற்றிலிருந்து ஊற்றெடுக்கிற கருத்துருவங்களும் வடிவமையும் முறையையும் புலப்படச் செய்கிறது. இந்தப் பொருளாயத அடிப்படையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தவறுகிற சமய வரலாறும் கூட விமர்சன பூர்வமற்றதே. எதார்த்தத்தில் சமயத்தினது மாய சிருஷ்டிகளின் மண்ணுலகக் கருவைப் பகுப்பாய்வின் மூலம் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமன்று. ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளபடியே நிலவுகிற வாழ்க்கை உறவுகளிலிருந்து அவ்வுறவுகளுக்குரிய விண்ணுலக வடிவங்களை வகுத்தமைப்பது மெத்தக் கடினமாகும். இந்த இரண்டவது வழிமுறைதான் பொருள்முதல்வாத வழிமுறையாகும்; ஆதலால் விஞ்ஞான வழிமுறையாகும். இயற்கை விஞ்ஞானத்தினது சூக்குமப் பொருள்முதல் வாதத்தின் (abstract materialism) - வரலாற்றையும் அதன் நிகழ்முறையையும் ஒதுக்கி விடுகிற இந்தப் பொருள்முதல்வாதத்தின் - பலவீனங்கள், இயற்கை விஞ்ஞானிகள் அவர்களது தனித்துறையின் எல்லைகளைக் கடந்துவந்து வெளியிடுகிற சூக்கும, சித்தாந்தக் கருத்தமைவுகளில் உடனே தெளிவாகப் புலப்படுகின்றது." (மூலதனம் பக்கம் 505)

6.**சுதந்திர காதல், சுதந்திர அன்பு, கட்டற்ற சுதந்திரம்** ... - சுதந்திரம் எப்படி தோன்றியது? யாருக்காவது சுதந்திரம் உண்டு எனின் இந்த வர்க்க சமுதாயத்தில் யாருக்கு? வர்க்க சமுதயாத்தில் எதிரான இரண்டு வர்க்கத்துக்கு சுதந்திரம் இருக்க முடியுமா? சமுதாயத்துக்கு சுதந்திரம் கிடைத்த பின் சுதந்திரம் கற்பிதமா? இல்லையா? ஏன்? வர்க்க சமுதயாத்தில் சுதந்திரம் கோரி போராடி பெறின், மறுத்தவனின் மறுக்கும் சுதந்திரம் மறுக்கப்படுமல்லவா? ஏன்எனின் மறுப்பதும் கோருவதுக்கும் இடையில் அல்லவா சுதந்திரம் உயிர் வாழமுடிகின்றது?

7.**இராணுவவாதம்** - புலிகள் இடம் இராணுவ வாதம் இல்லையா, எப்படி? சுத்த இராணுவக் கண்ணோட்டம் புலிகளிடம் இல்லையா? இராணுவத் தாக்குதல்கள் மக்களை அணிதிரட்டும் என்ற தத்துவம் புலிகளிடம் கிடையாதா? புலிகளின் செய்தி ஊடகம் தமது இயக்க நடவடிக்கைகளை அரசியல் ரீதியில் நியாப்படுத்துகின்றதா? அல்லது இராணுவ ரீதியில் நியப்படுத்துகிறதா? புலிகளின் தனிநபர் அழித்தொழிப்பு இராணுவக் கண்ணோட்டம் கொண்டதா, அல்லது அரசியல் கண்ணோட்டம் கொண்டதா? புலிகள் தமது நடவடிக்கையில் அரசியலை ஆணையில் வைக்கின்றனரா அல்லது இராணுவத்தை ஆணையில் வைக்கின்றனரா? இயக்கத்தின் தலைமை இராணுவத்தை அடிப்படையாக கொண்டதா? அரசியலை அடிப்படையாக கொண்டதா?

8.**சனநாயகத்தைக் கோருவது** - சனநாயகத்தை எப்படி கோரிப் பெற முடியும்? நான் அன்றும் இன்றும் அனுங்கி அனுங்கி லிமிட் பண்ணி மக்களுக்காக குரல் கொடுத்ததாக கூறும் நீங்கள் அதை எப்படி அனுங்காமல் விழுங்காமல் அண்லிமிட்டில் குரல் கொடுப்பது என விளக்கவும்? அன்று நான் அனுங்கிய போது நீங்கள் எப்படி குரல் கொடுத்தீர்கள்? இன்று எப்படி அனுங்காமல் குரல் கொடுக்கின்றீர்கள்? எனக்கு வெளியில் யாரெல்லாம் என்னைப் போல் அனுங்காமல் குரல் கொடுத்தனர்? கொடுத்தீர்கள்? ஈழப் போராட்டத்தில் சனநாயகப் போராட்ட வரலாற்றை எடுத்து உங்கள் இலக்கிய மேதமையால் வையுங்களே பார்க்கலாம், அண்லிமிட்ரட் பேர்வழிகளே?

9.**என்னை நோக்கி** - வெள்ளாத்தனம் என்கிறீர்கள். அனுங்கி அனுங்கி லிமிட் பண்ணி என பலப்பலவாக உங்களை போற்றும் பலருக்குப் பிடித்த நக்கல்பாணியில் கூறியுள்ளீர். (இது ஒருவகையில் சினிமாவுக்கு கவுண்டன் போல இலக்கியத்துக்கு உம்மை கவுண்டன் எனலாம். அதனால் உமது இலக்கியத்தையும் இலக்கியக் கவுண்டத்தனம் கொண்டது என அழைக்கலாமோ?) நல்லது நண்பரே. இப்படி நம்பிக்கையுடன் துணிச்சல் உடன் புல்லரிக்க எழுதுவதால், என்னைப் பற்றி கடந்த காலத்தில் எதை எல்லாம் தெரிந்து வைத்துள்ளீர்? நான் போராடிய இடங்கள், கதைத்த இடங்கள், நடைமுறை வாழ்க்கை, சொந்த வாழ்க்கை என எங்கும் அன்றும் இன்றும் தெரிந்து இப்படி கூறுவதால் அதை ஆதாரமாக அனுங்காது லிமிட் பண்ணாது எனது "அனுங்கிய லிமிட் பண்ணிய வெள்ளாத்தனத்தை" வாசகர் முன் வையுங்கள். அது அல்லவா நேர்மை? `கவுண்ட இலக்கியத்தால்' அது முடியாதோ?

10.**எதற்காக** - என் மீதான் தாக்குதல் எதற்காக? உமது கதையையும், ராஜேஸ்வரி மீதான உமது விமர்சனத்தையும் நான் விமர்சித்ததுக்கு பதிலாளிக்காத இத் தாக்குதலில் அரசியல் உள்ளதா? உமது படைப்பை பாட்டாளி வர்க்கப் படைப்பு அல்ல என்றேன், மறுக்கமுடியுமா? ஏன் உமது எல்லாப் படைப்பும் பாட்டாளி வர்க்க படைப்பு இல்லை என்கின்றேன், முடிந்தால் அது பாட்டாளி வர்க்கப் படைப்பு என நிறுவமுடியுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்கப் போராட்ட பாதையில் ஒரு சமூகப் பிரச்சனை மீதான தீர்வுக்கும் அதே பிரச்சனையின் உமது இலக்கிய தீர்வுக்கும் உள்ள உடன்பாட்டை நிறுவமுடியுமா?

11.**கொள்கை எது?** - அமைப்பு வடிவத்தை எதிர்க்கும் நீர், தலித்தில் வர்க்க மதிப்பீட்டை மறுக்கும் நீர், எப்படி கால்மார்க்ஸ்சை போற்றமுடியும்? எப்படி ரொக்சியை போற்றமுடியும்? இருவரும் இதற்க்கு நேர் எதிரானவர்கள் அல்லாவா? 1917க்குப் பிந்திய காலத்தில் ரொக்சி சோவியத்தில் அனாஸ்சிட்டுகளை எதிர்த்து ஆயுதத் தாக்குதலையும் வன்முறையையும் நடத்தினார் அல்லவா, இதை கண்டிக்கின்றீரா? அனாஸ்சிட்டுகள் லெனின் மீது சுட்டபோது அதை ஆதாரிக்கின்றீரா? எது உமது நிலை? அமைப்பு வடிவத்தை ஒழுங்கை இராணுவக் கட்டுப்பாட்டை உயர்த்திய ரொக்சி அதிகாரத்தின் பிரதிநிதியா? சனநயகத்தின் பிரதிநிதியா? லெனின், ரொக்ஸ்சி, கால்மார்க்ஸ் அனைத்தும் வர்க்க எல்லைக்கு உட்பட்டவையே என்றனர். அப்படியாயின் தலித்தும் அதற்க்கு உட்பட்டது அல்லாவா? உட்பட்டது என்றால் லெனின் ரொக்ஸ்சி பார்ப்பானிய வெள்ளாளரா? ரொக்சி ஸ்ராலின் முரண்பாடு என்ன? தெரியுமா? அதை விளக்கமுடியுமா? ஸ்ராலின் அதிகாரத்தின் பிரதிநிதி என்றால் ரொக்ஸ்சி மாற்றாக அங்கு எதை வைத்திருந்தார்? நீங்கள் எதை வைக்கின்றீர்கள்? எப்படி? வடிவம், அதன் போக்கு, செயல், அமைப்பு வடிவம் என அனைத்து தளத்திலும் என்ன? வைக்க முடியாதவரை கதையளப்பு தான் தீர்வா?

12.**திம்புக் கோரிக்கை தொடர்பாக** - திம்புக் கோரிக்கை என்ன? திம்புக் கோரிக்கை ஏன் பிழை? திம்புக் கோரிக்கையில் உள்ள சுயநிர்ணயக் கோரிக்கை ஏன் பிழை? மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை கோரியது ஏன் பிழை? இதற்க்கு அப்பால் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை முன்வைக்கின்றீர்கள்?

13.**வன்முறையும், மக்களும்** - அராஜகவாத வன்முறை சாதாரன அரசு வன்முறையைவிட கேடனது இல்லையா? உதரணமாக பிரன்சில் வீதி வன்முறையில் ஈடுபடும் அராஜகவாத வழிபறி அடி உதை நடவடிக்கை மக்களுக்கு துன்பமானதா இல்லையா? இதனால் தமிழ் பேசும் பிரஞ்சுவாழ் தமிழர் துன்பம் தெரிந்தது அல்லவா? இதுபோல் போராடும் இயக்க அராஜக வன்முறை சதாரண நிர்வாகம் உள்ள வன்முறையை விட கொருரமானது அல்லாவா? தனிநபர்கள் குற்றவாளியாக தீர்ப்பளித்து கொல்வது, பணம் வாங்குவது என அனைத்தையும் சுட்டிக்காட்டுவது விமர்சிப்பது தவறா? ஏன்? அண்மையில் கிளிநொச்சியில் மூன்று தொழிளார்பாதை உறுப்பினரை கைது செய்த புலிகளிடம் மீட்க்கக் கூடியாதாக இருந்தது ஏன்னனின் ஒரு நிர்வாகம் இருந்தால் அல்லாவா? இல்லாது அராஜக பிரதேசம் எனின் மீட்டியிருக்கவே முடியாத அல்லவா?

14.**இலக்கியம்**- எல்லா இலக்கியத்துக்கும் சுதந்திரமா? சுரண்டலை ஆதரித்த, சாதியை உயர்த்தும், பார்பானியத்தை நியாப்படுத்தும், நிறத்தை ஆதரிக்கும் நாசிச பாசிச ஆரிய நியாயப்படுத்தும், ஆணாதிக்கத்தை கோரும் அனைத்துக்கும் சுதந்திரமா? இதற்க்கா எனக்கு மரணதண்டனையும் கல்வெட்டும்? ஒழித்து விளையாடியது போதும் அனைத்துக்கும் பதில் கூறுவது தானே விவாதப் பண்பு? அண்மையில் பிரன்சின் நாசித் தலைவன் லுப்பனுக்கு ஜெர்மனியில் நாசிச இலக்கியத்தை ஆதரித்ததுக்கா ஐரோப்பிய பாராளமன்ற சிறப்புரிமை பறிக்கப்பட்டு விசாரனை மூலம் சிறை செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் உமது நிலை என்ன? பாம்பாய் காவிய சினிமா இலக்கியம் முஸ்லிம் மக்கள் மீதான பாசிச பார்ப்பானிய வன்முறையை நியப்படுத்திய போது அதை தடை செய்யக் கோரி போராடினர்கள் பாட்டாளி வர்க்கமும், முற்போக்குவாதிகளும், மக்களும். இதில் உமது நிலை என்ன? நான் இது தடை செய்யப்பட வேண்டும் என்கின்றேன். குற்றமா? எப்படி? கூறமுடியுமா நண்பரே?

நான் கேள்விகளாக எழுப்பியவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. நான் கடந்த காலத்தில் இவை தொடர்பாக நிறையவே விவதித்துள்ளேன். விவாதிக்கின்றேன். விவாதிப்பேன். இதற்க்கு எல்லாம் பதிலளிக்க வேண்டும். போகிற போக்கில் கட்டுடைக்கின்றோம், மறுக்கின்றோம் புரட்டுகின்றோம் புடுங்குகின்றோம், கேள்விகள் எனப் போடும் கோசங்கள் (வடிவத்தில் வரட்டுவாதம்) கேட்பவனுக்கு புல்லரித்த சந்தோசமாக இருக்கும். ஆனால் அது மக்களுக்குள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னிப் பிணைந்துள்ள போராட்டத்தை வழிநடத்தாது. மாறாக அராஜகவாதம் தனிநபர் தாக்குதலும் எஞ்சும். நடைமுறையில் மக்களை சிந்திக்காத போது சொற்களால் கோசம் போடும் போது **"சிந்தனைகள் இல்லாத போது சொற்கள் சுகமான மாற்றாகின்றன"** மூலதனம் பக்கம் 103 இல் மார்க்ஸ் அழகாக கூறுவது இங்கு சிறப்பாக வர்க்கப் போராட்டத்தை மறுக்கின்ற சமூக நிகழ்வை விஞ்ஞான பூர்வமாக நிறுவமுடியாத கற்பனை வாதிகளுக்கு பொருந்துகின்றது.

எனது தேசியம் தொடர்பன நூல் விளம்பரத்தை அம்மாவில் பார்த்து புத்தகத்தை வாசிக்காமலேயே விளம்பரத்தை மட்டும்கொண்டு விமர்சனம் செய்த போது அதன் தனிர்நபர் தாக்குதல் புரிந்ததே. எனது புத்தகத்தை புரியாமுடியாதவை என்பதற்க்கு, மார்க்ஸ் தனது மூலதனம் தொடர்பாக கூறியாதை பார்ப்போம். **"...., இப்புத்தகம் கடினமானதென்று குற்றஞ்சாட்ட முடியாது. புதிய தொன்றைக் கற்றுக் கொள்ளவும், ஆகவே சுயமாகச் சிந்திக்கவும் சித்தமாயுள்ள வாசகரையே நான் மனத்தில் கொண்டுள்ளேன்."** என மார்க்ஸ் மூலதனம் பக்கம் 25 இல் குறிப்பிட்டதேயே மீளவும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகின்றது. அத்துடன் புத்தகத்தில் விவாதித்த தத்துவார்த்த விடயத்தை புரிந்து கொள்ள குறைந்த பட்சம் அவை பற்றி தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருக்கவேண்டும். மார்க்ஸ் மூலதனம் பக்கம் 42இல் கூறுவதை இங்கு வைப்பது சாலப் பொருந்தும். **"விஞ்ஞானத்துக்கு ராஜபாட்டை ஏதுமில்லை; அதன் களைப்பூட்டும் செங்குத்துப் பாறைகளில் ஏறத் துணிந்தவர்களுக்கே அதன் ஒளிரும் உச்சிகளை எய்துகிற வாய்ப்புண்டு"** அதுபோல் எனது கருத்தை விமர்சிக்கின்றேன் எனக் கூறிக்கொண்டு நான் எழுதாதவைகளை மேற்கோளுக்குள் இட்டும் வெளியிலும் விமர்சிக்கும் மோசடி மிகக் கேவலமானது.

ஏன் உமது கல்வெட்டை வெளியிட்ட பின் நண்பர் ஒருவர் திருமணத்தில் முன்பின் அறிமுகமில்லாத என் மனைவியிடம் சென்று கையை குழுக்கி விட்டு "நான் தான் ஷோபாசக்தி" என இச் சமுகத்தின் ஒரு சாதாரண பெண்ணிடம் கூறிவிட்டு சென்ற போது (அப்போது அவருக்கு தலித்புரட்சியின் அங்கமான கட்டுடைத்த புரட்டிப் போட்ட தலைகால் தெரியாத வெறியில்லை. தலித் வெறி என நான் கொச்சைத்தனமாக அடையாளப்படுத்தவில்லை. மாறாக தலித் தத்துவியலாலர்கள் என ஷதிக் கொண்டு இருப்போர் குடித்தலை தலித் பண்பாடு என விவாதிப்பதுடன் அதை ஊக்குவிக்க வேண்டும் என கூட்டம் போட்டு விவாதித்து பிரகனம் செய்கின்றனர்.) அதன்பின் இருந்த தனிநபர் 'தீான வக்கிரத்தை புரிந்து கொள்ளமுடிகிறது.

அடுத்து ரொக்ஸ்சி பிரஞ்சு அரசாங்கத்தில் இருந்தார் என நான் எழுதியது தவறு என்கிறார். நல்லது நண்பரே நீர் இது பற்றி அன்று விவதித்த போது தவறு இழைக்க முடியாத (நன்) ஆவணத்தைக் காட்டினேன். சிரமப்பட்டு வரித்து மொழி விளக்க தவறு பற்றி விவாதித்து நின்ற நீர் அதன் பின் இதை மறுக்கும் எந்த ஆவணத்தையும் தந்தது கிடையாது.

நான் ஆதாரமாக கொண்டதைப் பார்ப்போம். **"டிராட்ஸ்கி பிரான்ஸ்க்குச் சென்று, பூர்ஷ்வா அரசாங்கத்திலே அமைச்சராகி பிணர் வேலை நிறுத்தங்களை முறியடிக்க முனைந்த மில்லரண்டை எதிர்த்து பாரிஸ் தொழிலாளர் நடத்திய கிளர்ச்சியிலே பங்குபற்றினர்"**கதிர் ராமசாமி எழுதிய "டிராட்ஸ்கி வாழ்க்கை வரலாறு" நூலில்தான் இப்படியுள்ளது. இது அவருக்கும் தெரிந்தது என் மீதான தாக்குதல் தனிநபர் காழ்ப்புக் கொண்டதே. இத் தகவல் தவறாக எழுதஅந்த நூல் காரானமாக இருந்தது. இருந்த போதும் இத் தகவல் தவறானது எனின் அத் தவறுக்கு நூலுக்கு வெளியில் தகவல் தவறை ஏற்றுக் கொள்கின்றோம். இது ஒன்றும் சிந்துபிந்தும் வேலையில்லை. தகவல் தவறு, வேறு நூல்கள் மூலமும், எமது கவனயீனத்தாலும் தவறுகள்ஏற்பட வாய்புகள் உள்ளன. தவறுகளை ஆதாரமாக சுட்டிக் காட்டும் எல்லா நிலையிலும் அதைமீள் பரிசிலனை செய்யவும் சுயவிமர்சனம் செய்யவும் பின்நிற்க்கபோவதில்லை. இப்படிஇருக்க பொய்யாக என்மீது சேறுயடிக்கவென வசகரை ஏமாற்றி கதையளப்பதை விடுத்து, "எக்ஸில் புரிங்கள் சிறப்பிதழ்" விடவேண்டும் என புரளி விடுவதை விட்டு தொடருங்கள்.

எனது கருத்துக்கு பதிலளிக்க முடியாத இந்தக் கோட்பாடு, எழுத்தும் தனிநபர் மீதான தாக்குலே ஒழிய வேறுயல்ல. இதற்க்கு எதிரான குரல் கொடுக்காத அனைவரும் எனக்கு வழங்கியமரண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தண்டனைக்கு கையுயர்த்தி கல்வெட்டை கொண்டாடியவர்களே. இவர்கள்தான் இன்றைய முதலாளித்துவ உலக சனநயகத்தின் வீரமிக்க எடுபிடிகள் ஆவர்.

அடிக்கடி பலர் ஸ்ராலின் அதிகரத்துவம் பற்றி புலம்பியபடி, அதன்பின் ஒளித்து நின்று கல் எறிகின்றனர். ஆம் நாம் ஸ்ராலினின் சகல ஒடுக்கப்பட்ட மக்கள் நலன் நடவடிக்கைகளை வான் அளவுக்கு உயர்த்தவும் பாதுகாக்கவும் பின்நிற்க்க போவதில்லை. அது போல் ஸ்ராலினின் தவறுகளை விமர்சனம் செய்யவும் பின் நின்றதில்லை. சுரண்டல் வர்க்கத்தை எதிர்த்த போராட்டத்தில் யாரெல்லாம் ஈடுபடுகின்றனரோ அவர்கள் எல்லோரும் இதில் சரியாக போராடுவர். யாரெல்லாம் சுரண்டலுக்கு போராட தயாரில்லையோ அவர்கள் எல்லாம் ஸ்ராலினை எதிர்த்து சுரண்டலைப் பாதுகாப்பர். ஏன் பின்நவீனத்துவவாதிகள் என்போர் ஒன்றில் பல கூறு உண்டு என்போர் ஸ்ராலின் விடையத்தில் மட்டும் ஒரு கூறு உண்டு என காட்டும் போக்கு மார்க்சிய எதிர்ப்பில் முகிழ்ந்ததேயாகும்.

முடிவாக மார்க்ஸசின் வசகத்தில் முடிப்பதே பொருந்தும். அதே மூலதனம் பக்கம் 28 இல் "**விஞ்ஞான வழிப்பட்ட விமர்சனத்தின் அடிப்படையில் கூறப்படும் அபிப்பிராயங்கள் யாவற்றையும் வரவேற்கிறேன். பொதுஜன அபிராயம் என்று சொல்லப்படுவதன் விருப்புவெறுப்புகளைப் பொறுத்த வரை - இவற்றுக்கு நான் என்றும் விட்டுக் கொடுத்ததில்லை - முன்போலவே இப்போதும்** " இதைத்தான் இந்தமாதிரியன விஞ்ஞான பூர்வமற்ற அனைத்து புத்தக புத்திஜீவிகளுக்கும் பதிலாக வைக்கின்றேன்.

**குறிப்பு:** இவரால் அம்மாவில் ராஜேஸ்வரி மீது முதலாளித்து கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட விமர்சனத்தையும், இவர் ரொக்சியை ஆதரித்தால் இவருக்கு சார்பாக அழகலிங்கம் வக்கலாத்து வாங்கி மக்களே ஆசைப்படுங்கள் என எழுதியதை நான் விமர்சித்தேன். பதில் இல்லை கல்வெட்டு பதிலாக கிடைத்தது. இவரால் பேராசன் எனக் குறிப்பிடப்படும் கால்மார்க்ஸ்சின் கூற்றை அதையொட்டி மீள வைக்கின்றேன்.

''....., **தங்கத்தை சேர்த்து வைப்பவர் உடலின்பங்களைப் பலியிட்டு பொன்னைப் பூஜிக்கிறார். சுகபோகங்களைத் துறந்திடச் சொல்லும் சுவிசேஷ போதனையைக் கரும சிரத்தையுடன் கடைப்பிடிக்கிறார். மறுபுறம், அவர் சரக்குகளாகச் சுற்றோட்டத்தில் விட்டதற்கும் கூடுதலாய் அதிலிருந்து எடுக்க முடியாது. எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்கிறாரோ, அவ்வளவு அதிகமாக அவரால் விற்க முடிகிறது. எனவே, கடுமையாக உழை, மிச்சப்படுத்து, அளவின்றி ஆசைப்படு- (அடையாளம் நான்) இவை அவரது முப்பெரும் சீலங்களாகும்; விற்பதைக் கூட்டு, வாங்குவதைக் குறை இதுவே அவரது அரசியல் பொருளாதாரத்தின் சாரமாகும்"** மார்க்ஸ் மூலதனம் பக்கம் 187 இல் கூறுவதால் மார்க்ஸ்சுக்கும் கல்வெட்டு அடித்து விடலாமே அ.மார்க்ஸ்சுடன் கூட்டுச் சேர்ந்து.

பின்குறிப்பு:

**மொழியில் வன்முறையும் பயன்பாடும**

குறிப்பு 1: பிரிந்த எக்ஸில் 2-5 இல் "தனது மற்றது" என்ற ஷோபசக்தி எழுதிய கதையில் துணுக்குச் செய்தியாக அவர் உத்தமபுத்திரன் பெயரில் நான் அவரின் கதையை விமர்சிப்பதாக உள்ளடக்கமின்றி, தன்னைத் தான் நியப்படுத்தி பாதுகாக்க வரட்டுத்தனமான வகையில் சொற்களால் சேறுயடித்து சோடித்துவிடுவதன் மூலம், தனது கதை மீதான விமர்சனங்கள் அர்த்தமற்றவையாக ஒழிக்கவும், விமர்சனங்களைத் தடுக்கவும் பாசங்கு செய்த பகிடிகளை, துணுக்குகளையும் எழுதியுள்ளார். என்னவோ புரியவில்லை சமுகத்தை தலைகீழக புரட்டிப் போடும் தைரியம் இருக்கு என்று எழுத்தில் அலட்டும் இவர், இந்தியா நாலாம்தர சஞ்சைகளான குமுதம், ஆனந்தவிகடன் போன்றன, செய்திக்கு பொருத்தமாகவும், வெளியிலும் போடும் துணுக்குகள், பகிடிகளை கொப்பியடித்து போடுகின்றர். இதுபோல் இந்திய சினிமவில் பகிடி என்ற பெயரில் செந்தில் போன்ற நாலம்தர ஆய்வுகளை செய்வதை ரசிக்க ரசிகர் கூட்டமே அலையிறது தெரிந்ததே. அந்த நாலாம்தர துணுக்குகளை பொழுதுபோக்கு தனியாகவும், சேர்த்தும் பார்க்கும் ரசிகன் எந்த நிலையில் ரசிக்கின்றனோ அதுபோல் தான் என்மீதான காழ்ப்புக் கொண்ட நகைச்சுவை ரசிக்கப்படுகின்றது. ரசிப்பவன் யார்? பொழுதுபோக்கு இலக்கியம் படைப்பவன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன் பெயர் பேச எழுதுபவன், கூடி வம்பளப்பவர்கள், உனது சமூக அக்கறை என்ன என்ற எனது கேள்வியால் நெளிந்து அங்கலாய்ப்பவர்கள், இலங்கை அரசுடன் கூடி அரசியல் நடத்துவோர் எல்லோருக்கும் என்மீதான அரசியல் அற்ற தனிமனித காழ்ப்பை ரசிப்போர் உள்ளவரை இப்படி எழுதுவது நீடிக்கும்.

என்னை உத்தமபுத்திரன் என்ற பெயரால் குறிப்பிட்ட தன்மையில் நான் சொல்வதற்க்கு வெளியில் வாழது கோட்பாட்டுக்கும், நடைமுறைக்கும் இடையில் இடைவெளி இருக்காது வாழ போராடுபவன். ரசிக்க துணுக்கு எழுதும் ஷோபாசக்தி, இதுவரை சொன்னதை நடைமுறையில் வழுவாது முதலில் வாழ்ந்து காட்டுவது அவசியம். இராண்டாவது உமது கதைகள் இரண்டை கடந்த காலத்தில் விமர்சித்துள்ளேன். அதை மறுத்து கோட்பாட்டில் போராடவேண்டும். அத்துடன் எனது கோட்பாட்டை தத்துவார்த்த வழியில் விஞ்ஞான பூர்வமாக எதிர்த்த போராடவேண்டும். உலகில் இரு எல்லைக்குள்தான் சமுகம் பிளந்தபோய் உள்ளது. ஒருபுறம் உழைக்கும் மக்கள் மறுபுறம் ஏகாதிபத்தியம் (உழைப்பை உறுஞ்சி சுரண்டி உண்டு வாழும் வர்க்கம்) இதில் அனைத்து எழுத்தும் பக்கம் சார்ந்து ஒருமுடிவை எடுக்கின்றது. இதை மறுத்து துணுக்கு ரசிகர் மன்றம் நடத்த விரும்பின் உங்கள் கோமாளித்தனத்தல் உலகம் தலைகீழாகி விடாது.



குறிப்பு 2: எனக்கு எதிராக தனிநபர் தாக்குதல் ஊடாகவும், கடந்தகாலத்தில் சனநாயக போராட்டத்தை முன்னெடுத்த அனைவரையும், அதற்க்காக தம்மை தியாகம் செய்த போராளிகளின் போராட்ட வரலாற்றை கொச்சைப்படுத்தி சேறுயடித்த போது, இந்த ஜனநாயக உலகம் தமது சொந்த வர்க்க விருப்புடன் மௌனம் சாதித்து கடந்தகால சனநாயக போராட்ட தியாகங்களை புதைத்தை எதிர்த்து நான், "உயிர்நிழல்" (முன்னைய எக்ஸில்-1) சஞ்சிகையில் எழுதியிருந்தேன். இதைத் தொடர்ந்து பலத்த பிரதிபலிப்புகளை கேட்கமுடிந்தது. இதில் எனது நிலையுடன் உடன் பட்டவைகளை விடுத்து எதிர்நிலையில் வெளிவந்தவைகளை சுருக்கமாக ஆராய்வோம். இதில் சில நல்ல நோக்கிலும், சில காழ்ப்புணர்விலும் பிரதிபலித்தன.

1.எனது எழுத்துக்கள் (எனது பதில் விமர்சனம் முதல் எனது தத்துவ விமர்சனக் கட்டுரைகள்) மொழியில் வன்முறையை கையாள்கின்றது. இது வாசகரின் வாசிப்புக்கு இடைஞ்சலாக உள்ளது. அத்துடன் மொழியல் ரீதியில் புரியமுடியாது கடுமையாக உள்ளது என்ற விமர்சனங்கள் தொடர்பாக நான் எனது எழுத்தை மீளாய்வுக்குள்ளாக்கினேன்.

மொழியில் வன்முறைக் கையாளாமுடியுமா? இல்லையா? என்ற தத்துவ விவாதத்துக்குள் இது நகர்ந்து விடுகின்றது. மொழியை எந்த வர்க்கமும் கையாளக் கூடிய வகையில் மொழி வர்க்கம் கடந்தது. மொழி பயன் பாட்டில் வர்க்கம் கிடையாது. ஆனால் மொழி பயன்படுத்தப்பட்ட அடுத்த கணமே மொழி வர்க்க எல்லைக்குள் பிரிந்துவிடுகின்றது. மொழி சமூகத்தினதும், பொருளினதும் பிரதிபலிப்பாக பிரதிபலிக்கும் போது, இந்த சமூக வர்க்க எல்லைக்குள் உட்பட்டுவிடுகின்றது. சமூகம் வர்க்க முரண்பாட்டின் மோதலுக்குள் வினாடிக்கு வினாடி மோதும் போது, அதில் இருந்து பிறக்கும் மொழியும் வர்க்க மோதலின் ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்டேயிருக்கும் என்பது யதார்த்தமாகும். அப்படி இருக்கும் போது எல்லா வர்க்க (மொழியில்) மோதலும் நியாமானதாக, அத்துமீறதாக இருக்குமா என்ற கேள்வி எழுவது நியாமானது.

இதை எதையடிப்படையாக கொண்டு ஆராய்வது என்பது முக்கியத்துவமானது. இருக்கின்ற சமூகநிலை, அதில் நிகழும் வர்க்கப் போராட்டம், அதில் மாறுபட்ட வர்க்கங்களின் போராட்டங்கள் இவற்றில் தான் மொழியின் கையாழுகையின் சரி பிழை தெளிவாக்க உள்ள ஒரே அளவுகோள். இந்த அளவுகோள் எப்போதும் வார்க்க போராட்டத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு அளக்கக் கூடியது. மொழியலில் வன்முறையைக் கையாள்வதில் இதைமட்டுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவு கோளாக நான் எப்போதும் கொள்கின்றேன். நான் மாறுபட்ட வர்க்க நட்பு சக்திகள் மீது வன்முறை கையாண்டோ இல்லாது தத்துவ விமர்சனத்தை விடுத்து தனிநபர் தாக்குதலை நடத்தியிருப்பின், அதை சுட்டிக் காட்டும் எல்லா நிலையிலும் சுயவிமர்சனம் செய்ய தயாராக உள்ளேன்.

மொழியலின் புரியாமை தொடர்பாக ஒருசெய்தியை மற்றவர்களுக்கு புரிய வைக்கவேண்டும் என்பதால் தான் எழுதுகின்றேன். மற்றவர்களின் மீது மேதாமையை நிறுவவோ அல்லாது என்னை நாலு பேர் பேச வேண்டும் என்பதற்க்காக எழுதவில்லை. மாறாக மக்கள் மீது உள்ள துன்பங்களின் விடிவுக்கான உண்மைகளை இனம் காட்ட, அதைக் கொண்டு போராடவே நான் எழுதுகின்றேன்.

இப்படி எழுதும் போது சமுதாய ஏற்றத்தாழ்வுகளின் பிரதிபலிப்பு ஓரே வர்க்கத்துக்குள்ளும் ஏற்றறத் தாழ்வை பிரதிபலிக்கும். அறியான்மையும், கல்வி மடுவுக்கும், மேட்டுக்கும் உள்ள இடைவெளியால் பிளந்துள்ளது. ஆணால் வாழ்வியல் யதார்த்தால் நடைமுறையில் உண்மைகளை இனம் கண்பதும், போராடுவதும் நிகழ்வாக உள்ளது.

பொதுவான சமூக இயக்கத்தை முழுமையில் கண்பது மட்டுமே சமூகத்தை விடுவிக்கமுடியும் என்பதால் அதை தத்துவமாக வெளிப்படுகின்றது. இது கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மீது ஆய்வுகளை செய்து முன்வைக்கும் போது, சமூகத்தின் ஏற்ற இறக்கத்தால் எல்லோரும் புரியமுடியாத வகையில் மாறுகின்றது. இதைப் புரிந்து கொள்ள தொடர்ச்சியான தேடல், அறிதல், பரிச்சயம் அவைசியமாகும் அதே நேரம், இதை மனிதனின் யதார்த்த வாழ்வுடன் பொருத்திப் பார்க்கவும் பரிசோதித்து பார்க்கவும் கற்றுக் கொள்கின்ற போதுதான் ஒரு தத்துவத்தை புரிந்து கொள்ளமுடியும். இதில் தத்துவத்தை மறுக்கின்ற விமர்சன விவதங்களில் தத்துவ செறிவு ஆழமாக மாறுகின்றபோது புரிதல் மேலும் கடினமாகின்றது. இது பரிச்சயம் இன்றி புரிதல் கடினமானது. ஒரு தத்துவத்தை விஞ்ஞான பூர்வமான உண்மைகள் மீது நிறுவதும், அந்த உண்மை மனிதனின் வாழ்வின் பிரதிபலிப்பாக இது இருக்கும் வரை மக்கள் ஏற்றத் தாழ்வு மறையமறைய புரியும் இடைவெளி குறைந்து வரும். இருந்தபோதும் இதை விரிவாக்கின் அதை மேலும் புரிய கூடியாதாக இருக்கும். இருந்த போதும் புத்தகத்தின் நோக்கம், இது யாரை சென்று அடைய வேண்டும் என்ற எல்லைக் கோடு மட்டுமே புத்தகத்தின் செறிவை தீர்மானிக்கின்றது.

அடுத்து இத்தத்துவத்தைக் கூட மிகமிக விரிவாக நடைமுறை சம்பவங்கள் உடன் ஒப்பிட்டு, அனுபவத்துடன் பொருத்துகின்ற போது தத்தவத்தை புரிய வைக்கமுடியும். இந்த வகையில் கூலிவிவாசாயி, தொழிலாளி, பூர்சுவா வர்க்கம், முண்ணனியாளர்.. என சமூகத்தின் வேறுபட்ட பிரிவுகளின் முன் தத்துவத்தை விளக்குவது என்பது ஓரே மாதிரியானது அல்ல. மாறாக முற்றாக வேறானது. எனது தத்துவ விமர்சனக் கட்டுரைகள் முண்ணனிக்கு மட்டுமானது.

இது ஒருபுறம் இருக்க விஞ்ஞான உண்மைகளை மறுத்த, எதையும் இதுதான் என நிறுவாத கோட்பாடுகளை வைக்கின்றனர். இது எழுதுபவனுக்கே விளங்காத நிலையில் எழுதுவதாகும். உண்மைகளுக்கு பதில் கற்பனைகளையும், பொருளுக்கு பதில் கருத்தையும் வைத்து எதையும் குறித்து சொல்லாத சொற்களின் தொகுதி விளங்காததையிட்டு கவலைப்படத்தேவையில்லை. மாறாக இந்த மோசடியை அம்பலப்படுத்த வேண்டும். (உதாரணமாக கடவுள் உள்ளார் என்றும் பின்னர் விரிவாகும் தத்துவங்கள்) இது போல் சமூக விடுதலைத் தத்துவங்களிலும் கணவேண்டும்.

மொழி என்பது உலகில் பலவாக இருந்த போதும் எல்லா மொழியும் பொருளை அடையாளம் கணவும், அதை விளக்கவும், அதன் மீது செயல் படவும், அதன் இயக்கத்தை புரிய வைக்கவும் என மொழி மக்களால் உருவாக்கப்பட்டது மட்டுமின்றி மொழிக்கு பொருள் சாந்து அர்த்தைக் கொடுத்தனர். பொருளை மறுத்த கருத்து முதல்வாதிகள் மொழியின் அர்த்தை பொருளில் இருந்து மறுத்துவிடுகின்றனர். இதை பின்நவீனத்துவ வாதிகள், கட்டுடைப்பாளார்கள் .. என கூறிக் கொள்வோர் மொழியின் பொருளின் தன்மையை மறுத்து, மொழியின் அர்த்தை மறுத்த கருத்துமுதல்வாதியாக இருந்தபடி இலக்கியம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓவியம் என அர்த்தமற்ற, கருத்தற்றவைகளை புரட்சியாக காட்டுகின்றனர். இது இன்று ஏகாதிபத்தியத்தால் மறுக்கப்படும் மொழிகள், இலக்கியங்கள்.. என அனைத்து செயல் தளம் மீதும் இந்த பின்நவீனத்துவ வாதிகள் வர்க்க விசுவசத்துடன் செயல் ஆற்றுகின்றனர். ஏன் அகதியாக புலம் பெயர்ந்த ஒருவனின் பையித்திய தனத்தை, எழையின் ஏக்கமான பார்வையை, ஒரு பெண்ணின் சோகத்தை... என மனிதனின் யதாத்தை வெளிப்படுத்துவது தானே ஒரு சமூக அக்கறைக்குரியவனின் பிரதிபலிப்பாக இருக்கும். இல்லாத அர்த்தமற்ற வெளிப்படுத்தல் இந்த ஏகாதிபத்திய அமைப்பு களங்கப்படாத பிரதிபலிப்பை புரட்சியின் பெயரில் செய்வது இன்று இனம் கணப்பட வேண்டும். இந்த துரோக வேர் அறுக்கவேண்டுமா? வேண்டாமா? என்பதே அடிப்படையான கேள்வி.

2.என் மீதான வரட்டு தனிநபர் தாக்குதலுக்கு பதிலாளிக்க கூடிய முக்கியமானதா? வரலாற்றில் சரியாக இவை விமர்சிக்கப்படும் எனவே இதை தவிர்த்து இருக்கலாம். ஷோபாசக்தி போன்றோர் இச்சமூகத்தில் எதையும் சாதிக்க போவதில்லை, எழுதும் அளவுக்கு முக்கியத்துரியவர்களும் அல்ல. இதை ஒட்டி பல. இதன் தொடர்ச்சியில் என்னைப் பற்றி நான் எழுதியது அவசியமா? இப்படியான கருத்துக்களை பார்ப்போம்.

இதில் சில உண்மைகளை சுட்டியிருந்தனர் என்பதை நான் பார்க்கும் அதே நேரம் இதன் மீதான கருத்துகளை நானே வைக்க வேண்டிய துரதிஸ்டமான வரலாற்று கட்டத்தில் இருப்பது வேதனையானது. கடந்த காலத்தில் இலங்கை அரசுக்கு எதிராக, இந்தியா அரசுக்கு எதிராக, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, இயக்கங்களிடம் சொந்த ஜனநாயகத்தை கோரி போராடிய மதிப்புக்குரிய தியாகிகள், மற்றும் அப்போராட்டங்களில் கண்ணுக்கு முன்பகவே பிணங்கள் விழவிழ அஞ்சாது போராடிய வரவாற்றை, என் மீதான தாக்குதல் மூலம் சேறடித்த போது, எந்த ஜனநாயகம் பறிபோனது என்று ஒப்பாரி வைக்கின்றனரோ அதை மீள ஜனநாயகத்தின் பெயரில் ஒழித்தபோது மௌனங்களும், சிரிப்புமாக திரிந்த போதுதான் நான் எழுதவேண்டியேற்பட்டது. ஆயிரம்



போராளிகளும் தங்கள் மரணத்தை கண்டு அஞ்சாது எம் மண்ணில் நடத்திய வீரமிக்க போராட்டத்தை என்பெயரல் கொச்சைப் படுத்தியபோது நான் அன்று அவர்களுக்காக எப்படி போராடினேனோ, அதேபோல் மேலும் மூர்க்கமாக தனித் ஒருவனாக போராட வேண்டிய வரலாற்று கட்டத்தில் நிற்பதை பார்க்க தவறும் காராணத்தால் தான் எழுதுகின்றேன். ஆம் இன்று போலித்தனத்தில் ஜனநாயகம் உழலுகின்ற போது நான் அன்று போராடியவர்களின் ஒரே குரலாக, அவர்களின் கோரிக்கை மீது போராடும் மனிதனாக இருப்பதால் போராடுகின்றேன்.

அன்று போராடியவர்கள் இலங்கை அரசுக்கு எதிராக, இந்தியா விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிராக, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, தரகு நிலப்பிரபுத்துவதுக்கு எதிராக, இயக்கத்திடம் உள் வெளி ஜனநாயகத்தை கோரி வீரமிக்க கோட்பாடு, மற்றும் நடைமுறையில் போராடியவர்களில் பலரை இழந்தோம். அதற்க்காக அன்றும் இன்றும் தொடர்ந்து குரல் கொடுப்போர் தொடர்ந்தும் பலத்த நெருக்கடிகளில் போராடுகின்றனர். இது ஒருபுறம் நிகழ புலிகளிடம் மட்டும் ஜனநாயகத்தைக் கோரி (சிலர் இதற்க்கும் சற்று அப்பாலும்) எதிரியுடன் கூட்டுச் சேர்ந்து அதை தான் ஜனநாயக போராட்டமாக கட்டுவதும், அதைத் தான் தியகத்தின் போராட்டமாக சித்தரிப்பதும் அரங்கேறுகின்றது.

இந்த வகையில் பல்கலைக்கழக ஆசிரியார் சங்கம் உண்மைகளையும், பொய்களையும் கலந்து அரசு சார்பாக வெளியிடுவதும், மக்களின் உண்மை நிலவரங்களை முடிமறைத்தபடி பொய்களின் மீது அறிக்கை தயாரித்து சர்வதேச பண்நாட்டு அமைப்புகளை பாதுகாக்கும், உருவாக்கும், சட்டமுலத்தை தயார் செய்யும் ஒடுக்கு முறையாளர்களிடம் கொடுத்து எம்மக்களுக்கு எதிராக ஏகாதிபத்திய தலையீட்டை வேகப்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊக்குவிக்கின்றனர்.

இந்தவகையில் பாரிசில் கொல்லப்பட்ட சபாலிங்கம் மாபெரும் தியாகியாக காட்டவும், அவரை கொன்றவரை பெயர் குறிப்பிட்டு சொல்ல முடியாத அரசியலை ஜனநாயகக் குரலாக காட்டி, ஜனநாயகம் பேசுவதும், அதை வெளிப்படுத்த மலர் வெளியிடுவதும், இம் மலரில் துரோகிகளான அமிர்தலிங்கத்துக்கும், உமாமகேஸ்வரனுக்கும், பத்மநாபாக்கும் அஞ்சலி செய்து தியாகியாக்கி வெளியிடுவதன் மூலம் வெளியிடுபவர் ஜனநாயகத்தின் குரலாக கட்டும் போக்குப் போல் பல இன்று வெளிகிளம்புவதன் வெளிப்பாடுதான் என்மீதான கல்வெட்டும் கூட. கடந்த போராட்ட தியாகங்கள், மக்களின் விடுதலை மீதான அரசியல் பார்வை போன்றவற்றில் உறுதியாக இருக்கும் எனக்கும், கடந்த காலத்தில் போராடி தியாகியாகியோருக்கு எதிரான, கல்வெட்டு மூலம் சேறடித்தால் மட்டுமே போலிகளின் ஜனநாயகம் குறைந்த பட்சம் எழுப்பமுடியும் என்ற நிலையில் தான் கல்வெட்டு வெளிடப்பட்டது. ஆனால் மக்கள் மீதான உறுதியான எனது போராட்ட மாக்கமும், அதன் தத்துவத்தால் அமைந்த எனது விமர்சனம் முன் தோல்வி கண்டது.

சபாலிங்கம் கொலை புலம் பெயர் நாட்டில் நடந்த முதல் அரசியல் படுகொலை என்றவகையில் மிகமுக்கியத்துவம் வாய்ந்தது. இக்கொலை அரசியல் முடிவு அல்ல தொடரும் என்பதையும் பறை சாற்றியது. இக்கொலையின் நோக்கம் அம்பலப்படுத்தப்படவேண்டியதுடன் மட்டுமின்றி, இந்த அரசியலுக்கு எதிராக போராடுவது அவசியமாகும்.
மாறாக கொல்லப்பட்டார் என்பதற்காக அவரை மாபொரும் தியாகி என காட்டுவது உண்மையில் போராடியவர்களை கொச்சைப்படுத்துலதாகும்.
சபாலிங்கம் என்ன இலக்கியம் படைத்துள்ளார்?. அவர் மனிதபிமானி என்கின்றனர் எப்படி? அவரின் அரசியல் என்ன?

பல்கலைக்கழகத்தின் அறிக்கைகளை பிரஞ்சில் மொழி பெயர்த்து ஏகாதிபத்திய நாடுகள், ஒன்றுபட்டு உலகை அமெரிக்காவுக்கு போட்டியாக ஆளத் துடிக்கும் ஐரோப்ப பாராளமன்ற உறுப்பினருக்கு கொடுத்த அரசியல் தான் சபாலிங்கம் அரசியல். இலக்கிய முயற்ச்சியாக வெளியான, வெளி வர சில நூல்களை உதவினார். இந்த நூல்களை விற்பதில் வியாபாரியாக இருந்தார். இதைவிட சிறு சஞ்சிகையில் சில எழுதினார். 50 வீதம் வட்டி வாங்குபவன் போல் இவர் அல்லலப்பட்டு வந்தோரிடம் கேஸ் எழுதி பணக்காரா ஆனவர். இதைத் தான் கேஸ் எழுதிய மனிதபிமானி என்கின்றனர். இதுதான் அவரின் கடைசிக்கால செயல்பாடு.

இதற்கத்தான் தியாக வேடங்கள். தமிழ்தேசிய விடுதலைப் போராட்ம் தொடங்கிய காலத்தில் இந்தி பாராளமன்றம், சட்டசபை உறுப்பினருக்கு அறிக்கை, தகவல் மக்களின் ஜனநாயகத்தின் பெயரில் வழங்கித்தான் இந்தியா தலையிட்டை ஊக்கப்படுத்தி தலையிடவைத்தனர் பலர். அதைத்தான் யாழ் பல்கலைகழக ஆசிரியர் குழுவும் சரி, சபாலிங்கம் சரி, இதுபோல் நியாப்படுத்தி செய்வோரும் ஏகாதிபத்திய நேரடி தலையீட்டை ஊக்குவிக்கின்றனர். இதுதான் சபாலிங்கத்தின் அரசியல். ஏன் ஜனவரி 3ம் திகதி தினமுரசில் ஈ.பி.ஆர்.எல்.எப் புலிக்கு எதிராக யாழ்குடா நாட்டில் கையெழுத்து வாங்கி உலக தலைவருக்கு அனுப்பிய செய்தியை வெளியிட்டிருந்தது. இதைத்தான் சபாலிங்கம் செய்தாரே ஒழிய வேறு ஒன்றுமல்ல. இந்த அரசியல் போக்கை தியாகமாக காட்டுவது, மலர்கள் வெளியிடுவது, அதையொட்டிய நடைமுறைக்கு எதிரான கோட்பாட்டு செயல் தளத்தை கட்டியமைக்கும் இந்த போக்கில் தான் கல்வெட்டின் அவசியம் அவர்கள் முன் பிறக்கின்றது. இதற்க்கு எதிரான போராட்டத்தில் தான் பதில் அரசியல் வழியில் அவசியமாகின்றது. இலங்கை அரசுக்கு எதிராக, இயக்கத்திடம் ஜனநாயகத்தை கோரி, இந்தியா அரசுக்கு எதிராக, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, தரகு நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக போராடாத அனைத்து செயல் தளங்களும், இதில் ஒன்றுடன் கூட சமரசம் செய்தாலும் மக்கள் விரோத அரசியலாகும். இதுதான் எமது அரசியல் நிலை. இதுதான் அன்று போராடி தம்மை இச்சமூகத்தின் விடுதலைக்காக அர்பணித்தவர் நிலையும் கூட. இதற்க்கு எதிராக வெளிவரும் சஞ்சைகள், மலர்கள், தனிநபர் செயல்கள் என அனைத்தையும் எதிர்த்து நாம் போராடுவோம். இதில் சமாரசம் என்ற கேள்விக்கே இடமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பற்றி நான் எழுதியது என்பது வலிந்து எழுதப்பட்டவையல்ல. மாறாக என் மீதான சேறுயடிப்பு, மீது அவைகளை வைப்பதும், அது கடந்தகால ஜனநாயகத்துக்கான போராட்டத்தை பாதுகாக்கும் வழிகளில் வைக்கப்பட்டவையே. கடந்தகால போரட்டங்களை சரியாக மதிப்பிடவும், அதை அரசியல் ரீதியல் விமர்சிக்கும் போது வரவேற்பதில் பின்நிற்க்கமட்டேன். ஏன்எனின் எனக்கே விமர்சனம் உண்டு. ஆனால் சேறுயடிக்கும் போது அதை எதிர்த்து போராடவும் மேற்க்கூறிய காரணத்தால் பின்நிற்க்கவும் மட்டேன்.

3.என்மீது தாக்குதல் நடத்த எனக்காக வெளியிடு ஒன்றை இருள்மலர் சுகிப்புக் குழுவைச் சார்ந்த நால்வர் நாட்டாமை என்ற சமூகப் பொறுப்பற்ற தனிநபர் வக்கிர இதழ் வெளியிட்டிருந்தனர். மக்களுக்கு பிரசுரிக்க மறுத்த கட்டுரைகளை வெளியீடுவதாக பிற்றிக் கொண்டு தனிநபர்கள் மீதான தாக்குதல்களை பொய்கள் அவதூறுகள் மீது பொழிந்திருந்தனர். மக்களுக்கு தெரியாத, சொல்லா முடியாத பல ஆயிரம் விடையங்கள் குவிந்திருக்க, மக்கள் அறிவற்ற ரீதியல் சூனியமான அறிவில் இருக்க அவற்றை தகர்ப்பதற்க்கான சமூக அக்கறைக்கு பதில் தனிபர்கள் மீது ஆதாரமற்ற தாக்குதலை நடத்தியுள்ளனர்.

உதாரணமாக என்.எல.எப்.ரி யிடம் இரண்டு எஸ்.எம்.ஜி இருந்தாக கூறுகின்றார். அப்படி இரண்டு இவ் ஆயுதம் இருந்ததில்லை. அடுத்து கோயில் கொள்ளையடித்தாம். என்.எல.எப்.ரி எந்தக் கோயிலையும் கொள்ளையடித்ததும் இல்லை. அடுத்து உமாமகேஸ்வரன் கூட்டணியுடன் சேர்ந்து சாதி ஒழிப்புக்கு போராடியவராம். எங்கே சாதி ஒழிப்புக்கு கூட்டணி போராடியாது. உமாமகேஸ்வரன் எங்கே எப்ப போராடியவர். மாறாக வருடம் வருடம் கட்டுவன் சந்தியில் வறுத்தலை பள்ளருக்கு சன்னதி காவடியின் போது உமாமகேஸ்வரன் உள்ளிட்ட கூட்டணியின் கோட்டையின் தளபதிகள் அந்த மக்களை அடித்து நொருக்கியது இலங்கைச் சாதி வரலாறு. எதிர் காலத்தில் சாதி ஒழிப்பைச் செய்ய தலித்துகள் கூட்டணியிடம் கால்களில் விழுவது மிகசிறப்பானது. இப்படி ஆதாரமற்ற பலவற்றை கூட்டாக எழுதி வெயிட்டவர்கள் தமது சொந்தப் பெயரில் அதை வெளியிடாத மோசடியிலும் ஈடுபட்டனர்.

எம்மண்ணில் தமிழ்மக்கள் பெயரில் நடத்திய தாக்குதல்கள், கொலைகளின் தமிழ்மக்கள் என உரிமை கோரி விட்ட அறிக்கைகள், சுவரொட்டிகள் எல்லாம் இந்த வகையானதே. ஆதாரமற்றவற்றை செய்யும் போது புனையான பெயர்கள் அதற்கான வராலாற்று அரசியலுடன் அரங்கேறிவிடுகின்றது. அர்த்தமற்ற வகையில் 1983 இல் காளன் மிளைப்பது போல் உருவான 32 இயக்கங்கள் எப்படி உருவனதோ அதே போன்று, கம்புயூட்டர், போட்டோ பிரதியொடுக்க கொஞ்சப் பணம் இவ்வளவும் போதும் பெயர் இல்லாத, அல்லது பெயருடன் எதையும் புலம்பிவிட முடியும். இந்த மாதிரி அவதூறுகளை விதைக்கும் செய்திகளுக்கும், அதைத் தாங்கி வரும் வெளியீட்டுக்குப் பின்னால் எந்த சமூக அக்கறையும் இருப்பதில்லை. என்பது அவர்களே ஒத்துக்கொள்வதுதான்.

எமது துண்டுப்பிரசுரத்தை ஓட்டி எந்த விதமான அரசியல் விமர்சனத்தையோ, பதிலையோ அளிக்காத தனிநபர்பற்றியும், கடந்தகால ஜனநாயக போராட்டத்தையும் தூற்றித்தான் புலம்பமுடிகின்றது. இது போன் தூற்றல்களுக்கு பதிலாளிப்பது என்பது அவசியமற்ற வகையில் அது புளுத்து நாற்றம் காணத் தொடங்கியுள்ளது.




சமர் உங்கள் பத்திரிகை
அதை வளர்க்க
உங்கள் கரங்களை
பற்றி

**நிற்கிறது என்றும்..**
**வாருங்கள், வர்க்கப் போரை**
**விரைவு படுத்துவோம், உரமூட்டுவோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பால் மணம் மாறாத.. சிறுமி மீதான பாலியல் வன்முறைக் கொலையின் பின்னணி



இக் கட்டுரை சக்தி இதழ்க்கு பிரசுரிக்க என எழுதப்பட்ட போதும் அவர்கள் கருத்து உடன்பாடு இன்மை கருதி பல பகுதிகளை நீக்கி விட்டனர். அவைகளை உள்ளடக்கி இக் கட்டுரை மீள பிரசுரிக்கின்றோம். உடன்பாடின்மை எது என தெரிவிக்காத நிலையில், அதை பிரசுரிக்காத நிலையில் என் அனுமதியின்றியும் வெட்டியிருந்தனர். அனேகமாக வெட்டிய பகுதிகள் அஞ்சலியின் பின்னால் ஆணாதிக்கம் மீள அரங்கேற்றிய ஆணாதிக்க ஒழுக்கத்தை அம்பலப்படுத்திய நிலையில் நட்புக்காக அரசியல் சமரசம் காண்பது ஆணாதிக்கத்தை ஒழிக்காது என்பதை சுட்டிக் காட்டவேண்டியுள்ளது.





இவை தொடர்பாக சக்கி ஆசிரியர் குழுவைச் சேர்ந்த நபர் ஒருவர் என்னிடமும், வேறு நண்பர்களிடமும் வெட்டி நீக்கியது தவறு என்பதை எற்றுக் கொண்டார். நான் கற்பழிப்பு என்ற சொற் பதத்தை மட்டும் மாற்ற கருத்து முரண்பாட்டுடன் அனுமதித்து இருந்தேன்.

இன்று கருத்துச் சுதந்திரத்தை வானளவுக்கு உயர்த்தும் பின்நவீனத்துவாதிகளும், அது சார்ந்த கோட்பாட்டளருகளுமே இப்படி வெட்டி கழிப்பதன் பின்னால் உலாவுவது யதார்த்தமாகிவிடுகின்றது. கருத்துச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*சுதந்திரம் என்பது மார்க்சியத்துக்கு எதிராக புரட்சிக்கு பிந்திய சமூதாயத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான சுரண்டும் ஒடுக்கும் கருத்தை தக்கவைக்கவும், பாதுகாக்கவும் கோருபவர்கள் புரட்சிக்கு முன்னால் பாட்டாளி வர்க்க கருத்தை மறுப்பதும் என அவர்களின் ஜனநாயக பூச்சு எல்லைப்படுத்தப்படுகின்றது என்பதை சக்தி ஆசிரியார் குழுவுக்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.*

பாரிசையும், புலம் பெயர் சமூகத்தையும் அதிர்ச்சிக்கும், ஆத்திரத்தக்கும் உள்ளாக்கிய 11 வயது சிறுமி நிதர்ஷினி மீதான கற்பழிப்பு, படுகொலை, கப்பம், கொள்ளையின் பின் தன்னெழுச்சியாக ஆயிரக்கணக்கில் தமிழ் (கணிசமான பிரஞ்சு மக்களும்) மக்கள் திரண்டு தமது அனுதாபத்தை, அபிராயங்களை வெளிப்படுத்தினர்.

மனிதகுலம் வெக்கி தலைகுனியும் வண்ணம் பாடசாலையால் வந்து பசி தீர்க்க ஆவலாக உண்ண புறப்பட்ட போது, காமப் பாசியால் அலைந்த இரண்டு நாய்களின் (பேட்சன், தியாகரூபன்) உணவாகியது மட்டுமின்றி, அக்குழந்தையை சுவைத்துண்டு வெறிதீர்த்த பின் மின்சார வயரால் கழுத்தை இறுக்கி தமது வழக்கம் போலவே கொலைக் கலாசாரத்தின் அனுபவத்துடன் தடயத்தை அழிக்கும் கைவந்த கலையாக முடித்து வைத்தனர்.

தமிழ் சமூக ஒழுக்க விழுமியங்கள் பெண் குழந்தைகள் மீது மிக கண்டிப்பான வகையில் கடைபிடிக்கும் ஆண்கள் சாந்த ஆணதிக்கமும், அந்த ஆண் வர்க்கமும் தான் இப் படுகொலைக்கு முழுப் பொறுப்பாகும்.

குற்றவாளிகள் மிக திட்டமிட்ட வகையில் இயக்க போராட்ட அனுபவத்துடன் இந்த கோராத்தை நடத்தி தப்பியபோது, தற்செயலாக பிடிபட்ட நிலையில், அதன் பாதுகாப்பில் எல்லோரும் குற்றவாளி மீது காறி உமிழ்ந்தார்கள். ஆனால் குற்றவாளி தானாக சமூகத்தில் உருவாவதில்லை. குற்றாவாளியை உருவாக்கு பவர்களே பின்னால் குற்றவாளி மீது கண்டனம் செய்வதன் மூலம் தம்மைப் பாதுகாத்து ஒழித்துக் கொள்கின்றனர்.

பாலியல் வன்முறை எப்படி அவன் முன் இரக்கமின்றி தோன்றுகின்றது? இந்த பாலியல் வக்கிரத்துடன் கொலை வெறி எப்படி அரங்கேறுகின்றது? உழைக்க மறுத்து கொள்ளையடித்து சொகுசாக எப்படி வாழமுடிகின்றது. என்பதை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்.

இந்த கொலை நடந்த அதே வாரம் வெளியாகிய பிரஞ்சு சஞ்சிகையான "QUESTIONS DE FEMMES" (பெண்கள் பற்றிய கேள்விகள்) பத்திரிகையில் பொருத்தமான தலைப்பில் "MARCHE DU SEXE – LES FEMMES AUSSI" (பாலியல் சந்தை - பெண்ணும் கூட) கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது.

பாலியல் என்பது மனிதர்களில் இயல்பானது. இந்த பாலியல் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சமூகம் இருக்காத எல்லா நிலையிலும் ஆண் -பெண்ணுக்கு இடையில் முரண்பாடுகள், வன்முறைகள் இயல்பாகின்றன. இந்த இடைவெளியில் கட்டியமைக்கப்பட்ட ஒழுக்கம் மனித வளர்ச்சிக்கு எதிரானதாக உள்ள போது தனிமனித ஒழுக்க மீறல்கள் சமூகம் மீதான வன்முறையாக வெளிப்படுகின்றது.

இந்த சமூகத்தின் மனித வளர்ச்சியின் இயல்பான பாலியல் தேவை மறுதலிக்கப்பட்டு, இது இடையூறாக மனித வளர்ச்சிக்கு மாறி நலம் அடித்த மனிதர்களை ஆண் - பெண் வேறுபாடின்றி உலகில் விதைக்கப்பட்டு வெம்பிப் போனவைகளை சமூகத்தின் சனநாயக எதிரியாக காட்டிய பின் அறுவடைகளை ஆணாதிக்க முதலாளித்துவ வர்க்கம் சூறையாடுகின்றது.

இந்த வகையில் நலம் அடித்த ஆண் - பெண் சமூகத்தின் முன் பெண் செக்ஸ் பதுமையாக எல்லாத்துறையிலும் மாற்றப்பட்டு விட்டாள். திரைச் சினிமாவில், குழந்தைகள் முன் கொட்டிக் குவிந்துள்ள கம்பியூட்டர் விளையாட்டுகள், கம்பியூட்டரில் ஆண் பெண் உறவை விளையாட்டுப் போல் செய்து ஈடுபட்டு இன்பம் கணுதல், காட்டுன்கள், விளம்பரங்கள், பயன் படுத்தக் கோரும் உடைகள், தொலைக்காட்சி, பொழுது போக்குகள் என திரும்பும் இடமெல்லாம் பெண் மீதான் செக்ஸ் கவர்ச்சியே பின்நவீனத்துவ கோட்பாட்டில் உலகமயமாக்கப்பட்டுள்ளது. இன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுதலையாக பெண்களைக் கவர ஆண்கள் கூட பெண்கள் முன் கவர்ச்சிகரமாக மாற்றப்பட்டு விட்டனர். செக்ஸ் கிளப்புகள், கபரேக்கள், மசாஜ் நிலையங்கள், துகில் உரியும் நிலையங்கள் ஆண் - பெண் கூட்டாகவும் தனித்தனியாக அவரவர் ரசனைக்கு ஏற்ப இந்த சனநாயகம் பாதுகாக்கின்றது.

ஆணாதிக்க ஆண் முன் இந்த கவர்ச்சிகரமான வியாபார ரசனை மோசமான பண்பியல் பாய்ச்சலை, தனிநபர் ஒழுக்க மீறல்களை அரங்கேற்றுகின்றது. அப்போதுதான் இது சட்டத்தின் முன் மாபெரும் குற்றமாக, ஆணாதிக்க ஒழுக்கத்தின் முன் அத்து மீறலாக வடிவம் பெறுகின்றது.

பால்மணம் மாற தமிழ் சிறுமியின் மீது தமிழ் ஆணாதிக்க ஒழுங்கு மீறல் மூலம் வன்முறையைக் கையாண்ட தமிழ் காமுகன் எப்படி உருவாக்கப்படுகின்றான். இதுவல்லவா எதிர்காலத்தில் சிறுமிகள் மட்டுமல்ல, பெண்கள் மீதான பாலியல் வன்முறையை தடுக்க போராடமுடியும்.

தமழில், ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என சாதரண உலகம், கடந்தகால இலக்கியத்தின் உவமைகள் உடன் பெண்ணை ஆணின் பாதுமையாக காட்டவே செய்கின்றன. பெண் ஆண் போல் ஓர் உயிர் என்பதை ஏற்க்க மறுத்து ஆணின் நுகர்வுக்கும், போகத்துக்கும், ஆணின் கடமைக்கும் மட்டுமே ஆண்டவனான ஆண்டவன் படைத்தான் என்பதன் மூலம், பெண்கள் கணவன் என்ற ஆணின் முன் செக்ஸ் பண்டமாக மட்டும் இருக்க கோரும் ஒழுக்கவியல், மற்றைய ஆண்கள் முன்னும் நுகர்வுக்குரிய பொருள்தான். இந்த ஆணாதிக்க ஒழுங்கைக் கட்டிக் காக்கும் திருமணச் சடங்கு மந்திரமே எப்படி பெண் மீதான கற்பழிப்பை செய்கிறது எனப் பார்ப்போம். சமஸ்கிருத மந்திரத்தின் ஒரு பகுதியில் பெண்ணை நோக்கி "நீ இதுவரை இந்திரனுக்கு ஒருநாள் மனைவியாக, பின் தேவர்கள் அனைவருக்கும் மனைவியாகி பின் எனக்கு மனைவியாகி இப் பொழுது நான் உன்னை இவனுக்கு மனைவியாக்குகிறேன்"4 என்கின்ற போது பெண் பண்டமாக, இறுதியில் ஓர் ஆணின் வக்கிர செக்ஸ் தேவையை பூர்த்தி செய்யும் உயிரற்ற ஜடம்தான். படத்தில் முகம் பார்த்த திருமணங்கள், பெண்ணைப் பார்த்த திருமணங்கள் ஓர் ஆணை பூர்த்தி செய்வதையே நோக்கியுள்ளது. புலம் பெயர் சமூகத்தில் கணிசமான கனடா இளைஞர்கள் தமது மனைவியை, குழந்தையை கனடாவில் விட்டுவிட்டு இந்தியா சென்று தமது உல்லாசத்தை எப்படி கழிக்கின்றனர் எனப் பார்ப்போம். தாம் திருமணம் செய்ய வந்தாக கூறி கன்னிகழியா இளம் பெண்களை சீதனத்துடன் பெற்று, அவர்கள் பணத்தில் ஒருமாதம் சம்மதத்துடன் கற்பழித்து நடுரோட்டில் பிள்ளையுடன் விட்டுச் செல்வது வாடிக்கையாக உள்ளது. கம்பூச்சியாவில் பயங்கர கொலைகாரன் என்று ஏகாதிபத்தியம் கூறிய பொல்போட்டை ஒடுக்கி சமாதானம் காணச் சென்ற அமெரிக்க தியாக வீரர்கள் கன்னிகழியாத இளம் பெண்ணை 50000 ரூபாவுக்கு பணம் கொடுத்தே வாங்கமுடிந்தது. யூத மூளை என்பதாலோ என்னவோ பணம் வாங்கி, கொழுத்த விருந்துடன் உல்லாச பயணம் செய்யும் தமிழன் மூளை அல்லாவோ மூளை! இங்கு ஒரு பெண் தனது திருமணத்தில் அவள் சம்மதத்துடன் எப்படி கற்பழிக்கப்படுகின்றாள் என்பதை காட்டுகின்றது. இங்கு ஏமாற்றுவது மட்டும்தான் நிகழ்ச்சியில் வேறுபடுகின்றது. அதைத் தாண்டி எந்த விளக்கத்தையும் தங்கை என்பதாலோ, அக்கா என்பதலோ மாறிவிடுவதில்லை. அக்கா, தங்கை என பல வகையில் விளித்தல் கூட தப்பு நடந்து விடும் என்ற ஒழுக்கத்தை பாதுகாக்கத்தான்.

இன்று உயர்ந்த கலை படைப்பாளி எனப் பலர் புகழ்ந்து பிழைக்க, தமிழ் சினிமாவில் கதாநயாகி முதல் அனைத்துப் பெண்களின் தெரிவு, காட்சி, காட்சி படிமங்கள், வசனங்கள், பாடல்கள் .. என அனைத்தும் பெண் மீதான கவர்ச்சியை வைத்து சினிமா வாக்கி ஆணாதிக்க சமூகம் முன் காட்சிப் படுத்தப்படும் போது, அதனால் உணர்ச்சி வயப்பட்ட ஒரு நபர் சமூகமீறலை செய்து சமூக ஒழுக்கத்தை மறுத்து காமுகனாகி பெண்ணை குதறும் போது, எப்படி அவன் மட்டும் குற்றவாளியாக கணமுடியும். இந்த சினிமாவைத் தயாரித்த, அதைப் போற்றும், அதில் கலை அம்சத்தை மெச்சி பாதுகாக்கும்,. என அனைவரும் தான் முதல் குற்றவாளிகள். அதன் பின் இதில் ஈடுபட்டவன் குற்றவாளியாகின்றான். ஆனால் வழக்கில் எதிர்மறையே எப்போதும் உள்ளதுடன் தூண்டியவன் இந்த அமைப்பின் காவலன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகின்றான்.

இன்று வெகு விமர்சையாக நடத்தும் அரங்கேற்றங்கள் எப்படி பாலியல் தூண்டுவதையே அடிப்படையாக கொண்டுள்ளது எனப் பார்ப்போம். இசை, ஆடுவது எல்லாம் மனிதன் உழைத்துவிட்டு அதன் களைப்பை போக்க, தமது துயரங்களை மறக்க தன்னியல்பில் தமக்குள் உருவானவை என்பதை மறுத்து, நடனங்கள் ஆடிக் காட்டுவதற்க்காக, அதை இரசிப்பதற்காக பெண்கள் பல விதத்தில் அலங்கரித்து அரங்கேற்றப் படுகின்றனர். அதவாது மொடலிஸ்ற் எதை செய்கின்றாளோ, அதே போன்ற வாழ்க்கையில் எந்த விதத்திலும் நடனத்தை, இசையைப் பயன் படுத்தாத வகையில் அரங்கேறும் அரங்கேற்றங்கள், பெண்ணை ஆணாதிக்க சமூகம் முன் இரசிப்புக்காக, கவர்ச்சிக்காக அரங்கேற்றுவதன் மூலம், அப்பெண் பல ஆண்களின் கனவுக் கன்னியாக, அதே நேரம் நினைவில் கற்பழிக்கப்பட்டு, சந்தர்ப்பம் கிடைத்தால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக கூடிய வகையில் அரங்கேற்றம் செக்ஸ் பதுமைகளை சமூகம் மீது கவர்ச்சியாக்கிவிடுகின்றது. அரங்கேற்றம் பழைய நிலப்பிரபுத்துவ கால மன்னர்கள் முன், நிலப்பிரபுக்கள் முன் பெண்ணை ஆடவிட்டு பெண்ணை அவர்களின் வைப்பாட்டியாக மாற்றிய தொடர்ச்சியில் தான் உருவானது. ஆனால் இந்த போக்கு முடிவுக்கு வந்தாலும் ஏகாதித்தியம் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என பழையதை மறுத்து புதியதை கோரும் பின்நவீனத்துவ உலகமயமாதலில் ஆண்களுக்கு விளம்பரமாக, கவர்ச்சி நாயகியாக, அப் பெண், ஆணாதிக்க வாதிகளால் மனதிலும், படத்திலும் கற்பழிக்கப்பட மட்டுமே அரங்கேற்றம் நீடிக்கின்றது.

இதுபோல்தான் சமத்தியசடங்குகளும் நடக்கின்றன. ஒரு பெண் ஆணின் ரசனைக்கும், மனதில் கற்பழிக்கவும் பிள்ளைபெற தயாராக பெண் உறுப்புகள் வளர்ச்சி பெற்று விட்டது என்பதை பாறை சாற்றும் வகையில் மட்டும் சடங்குகள் என்ற பெயரால் நடத்தப்படும் கேவலங்கள், ஆணாதிக்க சமூகம் முன் அப்பெண் கூர்மையான பார்வைக்குள்ளாக்கப்படுகின்றாள். ஏன் கொல்லாப்பட்ட அக் குழந்தையின் சமத்திய சடங்கு மிக அண்மையில் தான் பெரிதாக கொண்டாடியதாக அறியும் போது, குற்றவாளிகளுடன் இருந்த சட்டத்துக்கு புறம்பான கொடுக்கல் வாங்கலுடன் பெற்றோரின் முன் தொடர்பு, சமர்த்திய சடங்கு மூலம் பிளளையை வித்து பணம் வறுகும் பெற்றோரின் அழைப்புக்கு உட்பட்டு இருக்கும் வாய்ப்கள் இருக்கும் என ஊகிக்க முடிகின்றது. இறந்த நிதர்ஷினியின் பெயரில் எழுதிய கவிதையில் ஆணாதிக்கம் கொப்பாளிக்கும் வரிகளைப் பாாப்போம். "..கரும்பே, கற்கண்டே, என்று - என்னை ஆரத் தழுவி - பாசம் சொறிந்து - வாழ்த்துக்கள் கூறி - மாதம் எட்டுகூட ஆகவில்லை"1 என்று மீளவும் இச் சமூகம் முன், மீள அக் குழந்தையை கற்பழித்தை இது (என்ன எட்டு மாதம்) காட்டவில்லையா? அக்குழந்தை மீதான ஆர்வத்தை, துண்டுதலை பொறுப்பற்ற ஆணாதிக்க பெற்றோர்கள் தமது பொறுப்புணர்ச்சியற்ற போக்குகளால் ஊக்குவித்தனர் ஊக்குவிக்கின்றனர். ஒரு பெண் தனது இறந்த முட்டையை வெளியேற்றுவது என்பது இயல்பானது. ஆனால் அந்த இயற்க்கையின் வளர்ச்சி மாற்றத்தை விற்பதிலும் பாதுகாப்பதிலும் சமூக சடங்குகள் என்ற பெயரில் பணச் சடங்கு நடத்தும் சீராழிவுகள் பெண் குழந்தைகளை சுதந்திரமாக இந்த ஆணாதிக்க உலகில் நடமாடவிடாது ஆண்கள் முன் வெட்கிப் போய் வன்முறைக்கு பலியிட தயாரான ஆடுகளாக நடமாவிடுகின்றனா் இந்த கேடுகெட்ட சமூகம். நாடகம், கதை, கவிதை, ஓவியம் ... என இலக்கியத்தில் பெண் வருணிப்பு என்பது ஆண்முன் கிளர்ச்சியை ஏற்படுத்தும் உளவியலாக உருப்பெறுகின்றது. இதன் வெளிப்பாட்டை நடைமுறைப்படுத்தும் ஒருவனை குற்றவாளியாக காட்டி துண்டுப்பிரசுரம், அனுதாப அஞ்சலிகள் குவிப்பதால் இந்த உணர்ச்சிசை தூண்டும் போதைகளை மறைமுகமாக பாதுகாக்கின்றனர். போதை மனிதனை மெய் மறக்கச் செய்கின்ற போது சமூகத்தை கட்டுடைத்து ஒழுக்கத்தை மீறிய குற்றத்தை துாண்டியதே, போதையே ஒழிய தனிப்பட்ட அவன் அல்ல. யாரும் கற்பழிப்பதற்காக பிறப்பதில்லை. சமூகம் தான் குற்றவாளிகளை உருவாக்கின்றது. அது ஒருசிலர் மீது கட்டுப்படுத்த முடியாத வெறியாக வளர்ந்து விடும் போது திட்டமிட்ட வகையில் அதை அனுபவிக்க தொடங்கின்றது.

சமூகத்தை புரட்டிப் போடப் போவதாக கூச்சலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈடுபடும் பின்நவீனத்துவ வாதிகள் கூட அண்மையில் எக்ஸில் 5 இல் பிரஞ்சில் கவிதை எழுதுவதாக கூறப்படுபவரும், புகலிட சிறந்த சிறு கதை எழுத்தளார் (என உப்புச் சாப்பு இன்றி புகழ்பவர்கள்) தனது பெயரை மறைத்து "ஜெயந்தீஸ்சன்" என்ற புணைபெயரில் தனது ஆசையை நண்பியிடம் கூறி நண்பிகள் உடன் கூட்டுக் கலவி செய்ய வேண்டும் எனக் கூறி பலவித ஆசைகள் ஐடியாக்களும் (நிதர்ஷினி மீது அந்த வன்முறைகள் குதறிய போது இரண்டு மிருகத்தின் கூட்டு கலவியின் ஐடியாக்களை இந்த எழுத்துக்கள் போன்றவைதான் தான் துண்டியதோ?) மின்னிப் பொறித்தன என தனது வக்கிரத்தை கொட்டுகிறார். இது போல் இருண்ட 'இருள் வெளி' மலரில் அரவிந் அப்பாதுரை ஒரு பெண் சினிமா பற்றிய புத்தகம் பார்த்து ரஜனி, கமல்,..என போட்டோ பார்த்து பக்கத்து அறையில் இருந்தவர்கள் உடன் உறவு கொள்ள ஆசைப்பாட்டாள் என்கின்றார். இது போல் பக்கத்து அறையில் இருந்த மூவருடன் உறவு கொள்ள எண்ணினால் அதையே கற்பழிப்பாக நடத்தினால், செய்ய ஆசைப்பாட்டால் இலக்கியமோ? கனடா நாட்டில் ஒரு பெண்ணிலைவாதியுடன் உறவு கொண்டது போல் பாவனை செய்து எழுதிய எழுத்தாளரை கற்பழித்த குற்றச் சாட்டில் கம்பிகளை எண்ண வைத்தது. இதே போல் எக்சில் -2 இல் பெண்கள் தன் மார்பை இந்தாபிடி இந்தாபிடி என திரிபவர்கள் என சுகன் எழுதியதும், அதை அம்மாவில் சேனன் போற்றியதையும் (இதற்க்கு சுகன் தண்ணிர் அடிக்க 100 பிராங் வழங்கினார்) பார்க்கின்றோம். ஏன் இதை பிரசுரித்தோர், இதைப் போற்றுவோர் தமது மணவியுடனோ, தமது தங்கையுடனோ, அல்லது அப் பெண் தனியாகவோ, வேறு பெண்களோ போகும் போது இதை வாசித்து இதை சரியென ஏற்ற அல்லது உணர்ச்சி வயப்பட்ட ஒருவன் பெண்கள் தங்கள் மாாபை இந்தாபிடி இந்தாபிடி என பிடிக்க திரிபவர்கள் என பின்நவீனத்துவ தத்துவப்படி பிடித்தால், பிடித்தவனை ஆணாதிக்கவாதி என கூறி களுவில் ஏற்ற பின் நிற்க மாட்டார் எழுதி பிரசுரித்தவர்கள் ஈறாக. ஆனால் உண்மையான குற்றவாளி யார்? இதை எழுதி தூண்டிவர்களே என்பது மறைக்கப்பட்டு, இலக்கிய இரசணையால், ஊர் உலகத்தில் இல்லாதையா எழுதினோம் என்றும், கட்டுடைப்பு இப்படித்தான், கவிழ்த்துப் போடால் இதுதான், ஒழுங்கு மீறலின் உண்ணதமான படைப்பு என பலவாக கூறி குற்றத்தைத் தூண்டியவன் தப்பிவிடுகின்றன். இதைத் தான் நடைமுறையில் குற்றவாளி ஊர் உலகத்தில் இல்லாததையா என்று நடைமுறைப்படுத்தினான் என்பதை மறுக்க முடியாது. இலக்கியம் வேறு நடைமுறை வேறு அல்ல இந்த உலகத்தில் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இதற்க்கு உண்மைச் சம்பவம் ஒன்றை சுட்டுவது அவசியம். யாழ் பல்கலைக்கழகத்தில் 1985 இல் நடந்த ரக்கிங்கை தொடர்ந்து அதில் பெண்கள் பற்றியும், ஒரு குறித்த பெண்ணை சுட்டியும், அப் பெண்ணின் மார்பு பற்றிய வருணையால் உந்தப்பட்ட இரண்டாம் வருட மாணவன் முதலாம் வருட பெண்ணின் மார்ர்பை சிலர் முன் பிடித்தான். இதனால் அவமானப்பட்ட பெண் அன்றில் இருந்து தனது படிப்பை தொடராத மன நோயயாளியாக சமூகத்தில் இருந்து அன்னியப்பட்டாள். இந்தச் சம்பவம் தெரிந்தவர்கள் மறைக்க, தெரிந்த நிர்வாகம் முடிமறைத்த நிலையில் என்முன் சில பெண்கள் இதை கூறினர். இதை அடுத்து உடனடியாகவே பகிஸ்ப்புக்கு அழைப்பு விடுத்து ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கவே பல்கலைக்கழக மானம் காப்பாற்ற விழுந்தடித்துவந்த நிர்வாகம் உடனடியாகவே அம் மணவனை மூன்று வருடம் பாடசாலையில் இருந்து நீக்கியது. இருந்த போதும் உண்மையான குற்றவாளி அவனை தூண்டிய வக்கிரங்களே என்பதுதான் யதாத்த உண்மையாகும். தூண்டிய குற்றவாளிகள் இன்று பேரசியர்களாக, ஆசிரியர்களாக, சமூகத்தின் முன்னோடியாக சமூகத்தை வழிகாட்டுகின்றனர். இதைத்தான் சிலர் சமூக மாற்ற இலக்கியமாக இதையே செய்ய தமது ஆணாதிக்க வக்கிரத்துடன் எழுதியும், பாராட்டியும், பிரசுரித்தும் அங்கலாய்க்கின்றனர்.

1995 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட பெண்கள் கூறி நான் தனியாக விநியோகித்த துண்டு பிரசுரத்தில் "ஒரு மணவியின் மேலாடைகளை அவள் எவ்வாறு கண்ணாடி முன்நின்று களற்றுவாள் என்று அவள் முன்னாலே லேசாகவே பேசும் நீங்கள் உங்கள் தங்கையின் மேலாடை களற்றப்படுவதைப் பற்றி யராவது பேசினால் என்ன செய்வீர்கள்?" எனக் கேட்டு "கிராமிய நிலப்பிரபுத்துவப் பண்பாடு பெண்களை அடிமைகளாகக் கருதுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவ பண்பாடு அவர்களை சந்தைப் பொருட்களாகப் பார்க்கிறது. உங்கள் றாக்கிங் கேள்விகள் ச(ந்)தைப் பொருட்களாகவும், அடிமைகளாகவும்கருதும் கலப்பான பிற்போக்குத் தனத்தின் வெளிப்பாடேயன்றி வேறல்ல. உங்கள் கேள்விகள் பெண்கள் பற்றிய ஏகாதிபத்தியங்களின் காமவிகாரப் பண்பாட்டுப் பிரச்சாரங்களில் இருந்து பெற்ற வக்கிரமான மன உணர்வுடன் வெளிப்படுகிறதே அன்றி... ..கலாசார பண்பாட்டு அம்சங்கள் பல (தமிழ், ஆங்கிலம்) திரைப்படங்கள், சஞ்சிகைகள் மூலமாக அறிமுகமாகும் ஏமாற்ற கலை வடிவங்கள் மக்களை வெறியர்களாக்கி சீராழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் நோக்குடன்.." என எழுதப்பட்ட துண்டுப் பிரசுரத்தை விநியோகித்த போது எனக்கு மனநோய் என துண்டு பிரசுரம் போட்டு பாத்திரிகையில் பிரசுரித்தனர். அதையே நன்னி நன்னி போராடியதாக கூறி மீளவும் அதே நோக்கத்துக்காக கல்வெட்டு அடித்தார் ஷோபாசக்தி. பெண்கள் மீதான ஊற்று மூலத்தை பாதுகாக்கும் ஏகாதிபத்திய பண்பாட்டை இன்று இலக்கியமாக தமது ஆணாதிக்க வக்கிரத்துடன் வெளிப்படுவது ஒன்றும் ஆச்சரியாமனது அல்ல. அதைப் போற்றுவோர், அதை வெளியிடுவோர் என அனைவரும் இச் சமூகத்தின் குற்றவாளிகளே.

ஏன் விடுதலைப் போராட்டத்தை குத்தகைக்கு எடுத்த புலிகள் ஆணாதிக்க ஒழுக்க மரபை பாதுகாக்கும் போராட்டத்தின் தொடர்ச்சியில், வீதிகளில் பெண்கள் மீது பகிடி விடுவோரை, தமது கட்டுப்பாட்டை மீறுவோரை கட்டுப்படுத்த தமது அடியாட்படையாக இந்த பாலியல் வன்முறைக் கொலைகாரரை வைத்து தாக்குதலை நடத்திய நிகழ்வால் தான் பாரிஸ் ஈழமுரசு 16.2.1999 இல் "புல்லுரிவிகள்" என ஆசிரியர் தலையங்கம் எழுதியதன் மூலம், மெதுவாக நாழுவ முயன்ற போதும், குற்றவாளிகளின் பெயரை வெளியிடாது (பிரஞ்சு தொலைக் காட்சி பெயரை வெளியிட்டு இருந்தது) கரைபகுதியைச் சேர்ந்தவர் என்று போட்டது. மக்களிடம் இருந்தெழுந்த "ஏன் பெயர் போடவில்லை" என்ற கேள்வியால் அடுத்த இதழிலில் பெயரை குறிப்பிடுகின்றனர். இந்த கரை பகுதியைச் சேர்ந்தவர் (ஊரின் பெயர் பாவிக்காது) என்பது சாதி பெயராகி புதிய சச்சையாகி அடுத்த நாள் மன்னிப்பு கோருகின்றனர். தாம் எப்படி தமது அடவாடித்தனங்களுக்கு இயக்கத்தினுள் வைத்து குற்றவாளிகளை பயன்படுத்தி சேவை பெற்று வளர்ந்ததை சுயவிமர்சனம் செய்து போராட்டத்தை தூய்மைப்படுத்த வேண்டிய பொறுப்பான பணியை கைவிட்டு, யார் அவன் என்பது முதல் பெயரை மறைத்து, ஊரை மறைத்தன் மூலம் குற்றவாளிகளின் ஊற்று மூலத்தை தொடர்ந்து திறந்தே வைத்துள்ளனர்.

குற்றவாளி ஊரில் இயக்கத்தில் இருந்து விட்டு ஏன் வந்தார், இந்த மாதிரி கொடூரமான கொலைகளை செய்ய இலங்கையில் சனநயகத்தை மறுத்த போராட்டமா காரணம், அங்கு தண்டனை பெற்றவரா, பின் எப்படி மீள இயக்கத்துடன் இயங்க முடிந்தது, புலிகளின் நிதி சேகரிப்பில் தனிப்பட்ட முறையிலும் பணம் சேர்த்தரா, பல பெண்களை மிரட்டி பாலியல் வன் முறைக்கு உள்ளாக்கி அதை படமாக்கி மீள மீள பயன் படுத்தியது, வேறு பெண்கள் மீதான கொலைகள் என மக்களால் கேட்கப்படும் பேசப் படும் இது போன்ற பல விடையங்கள் பற்றி எல்லாம் யுத்த ஆய்வு போல் புலிகள் செய்து குற்றவாளிகள் உருவாகும் ஊற்று மூலத்தை கண்டறிவதன் மூலம் தமிழ் மக்களின் நம்பிக்கையை அல்லவா ஊட்டியிருக்கவேண்டும். இல்லாது மக்களுக்குள் மக்கள் பேசிய இரகசியமான விடையமாக இது நீடிக்கும் சமூகம் உள்ள வரை குற்றவாளியின் ஊற்று மூலம் எல்லாவற்றிலும் தொடர்வது தவிர்க்கமுடியாது. இதை வைத்து பிழைக்கும் சனநாயமாக சுதந்திரமாக செய்திவிடுவதாக கதையளந்து குரு ஈழமுரசை அடியொற்றி பாத்திரிகை நடத்துவோர், வானொலி தொலைக்காட்சி நடத்துவோர் எல்லாம் பிணத்தின் மீது உண்மைகளை ஆராயத் தவறி, குற்றவாளி மீது தமது திட்டுதல் ஊடாக, குழந்தையின் பால் முகம் மீது தம்மைத் தாம் மறைத்துக் கொண்டனர்.

பாரீஸ் புத்தக கடையில் விற்கும் வக்கிரமான நீலப் பட புத்தகங்கள் மீதும் அஞ்சலிக் கவிதை பாடி, பாரிஸ் வியபாரநிலையங்களில் விற்பனைக்காக பரப்பியுள்ள இந்திய மலின சஞ்சிகை மீதான கவர்ச்சி பெண்கள் மீது கறுப்புக் கொடி கட்டி துக்கம் பறக்க விட்டதன் மூலம் குற்றவாளிக்கு எதிராக காட்டி சபாஸ் பட்டம் பெற்றுக் கொண்டனர். ஆனால் அக் குற்றவாளி கிளுகிளுப்பூட்டும் எத்தனை நீலப்பட புத்தகத்தை படித்தும், எத்தனை கவர்ச்சி நாயகிகளை வாங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டு களித்த வெறியூட்டுதல்கள் ஏற்படுத்திய வக்கிரங்கள் தூண்ட காரணகர்த்தாவாக இருந்த உங்கள் கைகள் சுத்தமானவையாக கறுப்புக் கொடி கட்டினால் மாறிவிடுமோ? இப்படி உருவேற்றப்பட்ட எத்தனை பேர் ஆணாதிக்க ஒழுங்குக்கு பயந்து உணர்ச்சியை அடக்கிய படி அமைதியாக நடமடுவர் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

சிறுவர் மீதான பாலியல் வன்முறைகள், சிறுவரையே உழைக்க வைத்து அதில் சுகம் காண்பது எல்லாம் இந்த ஜனநாயக அமைப்பில் பாதுகாக்கப்படுகின்றது. இது நகாரிகம் அடைந்த முதலாளித்துவ நவீனத்துவ வளர்ச்சியிலும், இன்று உலகமயமாகும் பின் நவீனத்துவ கால ஏகாதிபத்தியத்திய மேற்கு நாடுகளிலும் சிறுவர் மீதான 18 மணிநேர உழைப்பு, சிறுவர் மீதான பாலியல் வன்முறை ஒரு நூற்றாண்டுக்கு முன் மிக கோராமாக இருந்தன. அது சில பண்பியல் மாறுபாட்டுடன் உலகு எங்கும் எல்லா இடத்திலும் உள்ளது.

இந்த வன்முறைகளில் ஈடுபடும் கட்டற்ற ஒழுக்க மீறல் அவர்களின் தனித்த பண்புடன் பிறப்பதில்லை. மாறாக இந்த ஆணாதிக்க சமூகம் உற்பத்தி செய்கின்றது. இந்த குற்றத்தின் பொறுப்பாளிகள் நாம் எல்லோரும் என்பதை உணர்ந்து கொள்வதும் அதை மாற்ற நாம் போராடுவதும் அவசியம். குற்றவாளியை கைது செய்தல், தண்டனையை கொடுத்தல், கண்டன அறிக்கைகள், கறுப்புக் கொடிகள் சிலர் பிழைக்கவும், நாளை மறந்து போகவும் மட்டுமே நடக்கும். இதன் சமூக ஊற்று மூலத்தை கண்டறிவதும், அந்த நோய்யை தீர்க்க போராடுவதுமே இக்கொலைக்கு முன் உள்ள பிரச்சனை. நாளை இன்னுமொரு பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாகாத சமூகத்தை படைக்க போராடாத வரை இது போல் நடப்பதற்க்கு துணைபோகின்றோம் என்பதை மறந்தாலும், மறுத்தாலும் அவர்களும் குற்றவாளிதான்.

இந்த பாலியல் வன்முறைக் கொலை சமூக ரீதியில் பாரிய மற்றத்தை எதிர் நிலையில் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பெண் குழந்தைகள் மீதான கட்டுப்பாடு, அடக்குமுறை அதிகரித்துள்ளது. பெண்குழந்தைகளின் நியமான கேள்விகள் இதை காட்டி மறுக்க நியாயவாதியாக மாறிவிட்டது. இங்கு ஒரு பெண் குழந்தையை மட்டும் அந்த ஆணாதிக்க காமுகர்களும், இதற்கு துணைபோன கவர்ச்சி வியாபாரிகளும் கொத்திக் கிளரி குழந்தையை அலகோலம் செய்து படுகொலை செய்யவில்லை. மாறாக பாரிஸ், புலம் பெயர் சமூகத்தின் எல்லாப் பெண் குழந்தைகளையும் ஆணாதிக்க கொடூரத்துக்குள் சிறைவைக்க அறைகூவல் இட்டு நடைமுறைக்குள் நகர்த்தியுள்ளனர். இந்த பாலியல் வன்முறைக் கொலை அந்த பெண்ணையும் இச் சமூகத்தில் இருந்து மீட்க்கவில்லை, எல்லாப் பெண்களையும் கவனம் என்ற ஆணாதிக்க கொடூர புதிய சிறைக்குள்ளும் இட்டுச் சென்றுள்ளது.

பெண்குழந்தைகள் உள்ள குடும்பங்களில் பழகும் நல்ல நண்பர்களை, தொழில் ரீதியாக தொழில் புரியும் விசா அற்ற தொழில் அற்ற கட்டிடத் தொழிளார்கள் மீது சந்தேகங்கள், சங்கடங்களை விதைத்துச் சென்றுள்ளது. இருக்க கூடிய குடும்ப பந்த உறவுகள் சிதைய, கூட்டு குடும்பங்கள் சிதைய, குடும்பம் சிதைய முன்னோடியாகியுள்ளது. மனிதர்களின் நல்ல நேச மனப்பான்மை என்பது மேலும் மேலும் சிதைந்து சிதற, பெண் குழந்தைகள் இறுக்கமான கட்டுபாட்டுக்குள் நசுங்க, குற்றவாளியின் மூல காரணத்தை ஆராய மறுத்த இச் சமூகம் புதிய குற்றவாளியை உருவாக்க ஈடுபட்ட குற்றவாளிகள் வழிகாட்டிச் சென்றுள்ளனர்.

குறிப்பு: இக் கட்டுரையின் கீழ் வெளியிட்ட பல அஞ்சலிகள் ஆணாதிக்கத்தை பாதுகாக்கின்ற, அதை புகட்டுகின்ற, அதை இறுக்கின்ற சில மாதிரிகளை மட்டும் இங்கு எடுத்து விமர்சித்துள்ளேன். இது போல் பத்திரிகைகள், வானொலிகள், துண்டுப்பிரசுரங்கள் பலப் பல ஆணாதிக்க வக்கிரத்தை கொட்டியிருந்தனர் தமது அஞ்சலி ஊடாக. அதே நேரம் கடந்தகால சனநாயக விரோத அடக்குமுறைகளை மறைமுகவும், நேரடியாகவும் நியாப்படுத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியில் பரிமாறிக்கொண்ட வார்த்தைகளில் "தமிழன் போயும் போய் தமிழிச்சிக்கு செய்யாலமோ" என்பதன் ஊடாக தமிழிச்சி அல்லாத வேறு பெண் (சிங்களப் பெண்) என்றால் எல்லாம் சரி என்ற மாதிரி துடித்து பதைத்து கதைத்தோரை என்ன என்பது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜவ்னா புறிஸ் ஸ்தாபனமும், ரஜித்தாஸ் அழுத்தகமும் எழுதி அஞ்சலிக் கவிதையில் ''ஐயோ! அன்னை மடி சுகமறியா அக்கிரமக்காரர்களே! பாலுக்கும் கள்ளுக்கும் பாகுபாடு புரியாதோ?'' என்று கண்ணிர் வடிக்கின்றார்கள். அதாவது பால் என்பது குழந்தை, கள் என்பது பெண், கள்ளை நீ ருசித்திருக்கலாம் என்பது அஞ்சலியின் தமிழ் விளக்கம். அத்துடன் அன்னை மடி சுகம் தெரியாதுகள் மட்டமே இப்படி என்று மேலும். எந்த தாயும் ஆணாதிக்கம் போல் அல்லாது தன் குழந்தையை பால் ஊட்டித்தான் வளர்க்கின்றாள். குற்றத்தின் ஊற்று மூலம் ஆணாதிக்க சமூகத்தை பாதுகாக்கும் இச் சமூகம் தானே ஒழிய அதை பெண் மீது வழக்கம் போல் தள்ளி சேறு வீசுவது ஆணதிக்க அபத்தமாகும். தமிழ் மக்கள் சேவை செய்ய நடத்தும் வனொலியில் நேயர் உள்ளிட்ட கருத்துப் பரிமற்றத்தில் ஏன் அங்கு இவைக்கு (குற்றவாளிகளுக்கு) அந்தப் பெண்கள் நிற்கிற இடம் தெரியாதோ? எனக் கேட்டு தம்மை மெச்சிக் கொண்டதன் மூலம் விபாச்சாரிகளை கற்பழித்திருக்கலாம் என்று கூறுகின்றனர். இந்த ஆணாதிக்க திமிர்களை என்ன என்பது.

நடந்ததை ஆராயும் காற்சாட்டை போட்ட படித்த சடங்கு சம்பிரதாயத்தில் தமிழ் பண்பாடு காப்போர் "அவன் ஊரில் எவடம்? அவன் சாதி என்ன? சாதி புத்தியை காட்டுதுகள்? ..''என விளக்கம் கொடுத்து தம்மை மெச்சியதுகள் தமக்குள் இது இல்லை என்ற மாதிரி கதையை முடிச்சினம். ஆணாதிக்கம் எல்லா சாதிக்குள்ளும் இருக்கிறது, பாலியல் வன்முறை எல்லாச் சாதிக்குள்ளும் புளுத்துப் போய்யுள்ளது என்பதை மறைத்தபடி தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களை கும்பல் கும்பலாக கற்பழித்து சாதி ஆணாதிக்கத்தை நிறுவிய முத்தகுடிகள் அல்லவா.

எங்கடை மண்ணிலே சிங்களவன் செய்தது, இப்படி தமிழ்க்குள் முடியுமோ என்ற மாதிரி கதைகளும் உலவின. தமிழர் பண்பாடு ஆணதிக்கமற்ற , பாலியல் வன்முறையற்ற உன்னதமான சமுதாயம் என்ற கண்டு பிடிப்புடன். இது உலகின் எட்டாவது அதியசமானலும் ஆகலாம் எச்சரிக்கை!

ஈழநாடு ஆசிரியரில் ஒருவரும், செக்ஸ் வக்கிர நூல் ஈறாக கடைவிரித்து நடத்துபவரும் எழுதிய அஞ்சலிக் கவிதையில் "அக்கிரமக் காரர்களை -இன்னும் மரணக் கயிற்றினால் கட்டாமல் விடுவதா?"[1] என எழுதுவதன் மூலம் கொன்று விட்டால் எல்லாம் சரி என்கின்றார். இனி இப்படி நடக்காது என எமக்கு கதையளக்கின்றார். இதன் மூலம் எப்படி அவன் உருவனான் என்பதும், அதை செக்ஸ் வக்கிர நூல்கள், பாத்திரிகை மூலம், வானொலியில் எப்படி எல்லாம் பாடல்கள் மூலம் உருவேற்றி நிறைவேற்ற தூண்டிய உங்களுக்கு என்ன தண்டனை என அஞ்சலி கவிதையில் பாடியிருப்பின் நியாமாக இருந்து இருக்கும். அல்லது குற்றத்துக்கு எப்படி எல்லாம் நீங்கள் பணத்தசையால் பெண்களை செக்ஸ் வியாபராம் பண்ணியதை சுயவிமர்சனம் செய்து இனி இப்படி செய்ய மட்டோம் என உறுதியளித்து இருந்தால் வருங்காலத்தில் இதுபோன்ற சிலவற்றை தடுக்க முதல் காலடி வைத்த வெற்றியாவது கிடைத்திருக்கும். இல்லை என்றால் அடுத்த கற்பழிப்புக்கு நபரை தயார் செய்யும் நோக்கில், பெண் செக்ஸாக தொடர்ந்தும் உங்கள் பணம் வறுகும் விற்பனையால் உருவேற்றப்படுகின்றான் அடுத்த குற்றவாளி!

ஜெர்மனி ஸ்ரீபதி சிவனடியான எழுதுகிறார் "சமூக விரோதிகளை நாம் எந்தவித காரணத்திற்காகவும் அடையாளம் காட்டாமல் விட்டுவிடவும் கூடாது. (என்பவர் இனம் காட்டவில்லை) ........தஞ்சம் புகுந்த நாட்டிலும் எம்மவர் உயிருக்கு சில சமூக விரோதிகளால் அச்சுறுத்தல்.. "[1] அந்த சிவ நாமத்தால் கூறுகின்றார். சமூக விரோதி எப்படி சமூகத்தில் உதித்தான் என்றால் சிவனிடமே இருந்த ஆணாதிக்கமேயாகும். ஏன் மூன்று வயதில் ஞானம் பெற்றதாக கூறும் இந்து சமயத்தின் வணக்கத்துக்குரிய திருஞானசம்பந்தனின் வக்கிரமன பாலியல் பார்வை கண்டுதான் உமாதேவியார் மார்பில் அல்ல கிண்ணத்தில் பால் கொடுத்தாரோ! அந்த சம்பந்தன் இறைவனாக கருதும் உமாதேவியின் உடல் உறுப்புக்களை வகைவகையாக வருணித்தை பெரிய பட்டியலில் போட்டு டிப்ளோமா பட்டம் எடுக்கமுடியும். அந்தளவுக்கு கடவுளாக கருதி குருவாக கொண்ட எம் ஆணாதிக்க சமூகமே சமூக விரோதியின் தோற்றுவாயே ஒழிய தனிநபர்கள் அல்ல. ஏன் சம்பந்தப் பெருமாள் இந்து - சமண போராட்டத்தின் போது "பெண்ணகத்தே எழில்சாக்கியப் பேய் அமன் தென்னற் கற்பழிக்கத் திருவுள்ளமே"[2] எனக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரி சமணப் பெண்களை கற்பழிக்க அருள் கோருகின்றார். பிள்ளையார் கதையைப் பார்ப்போம். சிவபெருமானின் மனைவி உமாதேவியார் குளக்கட்டில் குளிக்கும் போது தன்னை ஆணாதிக்க வக்கிரங்கள் இரகசியமாக பார்த்து விடுவர் எனப் பயந்து, தன் உடல் மேல் இருந்த ஊத்தையை விறண்டி பிள்ளையாரை உருவாக்கி காவலுக்கு (இங்கு மனிதனை உருவாக்கவில்லை. மிருகம் கலந்த குழந்தையே உருவாக்கினார். மனிதக் குழந்தை கூட ஆணதிக்கத்தை கொண்டது என்பதலோ! ) வைத்தே பிள்ளையார் உருவான கதை. எப்படி இறைவியாலேயே ஆண் இறைவனின் ஆணாதிக்க தொல்லையில் இருந்து தன்னையே பாதுகாக்கமுடியவில்லை. ஏன் பெண்களை எல்லாம் குறும்பு செய்து, பெண்களை எல்லாம் வைப்பாட்டியாக வைத்திருந்த கண்ணன் கதை வேறு. வேலுடன் திரிந்த இரண்டு பெண்டாட்டிகாரன் முருகன் இப்படி இந்து கடவுள்களே ஆணாதிக்கத்தின் பாதிப்புக்கள் அல்லது அதைச் செய்பவர்களாக இருந்தனர். கும்பிடும் தெய்வங்களே கற்பழிக்கும் போது தனி மனிதன் மட்டும் குற்றவாளியா? எப்படி?

வண்ணத் தெய்வம் தனது அஞ்சலியில் "...பாதகம் ஒன்றினை நடத்திய இவ்வன்செயலை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய மக்கள் தொடர்பு சாதனங்கள் பாராட்டுக் குரியாவை."[1] என்கிறார். யாரை எந்த ஜனநாயக விரோதிகளை பாதுகாக்க விரும்புகின்றீர்கள். மண்ணில், புலம் பெயர் சூழலில் நடத்திய படுகொலைகள், தாக்குதல்கள், இக் குற்றவாளி முன் நடத்திய தாக்குதல்கள் எல்லாம் எப்படி உறங்கிப் போனது. பாத்திரிகைகள் ஏன் அனைத்தையும் மறைத்து விளையாடுகின்றனர். அதன் அரசியல் என்ன? இப்படி இருக்க ஏதோ ஜனநாயகம் வாழ்வதாக கதையாளக்கின்றார்.

'தமிழன்' முன்னாள் ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் "நமது மண்ணில், சிங்கள ஏகாதிபத்தியவாதிகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சீருடை அணிந்த சிங்கள காடையர்கள் தமிழ் யுவதிகளை - ஏன் வயது முதிர்ந்த பாட்டிமார்கள் மீது கூட பலாத்காரம் புரிந்து அடையாளம் தெரியாமலேயே அழித்து புதைத்துக் கொண்டுவரும் கொடுமைகளை தினமும் கேள்விப் படுகின்றோம். இதுபோல் ஆ'. ப்ரிக்க நாடுகளிலும் ஆட்சியில் உள்ளவர்கள் பெண்கள் மீது காட்டுமிராண்டித்தனம் புரிகிறார்கள்." 1 என்கின்ற போது புல்லரிக்கின்றது. விட்டால் சிங்களவன் இல்லை என்றால் அந்த கறுவல் ஆபிரிக்கன் மட்டுமே இவர்களின் விளக்கம். அதற்குள் இவர் பத்திரிகை ஆசிரியார் வேறு என்றால், இப்படி கற்பழிப்புகளின் ஊற்று மூலம் இங்குதான் ஊற்று எடுக்கின்றது. புலம் பெயர் நாட்டை நோக்கி வருகின்ற போது பெண்களை பயண முகவர்கள் மிரட்டி உருட்டி கற்பழித்து கொன்றும், கொல்லாமாலும் நடந்த சம்பவங்கள் நிறையவே உண்டு. ஏன் வசதி கருதி மறந்து போனீர்கள்? இன்று பயணமுகவர் மூலம் பெண் வந்து இருந்தால் ஆணாதிக்க சமூகம் விபச்சாரியாக பார்க்கும் அளவுக்கு பாலியல் வன்முறை காணப்படுகின்றது. இதில் பாதிக்கப்பட்ட பெண், பாதிக்கப் படாத பெண் என இருவருமே பின்னால் புதிய ஒடுக்குமுறையை, அவமானத்தை இந்த பத்திரிகைகள் கண்டு கொள்ளாது "இப்படியும் நடக்கிறது" என திணிக்கவே உதவுகின்றது. தற்போது தமிழ் ஆணாதிக்கம் பயண முகவர் வழிவந்த பெண் வேண்டாம், நேரடி இறக்குமதி பெண் வேண்டும் என கன்னிப் பரிசோதனை செய்யாத குறையாக நாக்கை தொங்க விட்டு அலைகின்றது. இந்தியா உள்துறை அமைச்சு செயளார் தன் ஆறு வயது மகளை பலர் முன் கற்பழித்ததை அறிந்த தாய் , நீதி கேட்டு சென்ற போது நீதி மறுக்கப்பட்டது. அதற்காக அந்த வசதிபடைத்த தாய் (வசதியிருந்தால்தான் சட்டத்தின் முன் நீதிகேட்டு போராட முடிகின்றது) நீண்ட போராட்டத்தை நடத்தியும் சட்டத்தக்கு பொறுப்பான உள்துறை அமைச்சு இழுத்து அடிக்கின்றது. ஏன் இந்தியாவைச் சேர்ந்த ஒரிசாவில் அஞ்சான என்ற பெண் தனது கணவனின் கொடூரத்தால் பாதுகாப்பு தேடி நீதி கோரி அரச தலைமை வழக்கறியார் இடம் முறையிட சென்ற போது அவன் அப்பெண்ணை கற்பழிக்க முயன்றான். அதை எதிர்த்து அப்பெண் போராடிய போதும், முதல் அமைச்சாரிடம் முறையிட்ட போதும் (இருவரும் கூட்டாக பல கற்பழிப்பில் ஈடுபட்டவர்கள்) அப் பெண்ணை கும்பலாக அடியாட்படை கொண்டு கற்பழித்தனர். இதன் பின் தன்னெழுச்சியாக மக்கள் திரண்டு போராடிய பின் விசாரணை நாடகம் தொடங்கியுள்ளது. ஏன் ஐரோப்பாவில் சிறுமிகளை கடத்திச் செல்வதையும், அது பொலிஸ்-அரசு கூட்டுடன் நடந்த செயலால் தொடர்ந்த நிலையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில் ஸ்பெயின் லட்சக் கணக்கில் மக்கள் வீதி ஆர்ப்பட்டத்தை நடத்தினர். ஏன் அமெரிக்கா இராணுவத்தில் உள்ள 50 சதவீதமான பெண்கள் உயர் அதிகாரிகளால் கற்பழிக்கப்பட்டுள்ளனர். ஏன் கிளிங்டன் அதிகார பாலியல் வன்முறை உலகையையே நாறடிக்கவில்லையா? சத்திய சாயிபாபா என்ற ஆணாதிக்க வெறியன் பெண் போட்டியில் அரசியல் செல்வாக்குடன் பொலிசைக் கொண்ட தனது சீடர்களை அழித்ததை முடிமறைக்க முடியாது நாறியது. மூத்த தமிழ் குடியில் இருந்து இன்றுவரை எத்தனை தாழ்த்தப்பட்ட பெண்களை கற்பழித்து சுகம் பெற்றீர்கள். ஏன் இரண்டாம் உலக யுத்ததில் எத்தனை ஆயிரம் பெண்களை யாப்பானும், ஜெர்மனியும் சூறையாடியாது. இப்படி எத்தனை வரலாறுகள் பிறகு சுத்தி சுத்தி சுப்பற்றை கொல்லை சிங்களவன்-ஆபிரிக்கன் மட்டும்தான் என்ற மூத்த தமிழ்க் குடிகளின் ஒப்பாரி.

"எம்மினத்தின் முகங்களிலே கரும்புள்ளி இரத்த வெறி பிடித்த கரடிகளின் செயலால் தமிழ்மொழி பேசா மற்ற இனத்தவர்கள் கொலைக்காரர்கள் - இலங்கைத் தமிழர்களிடமும் இருக்கிறார்கள் என்று பேசும் படி செய்து விட்டார்கள். இந்த நய வஞ்சகச் சொறிநாய்கள்."[1] என நந்தினி கலைத் தென்றல் அஞ்சலி ஒப்பாரிவைக்கின்றது. சபாலிங்கம், நாதன், கஜன்...... என நடந்த ஈவிரக்கமற்ற கொலைகள். பல பெண் படுகொலைகள் எல்லாம் இதைச் செய்யவில்லையோ?. மண்ணில் ஆயிரக்கனக்கில் இயக்க உட்படுக்கொலைகள், மற்றைய இயக்கப் படுகொலைகள், எல்லையோர அப்பாவி சிங்கள முஸ்லிம் படு கொலைகள் எல்லாம் எம் இனத்தின் கொலைகள் இல்லையோ? ஏன் 1993 இல் ஜெர்மனியில் சுஜிதா என்ற சிறுமி கொல்லப்பட்ட போது, நாசிகள் மீது வாய் கூசாது குற்றம் சாட்டி விட்ட கதைக்கு பின்னால் சாதித்திமிரும், ஆனாதிக்க வெறியாட்டமும் கொலையின் பின்னனி என்ற கதைகளும் பரவிய போது அஞ்சலிகள் மௌனத்தின் உறைவிடமானது ஏனோ? இவர்கள் சொறிநாய்கள் அற்ற புனிதர்களோ? என்ன நித்திரையா? கொள்கின்றீர்கள். இது சொறிநாய் என்றால் இதன் ஊற்று மூலம் தொடங்கி வைத்த இடமும் சொறிநாய்கள்தான்.

தி.உமாகாந்தன் தனது அஞ்சலியில் "..எங்கள் சொந்த இடம் தெரியாமல் குழம்பி நிற்கும் வேளையிலே தேகம் திமிரெடுத்தா இந்த மிருகத்தனம் நிகழ்ந்தது. நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் வந்த கதையாகிவிட்டதா நம் கதை"[3] என்கின்றர். தேகம் திமிர் இல்லாமல் (இயல்பான பாலியல் தேவை) மனிதன் இருக்கமுடியுமோ? பாலியல் மனித வாழ்வில் இயல்பானது என்பதையே மறுக்கும் ஆணாதிக்கம், இந்த இயல்பான பாலியல் மீது எண்ணை ஊற்றி எரியவைக்கும் போது ஏற்படும் விளைவை "தேகம் திமிரெடுத்தது" என்று கூறி பிரச்சனையின் மூலவேரை அடியோடு கவனமாக பாதுகாக்க உதவுகின்றது பழமொழி.

"உன் பிள்ளையை உன் கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்!"[3] என்று ஞானி ஆலோசனை வழங்குகின்றர். பெண்பிள்ளை என்றால் பூட்டி ஆணாதிக்க சிந்தனைக்குள் அமுக்கு. ஆண் குழந்தை என்றால் "கறுப்பு" மற்றும் "அடைகள்" உடன் சேர அனுமாதியாதே. அதவாது தாய் தந்தையைக் கொண்ட இந்த ஆணாதிக்க சமூக ஒழுக்கத்தை மீறாத வகையில் உன் பிள்ளையை கட்டுப்பாட்டில் வைத்திரு அது போதும் என்கின்றார். அதன் வெளிப்படையாக "...உன் மனதிலே பதித்துக் கொள், என் இனமே! வட்டிக்குப் பணம் வாங்கி வடக்கே வாசல் வைத்து - வளவோடு வீடு கண்டோம்! சீட்டுக் கட்டி சிங்கார வாகனத்தில் ஒய்யாரமாய் பவனிவந்தோம்!" என்பதன் உடாக ஞானி உயர் சாதி சிலர் வாழ்க்கையை, வசதியற்ற வக்கற்றவர்களின் பணத்தை சீட்டில் ஏமாற்றி வடக்கு வாசல் வைத்து, தமக்கு சேவகம் செய்ய கலட்டிக் காணிவழங்கி கொட்டில் போட்டு தமது சீருறும் செருக்கை வெளிப்படுத்தியதை பிள்ளைக்கு புகட்டு. அப்போதுதான் உனது காட்டுப்பாட்டில் சாதி கடவாத, காதல் செய்யாத, சீதனத்தை மறுக்காத, வேறு இனத்தை திருமணம் செய்யாத அடக்கம் ஒடுக்கமான ஊமைப் பிள்ளைகளை வளர்த்த பெருமையை கல்தோன்றா மண் தோண்றா முன் தோன்றிய தமிழ் மரபைப் பேணுவதை உலகம் புகழும் என்பதே அவரின் கவிதை விளக்கம்.

திருமதி நளாயினி தாமரைச்செல்வன் தனது அஞ்சலியில் "காமுகரை அடக்கி ஆழுங்கள். யூடோ கராத்தே உண்டு. யுத்திகள் நிறைய உண்டு."[3] என்கின்றர். துாப்பாக்கிகள் உண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களே இடுப்பில் செருகி நடமாடுங்கள் என கூறாதது மட்டுமே இங்கு விடுபட்டுவிட்டது. சமூகத்தின் ஆணாதிக்க நோய்க்கு கராட்டி, யூடோவோ, துப்பாக்கியோ, மரண தண்டனைகளோ தீர்வாகுமோ! இல்லையே ஆணாதிக்க வெறி என்பது எல்லா நவீன ஆயுதத்தை மீறி பின்நவீனத்துவமாக நடைமுறையில் உள்ளது. அதவாது நவீன ஆயுத உற்பத்தியில் உலகை ஆளும் போட்டி போல் இதுவும் நிடிக்கும்.

சி.புஸ்பராஜா தனது அஞ்சலியில் ''சமூக சீர்திருத்தத்தில் அக்கறை கொண்டவர்களுடனும், சட்டத்துடனும் ஒத்துளைத்து நம்மிடையே இருக்கும் சமூகவிரோதிகளை இனம் கண்டு நீதியின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற செய்யவேண்டும்.''[3] இது எப்படி? சட்டம் ஒழுங்கு ஆணாதிக்கமாக உள்ள போது, அத்துமீறிய ஆணாதிக்க மிறல்கள் சட்டம் சிலவேளை கண்டு கொள்ளலாம். அமெரிக்கா இராணுவத்தில் இணைந்த பெண்கள் மீதான கற்பழிப்புகளை எந்தச் சட்டமும் கண்டுகொள்ளவில்லை. ஏன் கிளிங்டன், ஸ்பெயின்.. என பட்டியல் நீண்டு உள்ளது. ஆணாதிக்கத்தை இச் சட்டம் பாதுகாக்கின்றது. இதை சீர்திருத்தவாதிகள் தங்கள் வர்க்க விசுவாசத்துடன் முண்டுகொடுக்கின்றனர். ஏன் அண்மையில் உங்கள் உடன் கூடித் திரிவோர் எழுதிய படைப்புகளில் பெண்கள் மார்பை இந்தாபிடி இந்தாபிடி எனத் திரிவதாக எழுதியும், விமானப் பெண் என்ன குடிக்கிறாய் எனக் கேட்க்க உன் மார்பு பால் எனக் கூறியதை (ஏன் நிதர்ஷினியை குதறியவர்கள் அப் பெண்ணை இலக்கியவாதி கோருவதையே செய்தனர் என்பதை அஞ்சலிகள் உடாக மறைக்காதீர்கள்) எந்தச் சட்டத்திடம் முறையிடுவது. அதையும் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

''ஆண்களைச் சரியாக வளர்க்காத தாய்களா காரணம்?[3] என்று ராஜேஸ்வரி லண்டனில் இருந்து அஞ்சலி செய்கின்றர். ஆணாதிக்கம் எப்படி தாய் வளர்ப்பால் ஏற்படும். ஆணாதிக்கம் பெண்கள் மீது ஆணாதிக்க உற்பத்தி முறையால், முதலாளித்துவ சனநாயகத்தால் பாதுகாக்கப் படுகின்றது. பின்னால் ஆணாதிக்க ஆண் ஆணாதிக்க ஒழுங்கை அத்து மீறினால் தாய் வளர்ப்பில் குற்றமோ! ஐயகோ என்வென்று சொல்வது.

திருமதி றூபி ஜெயசீலன் தனது அஞ்சலியில்'' தலைகுனிந்த தமிழரினம் தலைமீண்டும் நிமிர்கையிலே - தலைகுனிய வைக்கிறதே தரம் கெட்ட தமிழன் செயல்''[3] என்கிறார். எம்மண்ணிலும் புலம் பெயர் நாட்டிலும் சொந்த சகோதரர்களை வீதிவீதியாக படுகொலை செய்தும், உயிருடன் எரித்த போது தமிழன் தலை எங்கிருந்தது. அப்பாவிச் சிங்கள, முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்ட போது வீரத்தின் உச்சத்தில் உச்சி குளிர்ந்ததோ! சொந்த இடத்தில் இருந்து தமிழன் முஸ்லிம் மக்களை விரட்டியது வீரமோ! இப்பதான் தமிழன் தலை குனிவு ஏற்பட்டதாக காதுக்கு பூ வைக்கின்றார். தலைகுனிவு எப்போது தமிழன் சனநயகத்தை மறுத்தானோ அப்போது தமிழனால் ஏற்பட்ட நிலையில் எந்த மற்றத்தையும் வராலாறு மிட்க்கவில்லை.

சுவிஸ் வல்வை - சுஜேன் தமது அஞ்சலியில் "பிஞ்சுமுகம் அறியா வஞ்சகர்."[3] என்பதன் உடாக பிஞ்சு அற்ற முகம் என்றால் எப்படிச் சரியாகிவிடும்? 'முகத்தான்' யேசு தனது அஞ்சலியில் ''மதத்தின் பெயராலே மர்மக்கொலைகள், மறைமுகக் கொலைகள், தற்கொலைகள், வஞ்சம் தீர்க்கும் வர்க்கக் கொலைகள், பணப்பித்தர்களின் பாதக் கொலைகள், காம வெறியர்களின் வெறியாட்டக் கொலைகள், எத்தனை?!'' என்றவர் வசதியாக வசதி கருதி இனக் கொலைகளை மறந்து போனார். சகோதரப் படுகொலைகளை மறந்து போனார். இப்படி மறந்து மறைக்கப்பட்ட தொடர்ச்சியில் "மொட்டாகி, விரிந்து மணம் பரப்பும் மலராகும்முன், முளையிலே நுள்ளி..'' என்கிறார். அதாவது மலரானால் கிள்ளி எறியலாமோ? ஆணாதிக்க பாலியல் தேலையை பூர்த்தி செய்யாமல் பிள்ளை பெறாமல் போய்விட்டாய்? (மலராகி) என்றே புலம்புகின்றார்.

இங்கு வெளியாகி அஞ்சலி ஒன்றில் குற்றவாளியை அங்கம் வகுத்து அணுஅணுவாய் கூறாக்கி - அவர் உயிரை எடுத்தாலும் ஆறாது எம் நெஞ்சு- அன்பான பிரெஞ்சு நாட்டுப் பண்புடையீர் - விண்ணப்பம் - அனுப்புங்கள் அந்த அநியாயப்படுவோரை வன்னிக்கு''[3] என இலங்கையில் இருந்து எழுதும் அஞ்சலி. ஏதோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்னியில் இதுபோல் இல்லை என்ற மாதிரி. வன்னி என்ன ஆணாதிக்கம் கடந்த பூமியோ! அனுப்பினால் புண்ணிய பூமியாகி விடுமோ. ஏன் பல சமர் கண்டு புலம் பெயர்ந்த இந்த முன்னைய வீரப் புதல்வன் எப்படி உருவானான். இவ்வளவு மோசமான கொலை வெறியுடன் என்பதற்கு அல்லவா வன்னி பதில் கூறவேண்டும்.

1.மண்ணில் மறைந்ததோ...? மனிதம்!
2.மண்ணும் மனித உறவுகளும் -கோ.கேசவன்
3.மெல்லச் சாகுது மனிசம்
4.பெண் உரிமை 2.6

# வெள்ளைத்திமிர் என்ற பெயரில் கற்பிக்கும் கருப்புத் திமிர்




“ஐரோப்பியப் பயணக் கட்டுரை எனக்குறிப்பிட்டு அ.மார்க்ஸ் வெள்ளைத்திமிர் என்ற நூல் ஒன்றை வழமைபோல் விடியல் பதிப்பகமே வெளியிட்டுள்ளது. அ.மார்க்ஸ் ஐரோப்பா வந்து சென்றதை ஒட்டி தொகுக்கப்பட்ட நூலில் ஜரோப்பிய வாழ்வின் எம்மவர்களின் (புலம்பெயர் தமிழரின்) கருப்புத்திமிர் பக்கத்தை மறைத்தும் தனது குருட்டு அரசியலுக்கு எது பொருந்துமோ அல்லது எதை பொருத்த முடியுமோ அதை பொருத்தி வெளியிட்ட நூலே “வெள்ளைதிமிர்” என்ற கருப்புதிமிர் நூல்.

புலம் பெயர் சமூகமாக வாழும் நாம் இந்த மண்ணில் கண்ட மனித விழுமியத்தை எம் சமூகத்தில் காணமுடியாது கருப்பு நாசித்திமிரை சந்தித்தவர்கள், சந்திப்பவர்கள். நாம் பண்பாடு, கலாசாரம் என அனைத்துத் துறையிலும் இறுக்கப்பட்ட, அறையப்பட்ட எம் சமூகத்தின் கருப்புதிமிர் வெள்ளைத்திமிரை விட மோசமானது. கேவலமானது. அதை விமர்சிக்கும் தகுதியும் கருப்புதிமிருக்கு கிடையாது.

வெள்ளையினத்தின் ஆளும் பிரிவுகளால் கட்டமைக்கப்பட்டுள்ள நிறவாத பொருளாதார ஆதிக்கத்தை நாம் எதிர்க்கும்போது, நாம் பொதுவில் அந்த மக்களை நோக்கி விரலை நீட்டக்கூடாது. ஏனெனில் இந்த வெள்ளையின மக்கள் உலக ஜனநாயகத்துக்காக, சமாதானத்துக்காக, சர்வதேசியத்துக்காக, சொந்த ஆளும் பீடத்தை எதிர்த்து இரத்தம் சிந்திப் போராடியவர்கள். போராடுபவர்கள்.

வியட்நாம் யுத்தத்தின் போது அல்ஜீரியா யுத்தத்தின் போதும், கொசவோ யுத்தத்தின் போதும், ஈராக் யுத்தின் போதும் அல்லது இதுபோன்ற யுத்தத்தின் போது வெள்ளையின மக்கள் சொந்தநாட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்த்து சர்வதேசியத்துக்காக இரத்தம் சிந்தி உயிரை விட்டு போராடியவர்கள். இதைத்தான் தனது அரசியல் குருட்டுதன அரசியலுடன் வெள்ளைத்திமிர் என்கின்றர். இனி நாம் அ.மார்க்சின் தனிப்பட்ட ஒருதலைச்சார்பு கட்டுரையை பார்ப்போம்.

"என்ன இரண்டு கருப்பு சாமான்கள் நம் பெட்டியில் ஏறுகின்றன?"... "நீ ஏன் கருப்பனாக திருடனாக இருக்கின்றாய்" ஏய் கறுப்பா உன நாட்டிற்கு திரும்பிப் போடா". "எளிய கறுப்பு நாயே ஆபிரிக்காவிற்கு போடா என்று கத்திக் கொண்டே போய்விட்டான்." ஜெர்மன் சமூகத்தில் ஏதோ ஒருசிலர் மட்டும் நாசிகளாக இருக்கின்றார்கள் என்பதில்லை. **ஒவ்வொருவரிடமும்** (அடிக்கோடு எம்முடையது) ஏதோ ஒருவிதத்தில் பாசிசம் குடி கொண்டிருக்கிறது " என அ.மார்க்ஸ் தனது குருட்டுக் கண்ணாடியால் பார்த்து சுட்டிக்காட்டுகின்றார்.

அ.மார்க்ஸ் இவைகளை நேரடியாக சந்தித்தாரோ இல்லையோ புலம் பெயர் சமூகம் இதுபோன்று சந்திக்காதவர்கள் பெருந் தொகையை உள்ளடக்கியது. நான் ஜெர்மனியில் மூன்று முறை சென்று இதே பார்த்திபனுடன் சென்றவன். இப்படி பலரும் உள்ளனர். ஆனால் அ.மார்க்ஸ் மட்டும் சந்தித்தது என்பது ஆச்சரியமானது மட்டும் இன்றி பொதுவாக ஜெர்மனி சமூகம் ஒவ்வொருவருக்கும் என இதை சுட்டுவது அதைவிட ஆச்சரியமானது. இவை நடந்தால் விதிவிலக்குகளே ஒழிய பொதுவானவை அல்ல. பொதுவானதை கைவிட்டு விதிவிலக்குக்கு வக்காலத்து வாங்கி சமூகம் பற்றி உழறுவது குருட்டு வௌவால் தனம். இதுதான் பின்நவீனத்துவம் சமூகத்தை மறுத்து தனிநபர்பற்றி உளறுகின்றது. அதாவது சமூகத்தின் மொத்த தத்துவத்தை மறுத்து தனிநபரை போற்றும் சிறு தத்துவங்களை தனது கருப்புத் திமிரில் உயர்த்துகின்றார்.

குறிப்பான சம்பவத்தை பொதுவானதாக காட்ட முனைவது அயோக்கியத்தனமான நோக்கம் கொண்டவை. ஜெர்மன் சமூகம் பற்றியும், அதன் போராட்ட வரலாற்றைக் கேவலப்படுத்துவதன் மூலம், சர்வதேசிய போராட்ட வரலாற்றை சேறடிக்க முனைகின்றார்.

புலம் பெயர் சமூகம் முன் ஜெர்மனிய, ஐரோப்பிய மக்கள் பற்றி எதிர்ப்புணவை விதைத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு போராட்டப் பாதையை அடைத்துவிட பின்நவீனத்துவ தனிநபர் புலம்பல் வழிகளில் சாத்தியம் என்ற அ.மார்க்ஸ் கனவு தான் இவை.

புலம் பெயர் சமூகம் ஐரோப்பிய மற்றும் ஐரோப்பிய தொழிலாளருடன் இணைந்து போராடாது இருக்க அவர்கள் முன் எல்லா ஐரோப்பியரையும் இனவாதியாக காட்டிவிடுவது நல்லதல்லவா?
இன்று புலம் பெயர் சமூகத்துக்குள் மிக வேகமாக உலக ஏகாதிபத்திய துணையுடன், மதங்கள் மதமாற்றம் செய்து முடிவு அற்ற மன நோயாளிகளை உருவாக்கி வருவது போல், அ.மார்க்ஸ் சமூக அக்கறையுடையவர்களைச் சிதைத்த மன நோயாளிகளை உருவாக்கிவிட, ஐரோப்பியரை இனவாதியாக முத்திரை குத்தி விடுகின்றார்.
இந்த இடத்தில் தமிழன் அல்லாத மற்றைய அரபு, கருப்பு இனங்கள் எப்படி இச்சமூகத்துடன் இணைந்து உள்ளன என ஆராய அல்ஜீரியா சமூகத்தை எடுத்துப் பார்ப்போம்.

அல்ஜிரியாவை தாய்நாடாக கொண்டு பிரன்சில் வாழும் அரைவாசி ஆண்களும், நாலில் ஒரு பெண்களும் தனது குடும்பத் தெரிவை வெள்ளையின பிரஞ்சு மக்களை தெரிந்து எடுத்து குடும்பமாக வாழ்கின்றனர். 1992 இல் பிரான்சில் நடந்த 2, 71,000 திருமணத்தில் 31,000 திருமணங்கள் வெளிநாட்டு கலப்புத் திருமணங்களாகும். 1980 க்குப் பின் கலப்புத் திருமணம் அதிகரித்து இன்று 57 வீதமாக அதிகரித்துள்ளது. இங்கு திருமணங்கள் வெள்ளைத்திமிரில் நடக்கின்றதா? இல்லை அ.மார்க்சின் கருப்புத்திமிர் பார்வை தான் பின்நவீனத்துவத்தால் குருடாகியுள்ளது.

ஜெர்மானிய பாசிட்டுகள் இனப்படுகொலைகளை நடத்தி பல கோடி மக்களை கொன்று குவித்த ஜெர்மனியில் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப எடுத்த முயற்ச்சியைத் தொடர்ந்த நாசிக் கட்சி எதிர்ப்பு ஆர்ப்பட்டங்களை நடத்தின. இருந்த போதும் கிழக்கு ஜெர்மானிய மக்கள் நினைவுச் சின்னம் நிறுவ 52 வீத ஆதரவையும், மேற்க்கு ஜெர்மனி மக்கள் 40 வீத ஆதாரவையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிவித்துள்ளனர். (புள்ளிவிபர ஆதாரம் அம்மா-9) ஆனால் அ.மார்க்ஸ்சுக்கு "ஒவ்வொருவரும்" "பாசிட்டாக" கூறுவதும் அதை கதையாளப்பதும் மக்கள் ஒன்று இணையக் கூடாது என்பதற்கே.

இனக் கலப்பு எப்போதும் உயர்ந்த பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. எல்லா சுயாதீனமான, ஜனநாயக பூர்வமான கலப்பும் ஒன்று கலத்தலும் முற்போக்கானவை. இப்படி பெருமளவில் நடக்கும் இம் மாற்றம் வெள்ளை நாசித்தனத்திலிருந்து பிறப்பதில்லை. மாறாக அதற்கு எதிரான போராட்டத்தில் தான் நடக்கின்றது. இதைவிட்டு தனது சொந்த கருப்புத்திமிர் நாசித் தனத்திலிருந்து வெள்ளையின மக்களை நாசியாக காட்டுவது அபத்தமான கற்பிதமாகும்.

ஐரோப்பா சமூகம் நாசித்தன்மையில் ஊறிப்போயுள்ளது எனக் காட்டுவது ஒரு சமூகம் பற்றிய ஆய்வின் ஒருதலைப் பட்சத்தை அதன் கபடத்தையும் தெளிவாக்குகின்றது. சமூகமே நாசியாக அதன் சிந்தனையாக மாறும் போது அங்கு நாசி கோட்பாடும் ஆட்சியும் ஏற்பட்டு விடுவதுடன் பாசிசம் என்பது இருப்பின் எப்படி வெளிநாட்டவர் பெரும்தொகையில் வாழமுடியும் . அங்கு வெளிநாட்டவர் வாழ்கின்றனர் எனின், அந்த மக்களின் உறுதியான போராட்டத்தில் ஆதரவில் தானே ஒழிய "கற்பிதங்களாக" வெளியில் அல்ல. வெளியில் ஒருக்காலும் வாழவே முடியாது.

ஒரு சமூகத்தின் உற்பத்தி முறை மீதான அரசு வடிவம் மீதான வர்க்கப் போராட்டத்தைப் பொறுத்தே என்ன ஆட்சி முறை என்பது தெளிவாகின்றது. சமூகம் நாசிசமாக, பாசிசமாக இருக்கவேண்டின் அந்த சமூகம் பாசிச ஆட்சிமுறையை நடைமுறையில் எடுத்து விடுகின்றது. ஏன் எனின் சமூகத்தின் வர்க்க முரண்பாடு தான் பாசிசத்தின் தோற்றத்துக்கும் நாசிசத்தின் அடிப்படைக்கும் ஊன்றுகோல். இது ஆட்சியில் ஏற்படாத வரை அதை அரசு கைக்கொள்ளாதவரை சமூகம் ஒட்டுமொத்தமாக பாசிசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகும். இது ஒருபகுதி மக்களுக்குள் தான் இருக்க முடியும். அதை எதிர்த்த மக்கள் கூட்டம் போராடுவது பெரியளவில் உள்ளபோது பாசிசம் அரங்கு ஏறமுடியாது. உற்பத்தி முறை மீதான மக்களின் பூர்சுவா கண்ணோட்டம் பொதுவாக உள்ளது எனின் அது எல்லா சமூகத்திலும் காணப்படுவதே. அது ஜேர்மன் சமூகத்துக்கு மட்டும் சுட்டுவது அல்லது ஐரோப்பிய சமூகத்துக்கு சுட்டுவது கருப்புத்திமிரிலிருந்து சொந்த நாசிசத்தை மறைக்கத்தான்.

பாசிசம், நாசிசம், ஐரோப்பாவில் சிறுபிரிவினரிடம் வெவ்வேறு வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரி இல்லை. ஆனால் இதற்கு எதிரான அபிப்பிராயம் ஐரோப்பாவில் எல்லா நாட்டிலும் பெரும்பான்மையான மக்களிடம் உள்ளது. பூனை கண்ணை மூடியபடி பால் குடிக்கும் போது நினைக்கின்றது ஒருவருக்கும் தெரியவில்லை என்று. அது போல் தான் குருட்டுக் கண்ணால் குருட்டு பின்நவீனத்துவ தத்துவத்தால் பார்ததால் எல்லாம் மங்கலாகத் தான் தெரியும். தேவை கண்ணாடி என்றால் அது சர்வதேசியக் கோட்பாடு தான். அது மட்டும் தான் சமூகத்தை உண்மையாக, நேர்மையாக ஆராய கற்றுத் தரும்.

இனவாதத்துக்கு எதிரான போராட்டம் என்பது இவர் குறிப்பிடும் ஆட்டோநாம்களின் செயல்பாட்டில் அல்ல ஆட்டோநாம்களின் கோட்பாடு என்ன? அவர்கள் யேர்மன் சமூகத்திலிருந்து அன்னியப்பட்ட லும்பன்களின் அராஜக தனிநபர் மையமாகும். இவர்கள் அராஜகவாதம், சமூகக்கூட்டமைப்பை எதிர்த்து சமூகத்தில் இருந்து அன்னியப்பட்ட எவ்வளவு தான் முற்போக்காக இருந்தாலும் வரையறையற்ற வன்முறை கும்பலாக சமூகத்துக்கு எதிராக உள்ளனர் .

இவர்களின் போராட்டம் என்னதான் வெளிநாட்டவர்க்கு உடனடியாக சார்பானலும் ஆதரவாக இருந்தாலும் அது சமூககண்ணோட்டத்தில், சமூக ஒத்துழைப்பில் வெளிநாட்டவர்க்கு எதிரானவராக உள்ளனர். அதாவது ஜேர்மனிய சமூகத்துடன் ஒட்டோ உறவோ அற்ற அராஜக லும்பன் நடவடிக்கை சமூகத்திலிருந்து அன்னியப்பட்ட வன்முறைப் போராட்டங்கள் சமூகத்திடம் எதிர்ப்பை உண்டு பண்ணும்போது அப்போராட்டம் வெளிநாட்டவருக்கு சார்பானதாக இருப்பினும் அது யெர்மன் சமூகத்திடம் இருந்து வெளிநாட்டவருக்கு எதிரான எதிர்ப்பை மேலும் வளர்த்து எடுக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லும்பங்களான அராஜகவாத ஆட்டோநாம்களின் செயல்பாடு எப்போது எந்த ஆட்சி வந்தாலும் ஒரே மாதிரியானதாக சமூகத்தை எதிர்க்கும் தன்மை கொண்டது. மனிதன் உழைப்பதை மறுத்த, ஒன்று இணைந்த செயல்பாட்டை மறுத்த சமூக அராயகத்தை கோரும் இந்த பிரிவு, நியாயமான போராட்டத்தை சமூகத்திடம் இருந்து அனனியப்படுத்தும் வகையில் இவர்களின் அராஜகவாதமும் கட்டமைக்கப்பட்டு விடுகிறது.

அரசும் நாசி கட்சிகளும் ஐரோப்பாவில் வெளிநாட்டவருக்கு எதிராக உருவாக்கி வரும் செயல்பாடுகளை எதிர்த்து ஐரோப்பிய மக்கள் தன்னெழுச்சியாகவும் சிறு சிறு மா-லெ-மா குழுக்களாகவும், நாசி எதிர்ப்பு குழுக்களாகவும் திட்டமிட்டு நடத்தப்படும் தொடர்ச்சியான போராட்டம் மட்டுமே வெளிநாட்டவரை இங்கு வாழவைத்தது வாழவைக்கின்றது அல்லாது நாசித்தனம் வாழ வைக்கவில்லை.

இந்த மக்களின் வீரச்செரிந்த போராட்ட வரலாறு பரந்துகிடக்கிறது. அது இன நிற மத வாதத்திற்கு எதிராகவும் , காலனிஎதிர்ப்பு , வர்க்கபோராட்டம் என நீடிக்கின்றது.

பீன்நவீனத்துவத்தின் வலதுபிரிவான அ.மாக்சுக்கு மார்க்சியம் என்றால் காய்ச்சல் வரக்கூடிய எதிர்ப்பும், அவர்களால் நடத்தப்பட்ட நடத்தப்படும் போராட்ட மரபை சிறுமைப்படுத்தி அல்லது மறைப்பதற்கு "வெள்ளைத்திமிர்" கொண்ட சமூகமாக ஐரோப்பாவை காட்டுவது தனது அரசியல் நோக்கத்துடன் தேவையாகின்றது.

இதன் மூலம் மா-லெ-மா சிந்தனையின் உறுதியான ஐரோப்பிய போராட்ட மரபை, போராட்டத்தை மறுதலித்து மூடி மறைத்து தனது சொந்த "கறுப்புத்திமிர்" பாசிசத்தை நிலைநாட்ட பாதுகாக்க குருட்டுதனமாக முனைகின்றார்.

அடுத்து அ.மார்க்ஸ் "சொந்த நாட்டு பிரச்சினைகளிருந்து தப்பித்து ஓடி சொகுசான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்கிற குற்றசாட்டு புலம்பெயர் தமிழர்களின் மீது வைக்கப்படுவதுண்டு. இத்தனை சொகுசுகள் இருந்தபோதிலும் அங்கே யாரும் நிம்மதியாக இல்லை....... வாழுமிடத்தில் மூன்றாம் தரக்குடிமக்களாக இருக்கும் அவலத்தை வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. எதிர்ப்படும் ஒவ்வொரு ஐரோப்பியன் கண்ணிலும் தென்படும் அலட்சியம், தெறிக்கும் நிறவெறி நம்மைக் கூச வைத்துவிடுகின்றது. புலம்பெயந்தவர்கள் குறிப்பாக ஆசிய ஆபிரிக்க இசுலாமியர்கள் கிரிமினல்களாகவே அங்கு கருதப்படுகின்றனர். போதைபொருள் கடத்துபவர்கள் , திருடர்கள் இப்படி பத்திரிகைகள், தொடர்புசாதனங்கள் எல்லாம் அப்படித்தான் சித்தரிக்கின்றன. அழுக்கர்கள் . கெட்டுப்போகிறது என்கிற எண்ணம் ஒவ்வொரு ஐரோப்பியனிடமும் இருக்கிறது" (அடிக்கோடு நாம்) என அ.மார்க்சின் அருமை பெருமையான பின்நவீனத்துவ, தலித் ஆய்வுக்கண்டு பிடிப்பை கொஞ்சம் திரும்பிப்பார்ப்போம்.

ஒவ்வொரு அய்ரோப்பியனும் ஒரு நாசி எனச் சொல்லும் அ.மார்க்ஸ் போட்டு இருந்த கண்ணாடி மார்க்சிய எதிர்ப்பே. ஐரோப்பியன் போராட்டச் சிந்தனை அதன் கட்டமைப்பு மா-லெ-மா சிந்தனை வழியாக கட்டமைக்கப்பட்டவை மட்டும் இன்றி உயிர்வாழ்கின்றன. மா-லெ-மா-சிந்தனையை மறுக்க ஐரோப்பியன் ஒவ்வொருவனையும் இனவாத நாசியாக முத்திரை குத்துவதன் மூலம் மா-லெ-மா சிந்தனையை அதாவது மார்க்சியத்தை நாசி மார்க்சியமாக, வெள்ளைதிமிர் மார்க்சியமாக காட்டுவதன் மூலம் இந்தியாவில் மா-லெ-மா சிந்தனைக்கு எதிராக கொஞ்சமேனும் பிரச்சாரம் செய்ய முடியும் என்ற கனவுதான். ஒவ்வொரு ஐரோப்பியனுக்கும் நாசி முத்திரை குத்துவதற்கு நாசி கட்சி கூட இப்படி கூற தயாராக இல்லை. ஆனால் அ.மார்க்ஸ் எந்த வித ஆதாரமும் இன்றி பச்சையாக பார்ப்பனர் போல் (பார்ப்பான் என்ற பெயர் உழையாது பார்த்துக் கொண்டிருத்தல் என்ற அர்த்தத்தில் பெரியாரால் வைக்கப்பட்டது.) சதி செய்து உள்ளார். இரண்டாவது பத்திரிகை தொலைகாட்சி என்பது நாசிசத்தின் ஒரு பிரச்சார அமைப்பாக உள்ளது எனக்கூறுவது அப்பட்டமான முழுப் பொய். ஏனெனில் நிறைய பத்திரிகைகள் வெளிநாட்டவர்களுக்கு சார்பாக பெருமளவு பக்கத்தை ஒதுக்கி பிரச்சாரத்தை தொடர்ச்சியாக செய்வதுடன் நாசிசத்தை எதிர்த்து தொடர்ந்து போராடுகின்றன. இது போன்று தொலைகாட்சி நிகழ்ச்சிகள் நிறையவே தொகுக்கப்படுகின்றன. கண்ணை மூடியபடி பால் குடிக்கும் பூனை போல் ஒரு மார்க்சிய விரோத கண்ணாடியை அ.மார்க்ஸ் போட்டு விட்டு அதற்கு ஏற்ப வெட்டி எழுத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிக்கிட்டால் யதார்த்த நிகழ்வு கூட கண்ணுக்கு தெரியாது. சூரியனை கையால் பொத்தமுடியாது என்பது அ.மார்க்கசுக்கு கண்ணாடி போட்டவுடன் தெரிவதில்லை .

அடுத்து புலம் பெயர் சமூகம் நிம்மதியாக இல்லை என்ற அ.மார்க்சின் மற்றைய கண்டுபிடிப்பு சூரியனை கையால் பொத்த நினைப்பது போன்ற முட்டாள்களின் வெளிப்பாடுதான் .

புலம் பெயர் தமிழர்கள் நாட்டில் (இலங்கையில்) அமைதி திரும்பின் எத்தனை பேர் திரும்புவர் எனகேட்பின் 99.9 வீதம் பேர் திரும்ப மறுப்பார்கள். திரும்ப எண்ணுவோர் யார்? எம் சமூகத்தில் அக்கறை கொண்டவர்கள், பெண்குழந்தைகளின் கற்பைப் பேண விரும்பும் ஆணாதிக்க வெறியர்களாக உள்ளோர் மற்றும் நேரடியாக ஏதாவது பாதிப்பை சந்தித்தோர் போன்றோரே. இவர்கள் 0.1 வீதம் பேர் ஆவார். இதற்கு தனியான ஆய்வு தேவையில்லை அ.மார்கஸ் அவர்களே. உங்கள் கண்ணாடியை சற்று கழற்றி வைத்துவிட்டு பார்த்தால் எல்லாம் சரியாக நன்கு தெரியும். பல இடத்தில் அ.மார்க்ஸ் எழுதுகின்றார் "ஒழுங்கு" தான் நாசிசத்தின் பாசிசத்தின் சின்னமாக உள்ளது என்கிறார். அராயகவாதம் முற்போக்கானது என்கிறார். ஒழுக்கத்தை தகர்த்த கட்டுடைப்புதான் புரட்சி என்கிறார். இதிலிருந்து தான் ஆ ோ ாநாம்களை உயர்த்துகின்றார்.

ஒழுங்கு ஒரு சமுதாயத்தில் பொருளாதார அமைப்புடன் அவசியமாக உள்ளது. அது இல்லாத சமூகம் அழிந்துவிடும். ஒவ்வொரு மனிதனும் வேலை செய்வது முதல் அனைத்தும் ஒரு ஒழுங்குங்கு உட்பட்டதே.

ஒழுங்கை நிராகரிப்பின் சமூக இயக்கத்தின், ஏன் இயற்க்கையின் அனைத்து செயலையும், பொருளையும் மறுத்த இயக்கமற்ற ஜடமாக கற்பனையை கோருவதாகும். அ.மார்க்ஸ் முன்வைக்கும் பாசிசம், நாசிசம் என்பன ஒழுங்கில் கட்டமைக்கப்படுவது இல்லை. மாறாக உற்பத்திமுறை மீதான வர்க்கப்போராட்டத்தில் இருக்கும் சுரண்டும் முறையை பாதுகாக்க உருவாகும் ஒரு அமைப்பு வடிவந்தான் பாசிசம், நாசிசம். பாசிசம், நாசிசம் வர்க்கப் போராட்டத்தை கட்டுப்படுத்த ஒரு அரசியல் வடிவமாக எழுகின்றதே ஒழிய ஒழுங்கில் இருந்து கற்பனையாக உருவாகுவது இல்லை. அ .மார்க்சின் ஒழுங்கு மீறல் படி அவர் தனது சாப்பாட்டுக் கோப்பையில் தான் மலம் சிறுநீர் கழிக்கிறாரோ என கேட்க தோன்றுகிறது. உழைப்பைப் போற்றி களைப்பை மறக்க நாட்டுப்புறபாடல் பாடியபடி கூலி விவசாயிகள் நெல் நாற்று நடும் ஒழுங்கு தவறானது என்கிறார். ஏனெனின் அது பாசிசத்தின், நாசிசத்தின் வடிவம் என்கிறார். தாறு மாறாக ஒழுங்கை குலைத்து நாடுவது தான் புரட்சியின், பாசிசத்துக்கு எதிரான போக்கு என்கிறார். ஏன் பின் நவீனத்துவ அரசியலை முன்வைத்து ஒழுங்கை மறுத்த புரட்சியை கோரி சரடுவிட்ட அப்புத்தகத்துக்கு எதிர்மறையில் ஒழுங்கைக் கொண்டுள்ளார். பின் அட்டையில் அவர் தன் படத்தைப் போட்டு இருந்தார். அதில் ஒழுங்காக தலைவாரி, ஒழுங்காக முகச்சவரம் செய்து , ஒழுங்காக மடிப்புக் குலையாத சேட் போட்டு ஒழுங்காக உலக அழகியல் வழியில் போஸ் கொடுத்து ஒழுங்கை கடைப்பிடித்து வாழ்வதைக் காட்டியது. ஏன் புத்தகம் தமிழ் ஒழுங்கைப் பின்பற்றி, புத்தக ஒழுங்கைப் பின்பற்றி என எல்லாம் ஒழுங்காக இருந்தது. இப்படி செய்தபடி சரடு விடும் அ.மார்க்சின் கட்டுரைகள், சுயமுரண்பாட்டை கொண்ட ஒழுங்கு அற்ற பலவண்ண கோட்பாட்டு சாக்கடையாக உள்ளது. இது மட்டும் தான் ஒழுங்கை மறுத்து வர்க்க புரட்சியை கோராது. அதுதான் விழுந்து அடித்து மீசையில் மண்படாது அ.மார்க் எதிர்புரட்சிக்கு உழைக்கின்றார் .

"வேலை செய்யும் இடங்களில் தினம் பதினொரு மணிநேரம் மாதத்திற்கு இருபத்தாறு நாட்கள் வேலைசெய்யவேண்டியிருக்கின்றது என்றார் பிரான்சில் வசிக்கும் சிவநேசமூர்த்தி. ஆனால் எட்டுமணி நேரம் தான் வேலை செய்ததாக பதிவுகள் இருக்கும். புலம்பெயர்ந்தவர்கள் இவ்வாறு சுரண்டப்படுவதை தொழிற் சங்கங்கள் கண்டு கொள்வதில்லை" என அ.மார்க்ஸ் குறிப்பிடுகின்றார் .

எம்மவர்களின் பூர்சுவா மன இயல்பும் முதலாளிக்கு சில வேலைத்தளங்களில் குண்டி கழுவி வேலை செய்யும், தெய்வமாக மதிக்கும் இந்த புலம் பெயர் சமூகம் தானாகவே வலிந்து எடுத்ததுதான். இந்த புலம் பெயர்ந்தோரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டிக்கொடுப்பை ஒரே வேலைத்தளத்தில் முதலாளிக்கு பந்தம் பிடித்தபடி மற்றவனைப் பற்றி குறை கூறி காக்காய் பிடித்து, குண்டி கழுவி 8 மணிநேர வேலை செய்தவனை நீக்கக் கோரி அந்த இடத்தை தனது ஆக்கி காலை நக்கி நாயாக வாழும் இந்த பூர்சுவத் தமிழன் தனதாக்கி இதன் முதல் ஊன்றுகோல். எம்மவர் வேலை செய்யும் உணவுச்சாலைகளில் 90 வீதமானவை சட்டப்படியான சட்டபடி வேலைநாள் 26 உம் சட்டப்படி 8 மணித்தியாலத்தை விடக் கூட என்பதும் கவனத்துக்குரியது மட்டும் இன்றி அதற்கு சட்டப்படி சம்பளமும் உண்டு. இந்த வேலை நேரத்தை குறைக்க தொடாச்சியாக தொழில் சங்கங்கள் போராடுவதுடன், பல போராட்டத்தை போராடத் தயாராக உள்ள தொழிளாருடன் சேர்ந்து போராடுகின்றனர்.

எம்மவர்கள் அந்த சட்டப்படியை விட கூட, சம்பளம் இன்றி வேலை செய்ய தாமாகவே விரும்பி ஏற்கும் அதேநேரம் அதைக் கோருபவனைக் காட்டிக் கொடுத்தும் பிழைக்கும் இந்த மேல்மட்ட பூர்சுவா சமூகம் எம் நாட்டில் இருந்து சொகுசு தேடி பணத்துக்கான கனவுடன் தப்பி ஓடி வந்த (99 வீதமான பேர் ) பிரிவுகளே. தொழிற்சங்கங்கள் இவர்களை இனவெறியில் கண்டுகொள்வது இல்லை என்ற கணடு பிடிப்பு அ.மார்க்கசின் மா- லெ- மா சிந்தனை எதிர்ப்பினால் வெளிவந்த ஒரு கட்டமைக்கப்பட்ட கற்பிதப் புரட்டு ஆகும்.

தொழிற்சங்கங்களின் பொதுவான அரசியல் வழி துரோகத்தை விட்டு இவர்கள் நிறவாதத்தை கையாளுகின்றனா் என்பது அப்பட்டமான புரட்டும் பொய்யுமாகும். ஏன் எனின் பிரான்சிலும் ஐரோப்பாவிலும் முன்னனி தொழிற்சங்கங்கள் அனைத்தும் நாசி எதிர்ப்பு போராட்டத்தை தொடார்ச்சியாக நடத்துகின்றன .

இத்தொழிற்சங்கங்களின் போராட்டத்தில் சரி, பல்வேறு நாசி எதிர்ப்பு போராட்டத்தில் சரி ஒரு தமிழன் கூட பங்குகொள்வது இல்லை என்பது உண்மை. அந்தளவுக்கு சுயநலம்பிடித்த மேல்தட்டு பூர்சுவா கண்ணோட்டம் உடையவன் புலம்பெயர் தமிழன்.

ஏன் தமிழர்கள் நடத்திய போராட்டங்களில் கூட அதே தமிழன் (இன்றைய சில முன்னணி மூத்த இலக்கியவாதிகள் கூட) காட்டிக்கொடுத்தவனே ஒழிய, சுரண்டலுக்கு எதிராக அணி திரண்டது கிடையாது. ஏன் சிவனேசமூர்த்தி தனது ஈழமுரசு பத்திரிகையில் கூட இப் போராட்டத்தில் முக்கியத்தை கூறி அழைப்பதும் இல்லை. (தற்போது அப் பத்திரிகையில் அவா் இல்லை) தொழிற்சங்கத்தில் இனணைவது, போராடச்செல்வதே கேவலமாக கருதும் யாழ்ப்பாண பூர்சுவா பிரிவின் பூர்சுவாவின் இயல்பான மனித பண்பை மறுதலித்தபடி தொழிற்சங்கத்தை நாசியாக காட்டுவது மா-லெ-மா சிந்தனை எதிர்ப்பின் ஒரு அங்கமே. இப்படிக் காட்டி விட்டால் தொழிற் சங்கங்களின் வர்க்கப் போர் குணாம்சங்களை சிறுமைப்படுத்த முடியும் என்ற அ.மார்க்சின் கற்பிதங்களே.

"ஒரு தமிழ் பெண் பாசிச வன்முறைக்குட்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளாள். ஒரு தமிழ் இளைஞன் அடித்து ரயில் பாதையில் வீசப்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றான்" என்ற அ.மார்க்சின் இனவாதத்திற்கு எதிரான கண்டுபிடிப்பு நகைப்புக்குரியது. இக்கொலைகள் எம்மவர்களின் ஆணாதிக்க சாதித்திமிரில் நடத்தப்பட்டதாகவே தமிழ் பேசும் மக்கள் திட்டவட்டமாக சில ஊகங்களில் நம்புகின்றனர். ஆனால் அ.மார்க்சின் கண்ணாடிக்கு மட்டும் அது தெரிய மறுக்கின்றது. இதை அவருக்கு புரிய வைத்த ஆணாதிக்க முற்போக்குகளுக்கு சபாஸ் பட்டம் கொடுக்கவேண்டும் ஏன்? இதற்கு பின் ஆணாதிக்கம் சாதிவெறி என்பன பல தொங்கிபோய் உள்ளது .

சுவிசில் அது (அது என்பது மூன்றாம் உலகநாடுகள் பற்றிய விபரண சித்திரங்களை) ஒளிபரப்பப்படும் நோக்கம் வேறு. ஒரு சுவிஷ் பார்வையாளருக்கு அது ஏற்படுத்தும் விளைவு வேறு என அ.மார்க்சின் வெளிநாடு பற்றிய சமூக ஆய்வு உள்ளது. இதில் ஒளிபரப்பு செய்தி ஊடகம் முற்போக்காக அ.மார்க்சுக்கு தெரிய, மக்கள் பிற்போக்காக தெரிகிறது.

யாழ்ப்பாண மேல்மட்ட பூர்சுவாவின் கண்ணோட்டமே சுவிஷ்மக்களின் நோக்கத்தை விட வேறுபட்டு அதை பிரதிபலிக்கின்றார். அதையே தான் அ.மார்க்ஸ் மீள ஒப்புவிக்கின்றார். ஐரோப்பாவில் ஒளிபரப்பாகும் விபரணசித்திரங்கள் மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு வெளிவரும் மூன்றாம் உலக சினிமா படங்களையிட்டு எம்மவர்கள் தீவிர எதிர்மனப்பான்மை கொண்டு உள்ளனர் ஏன் எனின் தனது சமூகம் சந்திக்கும் பல்வேறு சமூக அடக்குமுறை இங்கு அவன் முன்னால் கேள்விக்கு உள்ளாகும்போது இவனால் சகித்துக் கொள்ளமுடிவதில்லை. தான் ஒடுக்கப்பட்டவன் என இருந்து கொள்ள அதன் மூலம் சலுகை கோர அனுதாபத்தைப்பெற இவை தடையாக உள்ளதுடன் இதன் மீது கேள்வி கேட்பதை விரும்பவில்லை. இதை பாதுகாக்க விரும்புகின்றான். இதற்கு அ.மார்க்ஸ் வேறு நியாயம் கொடுக்கின்றார். இங்குள்ள ஜனநா.பகவாதிகள், அகதிக்கு உதவுவோர், நீங்கள் உங்கள் சமூகத்துக்கு ஏன் அடக்குமுறையை செய்கின்றீர்கள்? நியாயப்படுத்துகிறீர்கள்? என்ற கேள்வியை சகிக்கமுடியாத வெளிப்பாடுதான், சுவிஸ் மனநிலை பற்றி ஐரோப்பிய மனநிலை பற்றி பேசமுற்படும் கூச்சல்கள். இதைத்தான் அப்படியே அ.மார்க்ஸ் பிரசவித்துள்ளார். மொழி தெரியாத நாட்டில் எம் சமூக ஒடுக்கு முறைகளை (ஆணாதிக்க மற்றும் சாதிவன்முறை போன்றவை) மொழி தெரியாத நாம் விளங்க இந்த விபரணச்சித்திரம் தான் உதவுவது. ஒரு சமூக அக்கறைக்கு ஆய்வுக்கு அடிப்படையாக உள்ளதுடன் புதிய பல தகவல்களையும் எமக்கு தருகின்றது.

அடுத்து "ஒரு நிறுவனத்தில் பணிபுரியக் கூடிய பெரிய அதிகாரிக்கும், கீழ் நிலைகளில் உள்ளவர்களுக்குமிடையில் ஊதிய வேறுபாடு அதிகமில்லை. பெரியவேலை கீழான வேலை என்ற விழுமிய வேறுபாடுகள் அதிகமில்லை. ...... தீட்டு, வருணாசிரமம் முதலியன இல்லாத போதும் அந்த இடத்தில் இனவெறியும் இன அடிப்படையிலான ஒதுக்கலும் அவற்றை ஈடு செய்கிறது. பேருரு அரசியல், நுண் அரசியல், தொடர்புச்சாதனங்கள் இப்படி எங்கு பார்த்தாலும் இன வெறியும் பாசிசமும் தலைவிரித்தாடும் ஐரோப்பிய சூழலில் இடையிடையே சிறு சிறு மனிதாபிமானக் கீற்றுக்களை "ஆட்டோநாம்" எனச் சொல்லப்படும் எதிர் கலாச்சாரக் குழுக்களிடமே நாம் காணமுடிகிறது" என அ.மார்க்ஸ் தனது அரசியல் கண்ணாடிக்கு இசைவாக எதை பொருத்த முனைவகிறார் எனப் பார்ப்போம்

நிறுவனத்தில் மேல்-கீழ் நிலை ஊழியர்களுக்கு இடையில் சம்பள வேறுபாடு இல்லை என்கிறார். இப்படி பொய்யாக ஏன் சொல்ல முனைகின்றார். ஒரு வர்க்கப்போராட்டம இன்றி மேல்- கீழ் என்ற இடைவெளி அமைதியாக பின்நவீனத்துவ உலகமயமாதலில் மாறிவிடும் என்கிறார். அது தான் பொய்யைக் கக்குகின்றார். இதைப் புள்ளிவிபர ரீதியாக பார்ப்போம்.

பிரான்சில் உள்ள 46 லட்சம் குடும்பங்களின் மாதவருமானத்தைப் பார்ப்போம்

| குடும்பம் வீதத்தில் | வருமானம் பிராங்கில் |
|---|---|
| 10 | 3070 குறைய |
| 10 | 3070- 5477 |
| 10 | 5477- 9004 |
| 10 | 9004-10739 |
| 10 | 10739-12653 |
| 10 | 12653- 15001 |
| 10 | 15001- 17921 |
| 10 | 17921- 22389 |
| 10 | 22389-28793 |
| 5 | 28793-47376 |
| 5 | 47376 கூட |

1994 இல் ஆகக்குறைந்த அடிப்படைச்சம்பளத்தை பெற்ற 15 லட்சம் பேர் 1996 இல் 22 லட்சம் பேராக அதிகரித்துள்ளது. அத்துடன் 60 லட்சம் பேர் அடிப்படைச்சம்பளத்தை விட குறைவாக பெற்று வேலையின்றி உள்ளனர். மொத்தமாக அடிப்படைச்சம்பளத்தை அல்லது அதை விட குறைவாக பெறுவோர் 80 லட்சம் பேர் உள்ளனர். இது பிரான்சில் உழைக்கும் பிரிவில் மூன்றில் ஒரு பகுதியாகும். இவர்கள் பரம ஏழையாக உள்ளனர்.

புள்ளிவிபரம் மிகத்தெளிவாக மேல்-கீழ் குடும்பவருமான இடைவெளியை தொடர்ச்சியாக பிளந்து அதிகரிக்கின்றது. 10 வீத குடும்பம் பெறும் 3070 பிராங்கை விட 5 வீதக் குடும்பம் பெறும் 47.376 பிராங்கு இடையில் உள்ள இடைவெளி 15 மடங்கு ஆகும். அதாவது இது குடும்ப சராசரி வருமானம் இதை விட தனிநபர் வருமானத்தில் இந்த மடங்கு மேலும் பல மடங்காக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் பிரான்சில் 500 குடும்பங்களின் சொத்து தனித்தனியே 10 கோடி பிராங்கை விட கூடவாகும்.

கிட்டத்தட்ட உழைக்கும் தகுதியுள்ள பிரிவில் மூன்றிலொரு பங்கு அடிப்படைச்சம்பளத்தை விட குறைவாக பெறுகின்றனர். அதி உயர் பிரிவான 10 வீதம் அடுத்த 10 வீதத்தை தவிர மற்றவர்களுக்கு இடையில் தான் வேறுபாடு குறைவாக உள்ளது. அது $1\frac{1}{2}$, 2, $2\frac{1}{2}$, 3 மடங்காக உள்ளது.

மார்க்சியத்தின் மா-லெ-மா சிந்தனை வழியில் இந்த சம்பளவேறுபாடு முதலாளித்துவத்தின் கட்டமைப்பில் சரியாக உள்ளதை புள்ளிவிபரம் காட்டுகின்றது. அதாவது உயர் மட்ட இடைவெளியை கடக்க நிச்சயமாக ஒரு வர்க்கப்போராட்டம் அவசியம் என்பதையும், இடைவெளி (மேல் - கீழ்) தானாக மறையாது என்பதையும் அ.மார்க்சுக்கு சுட்டிக்காட்ட வேண்டியதாகியுள்ளது. ஏன்எனின் சமுதாயம் வர்க்க வேறுபாட்டால் சுரண்டலுக்கு உள்ளாகி சமுதாயம் பல ஒடுக்குமுறையை இதனால் உருவாக்கியும் உள்ளது. வர்க்கப் போராட்டத்துக்கு வெளியில் மேல் கீழ் இடைவெளி மறையாது மடியாது.

அடுத்து தீட்டு, வருணாசிரமம் இல்லை ஆனால் இன அடிப்படையிலான ஏதோ ஒன்று உண்டு எனக் கூறுவது வெளிநாட்டவன் அவர்களுடன் இணைந்து போராடக்கூடாது என்பதற்காகவே. தீட்டு உள்ள இந்தியாவில் தலித்துக்கள் தனித்து பின்நவீனத்துவ வழியில் போராடவேண்டும் என்று பூர்சுவ பிரிவும், ஏகாதிபத்தியவாதிகளும் கோருவது (தன்னவர் குழு ஊடான செயல் கள வேலை போன்று பல) போன்று, இங்கு தொழிற்சங்கத்துடன் வெள்ளையருடன் இணைந்து வெளிநாட்டான் போராடக்கூடாது என்கிறார். அதாவது நிறவெறி தொழிற்சங்கமும் இனவெறி வெள்ளையனும் அல்லவா இவர்கள் என்று கூறுவது இதற்காகவே. நீ தனியாக தனித்துவமாக சிறுபான்மையாக பின்நவீனத்துவ வழியில் இரு என்கிறார் அ.மார்க்ஸ்.

எல்லாம் இனவெறி பாசிசம் ஆனால் "ஆட்டோநாம்" மட்டும் தான் எஞ்சி உள்ளது என கூறுவது மூலம் அராஜகவாத லும்பன்தனத்தில் இணையுங்கள் போராடவிரும்புவர்கள் என்கிறார். இதன் மூலம் வர்க்கப்போரை தடுக்கமுடியும் என்ற அ.மார்க்சின் கற்பிதக் கனவு தனது சகாக்களும் அவரின் சீடர்களும் காட்டும் வழியில் சீரழிவது எப்படி என்றே ஒழிய வேறு ஒன்றுமல்ல.

ஏன் இந்த ஆட்டோநாம் உடன் இணைந்து வேலைசெய்யும் சிங்கம் என்ற அ.மார்க்ஸ் தனது புத்தகத்தில் அறிமுகம் செய்து அடிக்கடி குறிப்பிடப்படும் நபர் ஜேர்மனிய அரசின் தன்னார்வக் குழுவின் பிரதிநிதியாக பெருமளவு நிதிப்பலத்துடன் வவுனியாவில் அகதிகளுக்கு செயல்படும் ஒரு ஏகாதிபத்திய கைக்கூலியாக உள்ளார். இதுபோல் இன்று பலர் அதன் வழியில் இணைந்து வருகின்றனர்.

அ.மார்க்ஸ் விரும்பும் இந்த அமைப்பும் அதில் வேலை செய்பவர்களும் தமது உதிரித்தன அராஜகவாத லும்பன்தனத்தின் பிரதிவிளைவை இப்படித்தான் காட்டமுடியும். இது எதிர்கால இலங்கையின் முன்னைய சமூக அக்கறைக் குரியவர்கள் பொதுப்போக்காக தன்னார்வ குழுவுடன் இணைந்து செல்வது இன்றைய நிலையில் காணப்படுகின்றது. இதை ஊக்கப்படுத்த, அங்கீகாரம் கொடுக்க அ.மார்க்ஸ் போன்றோரின் கோட்பாடு தேவையாக உள்ளது. அதுதான் தனித்துவம், பிரித்துப்பார்த்தால் என பலவாக பின்நவீனத்துவ தத்துவம் தேவையாகின்றது.

மக்களுக்கு உதவுவதிலும், நீதிவழங்குவதிலும், ஏகாதிபத்திய கைக்கூலியாக இருப்பதில் இருந்து பிரித்துப்பார்க்க கோருவதே பின் நவீனத்துவம் என்ற சாக்கடையும் பின் காலனித்துவம் என்ற சாக்கடையும். இதற்காகவே அ.மார்க்ஸ் கைக்கூலித்தனத்தை நியாயப்படுத்த தீவிரமாக உழைக்கின்றார்.

அடுத்து ஏன் எம்மவர்கள் வெள்ளைக்கனவுடன், தனது குழந்தை வெள்ளையா? அடுத்த வீட்டுக் குழந்தை வெள்ளையா? என மணிக்கணக்காக உப்புச்சப்பு இன்று நேரிலும், போனிலும் அலம்பும் வெள்ளை இனவெறி தமிழனை மிஞ்சியது அல்ல இந்த நாட்டு மக்களின் சிந்தனை. இந்த மக்களின் சிந்தனை இவர்களை விட நிறத்திலும் இனத்திலும் முற்போக்கானது. ஒரு சமூகத்துக்கு இருக்கக் கூடிய

தொடர்ச்சி பக்கம் 31 ல்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் மாபெரும் சக்தியாக உருவாகும்

# சமர் - 25

அரசியற் தத்துவார்த்த புரட்சிகர விமர்சன ஏடு

பக்கங்கள் - 64

28 .08.1999



ஓவியம் - புகழேந்தி

நன்றி சுவடுகள்




'SAMAR'
87 Rue de colombes
92600 Asnieres sur-seine
FRANCE

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்